# வெள்ளிமலை

கார்த்திகை
2011

## வலிகாமம் தெற்கு பிரதேசசபை தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள்



கௌரவ தவிசாளர்
தி. பிரகாஷ்



கௌரவ உபதவிசாளர்
இ. பரமேஸ்வரலிங்கம்



அ. றி. தவப்பிரகாசம்



செ. உதயகுமாரன்



நா. இலட்சுமிகாந்தன்



இ. இராசதுரை



இ. குமாரசாமி



க. கருணைநாயகம்



அ.வி. ஜேசுதாசன்



வ. சிவநாதன்



மூ. நவலோகராஜா



இ. அரிகரன்



ச. சந்திரகுமார்



செ. ஈஸ்வரன்



சி. இராசசேகரம்



த. தேவராஜன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Modern Pcs Systems

No. 18, K.K.S Road,
Chunnakam



Mobil No. 0772500306







சகல விதமான கணனி,
கணனி உதிரிப் பாகங்களும்
பெற்றுக் கொள்ள நாடவேண்டிய இடம்

## Modern Pcs Systems

No. 18, K.K.S Road, Chunnakam


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ




வலிகாமம் பிரதேச வளங்கள், திறன்கள் வெளிக்காட்டிடும் சஞ்சிகை

மலை : 04 கார்த்திகை 2011 வெள்ளி : 11

இனிதினிதாய் எழுந்த உயர் எண்ணமெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச்சாலை
புனிதமுற்று மக்கள்புது வாழ்வுவேண்டில்
புத்தக சாலைவேண்டும் நாட்டில்யாண்டும்
- பாவேந்தர் பாரதிதாசன் -

## வலிகாமம் தெற்கு பிரதேச வாசகர் வட்ட வெளியீடு

இணை ஆசிரியர்கள்
க. சௌந்தரராஜன்
திருமதி இ. கருணாநிதி

ஆசிரியர் குழு
திரு. சு. துரைசிங்கம் (கவிஞர் துரையர்)
திரு. பா. பாலச்சந்திரன்
திரு. சு. ஸ்ரீகுமரன்
திரு. இரா. ஜெயக்குமார்
திரு. சி. ரமேஷ்
திரு. பா. துவாரகன்
திரு. த. அருள்குமரன்

தொடர்புகளுக்கு
வெள்ளிமலை
சுன்னாகம் பொதுநூலகம்
சுன்னாகம்.

அச்சுப்பதிப்பு
கிருஷ்ணா பிறிண்டேர்ஸ்,
டாக்டர். சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

இச்சஞ்சிகையில் வெளியாகியுள்ள
ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே
பொறுப்பாளிகளாவர்.

## மலைமீதிலே

பக்கம்

எண்ணச்சாரல் 02
எங்கே செல்கின்றோம் 03
- த. சண்முகநாதன்
சங்ககாலத்துக்கு முன்னரான ஆடற்கலை 06
- அ. உமாமகேஸ்வரி
கடவுளுக்கு ஓர் கடிதம் 08
- இயல்வாணன்
க.பொ.த உயர்தர பரீட்சையை
வெற்றி கொள்ள - ப. அருந்தவம் 09
ஓங்கி ஒரே குரலாய் - இ. கணேசராசா 10
நீரிழிவு வருமுன் காப்போம் 11
- ந. கிருஸ்ணராசா
மக்கள் சேவையில் வைத்தீஸ்வரக் குருக்கள் 15
- பொ. சண்முகநாதன்
சிறுவர் கதை - பேராசை பெரு நட்டம் 17
- சி. சிந்துஜா
பால(ன்) பாடம் 19
- திருமதி. உதயலதா நவதீசன்
கவிதை - எந்தனூர் கந்தரோடை 22
- "சிற்பி"
முத்துக்குமாரக் கவிராயர் 24
- க. சி. குலரத்தினம்
சன்மார்க்க நடராஜமும் நுழைபுலமும் 28
- மு. பா. துவாரகன்
தமிழறிஞர் புலவர் ம. பார்வதிநாதசிவம் 30
- டாக்டர். வெ. சக்திவேல்
தமிழிலக்கியவரலாறு எழுதுதலில் ஈழத்தறிஞர் 32
- ம. பா. மகாலிங்கசிவம்
- ம. பா. பாலமுரளி
நேர்காணல் - கந்தரோடை திரு. பொ. பசுபதி 36
- த. அருள்குமரன்
மக்கள் வங்கி ஐம்பது ஆண்டுகால
மகத்தான சேவைகள் 41
- க. இராசமனோகரன்
நினைவலைகள் - சு. திருச்செல்வம் 43
நெடுங்கதை - உரப்பை - ந. சிறீஸ்கந்தராசா 46
மாறிவரும் சமூகச்சூழலும் HIV/AIDS 55
- கே. எஸ். சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணச்சாரல்

## *வெள்ளிமலைப் பாதை*

2006ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தேசிய வாசிப்பு மாதச் செயற்பாடாக சுன்னாகம் பொது நூலக வாசகர் வட்ட கையெழுத்துச் சஞ்சிகையாக உருவெடுத்த 'வெள்ளிமலை' மூன்று கையெழுத்துப் பிரதிகளினூடாகப் பயணித்து, 2007 சித்திரை- ஆடி காலப்பகுதியில் முதல் அச்சுப்பிரதியாக அடுத்த கட்டத்துக்கு நகர்ந்தது. வலிகாமம் பிரதேசத்தின் அறிவு, திறன், ஆக்க முன்னெடுப்புக்களை, வளங்களை வெளிக்காட்டும் களமாக வெள்ளிமலை வீறுநடை போட்டது. பிரதேச அனைத்துத்துறை வளர்ச்சிகளுக்கும், ஆக்க இலக்கியத்துறைக்கும், வாசிப்பு மேம்பாட்டிற்கும் இவ் வெளியீடு உறுதுணை செய்யுமென அக்காலப்பகுதியின் வலிதெற்கு பிரதேச சபைச் செயலாளர் நம்பிக்கை வெளியிட்டிருந்தார்.

அதன்வழி, பொழுதுபோக்குச் சஞ்சிகையாகப் பெயர் பெற்றுவிடாமல், மக்களின் வாழ்வியற் செயற்பாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்படும், உள்ளூராட்சி மன்ற நூலகப் பயன்பாட்டாளர்களின் ஆக்க பூர்வ பங்கேற்புகளினூடாக பிரதேச ஆக்கங்கருதிய அம்சங்களை இணைத்துக் கொண்டு, கருத்து வெளிப்பாட்டுக் களமாக 'வெள்ளிமலை' வெளிவந்தது.

இலங்கைப் பத்திரிகை, சஞ்சிகை வெளியீட்டு வரலாற்றில் இப் பிரதேசத்தின் பங்களிப்பு மகத்தானது. இம்மண் தமிழ் மொழியின் இலக்கியத் தவப்புதல்வர்களின் தாய்மண். பல்வேறு அறிஞர்கள், கலைஞர்கள் இப்பிரதேசத்தவராவர். இவர்கள் சம்பந்தமான ஆக்கங்கள், இலக்கியங்கள், இலக்கிய கர்த்தாக்கள் சம்பந்தமான கட்டுரைகள், துறைசார் வல்லுநர்களின் படைப்புக்கள், வளர்ந்து வரும் எழுத்தாளர்களின், மாணவச் செல்வங்களின் ஆக்கங்கள் சஞ்சிகையைத் தொடர்ந்து அலங்கரித்தன. பாடசாலைகள், வங்கிகள், வர்த்தக நிறுவனங்கள், ஆலயங்கள் போன்ற சமூகஸ்தாபனங்கள் சார்ந்த தகவல்களும் ஆக்கங்களும் உள்ளடக்கிச் சஞ்சிகை வெளிவந்தது.

இதழ்களை கால அட்டவணைப்படி வெளியீடு செய்வதில் இதற்கு முன் ஒரு தொய்வு நிலை காணப்பட்டது. தடைக் காரணிகளைக் கண்டறிந்து, தடைகளைத் தாண்டி, சமூக அக்கறைக்குரிய அம்சங்களுடன் புதுவடிவத்தில் உன்னதமாக வெளிவர வேண்டுமென்ற ஊக்குவிப்பை, வலி தெற்கு பிரதேச சபையின் மக்கள் பிரதிநிதிகளான கௌரவ தவிசாளர் திரு. தியாகராசா பிரகாஷ் அவர்களும் மதிப்பிக்குரிய உறுப்பினர்களும் வழங்கி வருவதனால் இவ்வாண்டு தேசிய வாசிப்பு மாதத்தை அடுத்து வெளிவரும் இவ்விதழ் புதுப்பொலிவு பூண்டு புது அம்சங்களை உள்ளடக்கி வெளிவந்து உங்கள் கரங்களில் தவழ்கின்றது.

வாசகர்களின் உற்சாகமூட்டும் ஆதரவும் விமர்சனக் கருத்துக்களும் அன்புடன் வரவேற்கப்படுகின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே செல்கின்றோம்?

த. சண்முகநாதன்

தமிழர்களாகிய நாம் எம்மைப் பற்றியும் எமது பாரம்பரியம் பண்பாடு பற்றியும் பேசுவதில் ஈடுஇணையற்றவர்கள். கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய மூத்தகுடியென்றும், சேரன் செங்குட்டுவன் சுந்தர பாண்டியன், செண்பக பாண்டியன் பரம்பரை என்றும், கற்பின் செல்வியாம் கண்ணகிக்குச் சிலை எழுப்ப கனக விஜயன் தலையிலே கல்சுமந்த இனம் எம்மினம் என்று அலங்காரமாக அடுக்கு மொழியிலே பேசுவதிலும் நாம் ஒப்பாரும் மிக்காருமற்றவர்கள். என்றாலும் இவை அனைத்தையும் பேசி என்ன? நாம் எங்கே போகிறோம் என்பதை அறிந்தும் அறியாது தெரிந்தும் தெரியாது; கண் இருந்தும் குருடராய் காதிருந்தும் செவிடராய்; நடைப்பிணங்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்று எண்ணி நாம் என்றாவது சிந்தித்ததுண்டா? அன்று ஒரு புலவர் பாடிய பாட்டொன்று தான் இப்போ ஞாபகத்திற்கு வருகிறது. "பாமரராய் விலங்குகளாய் உலக னைத்தும் இகழ்ச்சி சொலப்பான்மை கெட்டு நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?" என்று கேட்டானே அப்புலவன். அவனின் சொற்களின் கருத்தை என்றும் கவனத்தில் எடுத்தோமா? இல்லையே. இருபதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் வாழ்ந்த ஒரு கவிஞன், "மனிதனாக வாழ மட்டும் மனிதனுக்கு தெரியவில்லை" என்றான். பாரதி கூறிய பான்மை இக்கவிஞன் கூறிய மனிதம் என்பவை பற்றி நாம் அறிய முற்பட்டோமா? இல்லை! இல்லை!! இல்லை!!!. இதனால் தான் நாம் எங்கே போகிறோம் என்று சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

பழந்தமிழ் மக்கள் தங்கள் வாழ்வை அக வாழ்வு புற வாழ்வு எனப் பகுத்து வாழ்ந்தார்கள். அக வாழ்வு என்பது ஒத்த நலன், ஒத்த குணம், ஒத்த கல்வி முதலியனவுடைய ஒருவனும் ஒருத்தியும் கூடி நடாத்தும் இல்வாழ்வாகப் பரிணமித்தது. அக வாழ்வு இன்பமானதாக இயக்க வேண்டி பொருள் தேவைப்பட்டது. பொருள் தேடிச் செல்லும் ஆண்மகன் பொருளைக் கொண்டு வந்து தன் அன்புக்கினியவளிடம் கொடுத்து அன்புடன் அகமகிழ்ந்து வாழ்ந்தான். இந்த நிலை இன்று சற்று வேறுபட்டு பரிணாம மாற்றம் பூண்டு காணப்படுகிறது. தனது பொருள் தேடும் வேட்கையால் வேற்று நாடு செல்லும் ஆண்மகன் பல கஷ்டங்களை எதிர்நோக்கி உழைத்து அனுப்பும் பணத்தில் சொகுசு வாழ்க்கை நடாத்தும் அக்குடும்பத்தவர் அந்தப்பணத்தைக் கண்டு, அதனால் செல்வமும் பேணாது சொல்வதும் பேணாது வெல்வதே கருமமென்று உழன்று வெண்பகை தேடும் காட்சியை அல்லவா நாம் காண்கிறோம். அந்த ஆண்மகன் அனுப்பும் பணத்தை பேண வழியறியாது நிற்கும் இம் மாற்றம் வந்த பணம் மீள செல்லவும் கூடும். ஏனென்றால் 'அது செல்வம் என்பதால் செல்வோம் என்னும் நிலையினை எய்தும்' என்பதை மறந்து எங்கெல்லாம் செல்கிறார்கள். செல்வம் நிலையாமை கொண்டது. அதனை நிலைக்க வைக்க மறக்கின்றார்கள்

பண்டைத்தமிழர் அகவாழ்வில் பெண் தனக்குரிய ஒருவனை தனக்குரிய தலைவனாக தானே தெரிந்தெடுக்கும் உரிமை பெற்றிருந்தாள். இந்த உரிமை சுயம்வரமாகக் காணப்பட்டது. இதனைவிட ஒத்த குணம், ஒத்த நலன் ஒத்த கல்வியை கொண்ட இளைஞனும் பெண்ணும் பிறர் அறியா வண்ணம் காதல் தொடர்புகளை வளர்த்தனர் என்பதைப் பண்டைத் தமிழர் பண்பாடு என்ற நூல் கூறுகிறது. பிறர் அறியா வண்ணம் வளர்க்கப்படுவது காதலாக இருந்தபோதும் தலைவியின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமான தோழி அதனை அறிந்து அதன் நேரிய வாழ்விற்கு பலவழிகளிலும் உதவுபவளாக காணப்பட்டாள். அங்கு காதல் மட்டும் களிநடம் புரிந்தது. அதனாலேதான் உண்மைக்காதல் புனிதமானது; மாசற்றது எனப்பட்டது.

இந்தக் காதல் இக் காலத்தில் "பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்ற நிலையில் கோலத்தில், குணத்தில் மாற்றம் கண்டு எமது கலாச்சார பாரம்பரியங்களை தகர்க்குமளவிற்கு வளர்ந்துவிட்டது. காதல் என்ற போர்வையில் பெரும்பாலான இளைஞர்களும் யுவதிகளும் கண்போன போக்கிலே கால்களும் போக, அதன் போக்கிலே மனமும் போக தம்மைச் சீரழிக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்ற அருங்குணங்களை வேண்டாம் என ஒதுக்கும் யுவதிகள் "அந்தச் சுகத்தை நான் அறியக் காட்டாயோ" என நிஜ வாழ்விலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துடிக்கிறார்கள். இன்றைய அனைத்துக் காதல் உள்ளங்களும் இவ்வாறு செயற்படுகின்றன எனக் குற்றம் சொல்வதாகக் கருதக்கூடாது. இவர்கள் எங்கே செல்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டவே இவை எடுத்தாளப்படுகிறது. இதனால் யாழ்ப்பாணம் ஒரு கட்டுப்பாடற்ற இளம் சமுதாயத்தைக் கொண்டு காணப்படுவதனை இங்கு சொல்லாது இருக்க முடியாதுள்ளது. யாழ் மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் அவர்கள் தன்னால் பெறப்பட்ட இத்தகைய புள்ளிவிபரங்கள் பற்றிய சில அதிர்ச்சி தரும் தகவல்களை அண்மையில் வெளியிட்டார்கள். அதில் இளவயதுத் தாய்மை, முறையற்ற பிரசவங்கள், இளவயது விதவைகள் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாடான சமூகம் தன் பெருமையை இழக்க முடியாது என்பதை இன்றைய இளைஞர் யுவதிகள் அறியாது எங்கு தான் செல்கிறார்களோ தெரியவில்லை. ஒரு கட்டுப்பாடற்ற சமூக பாரம்பரியங்களையும் உயர் வாழ்வியல் விழுமியங்களையும் உதாசீனம் பண்ணும் நிலை காரணமாகத் தண்டிக்கப்படும் பெண்கள் பல பாதிப்புக்களை எதிர்நோக்குகிறார்கள் என்பதனை ஒரு மனித உரிமை அமைப்பில் பணிபுரியும் நான் அனுபவ ரீதியாக அறிகிறேன். தாபரிப்புப் பணம் பெறவும், விவாகரத்து பெறவும் இதனைவிடக் குடும்பப்பிரச்சனை, பிரிவு காரணமாகவும் பெண்கள் தீர்வுகளைப் பெறுவதற்கு வருவதிலிருந்து நாம் எங்கே செல்கின்றோம் என்பதனை ஊகிக்க முடிகிறது. இவர்கள் நாம் உடுப்புக்களை மாற்றி மாற்றி அணிவதுபோல் வாழ்வியல் போக்கையும் மாற்றி மாற்றி அமைக்கலாம் என்று நம்புகிறார்கள். இன்று "ஒருத்தி நெஞ்சம் ஒருவனுக்கே" என்ற நிலை மாற்றம் கண்டு வருவதைக் காணும்போது தமிழர் பேணிய கற்பு களங்கம் காண்கிறதே என்று ஏங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்தக் கற்பு நிலை இல்லை அல்லது தேவையற்றது என்ற கருத்து முக்கியத்துவப்படுத்தப்படுமேயானால் நாம் ஒரு மந்தைக் கூட்டமாக, அறிவற்றவர்களாகப் பகுத்துணரும் பண்பற்றவர்களாக வாழத் தலைப் படுகிறோம் என்பதே பொருள்.

சீரான வாழ்விற்கு - வையத்துள் வாழ்வாங்கு வாழப் பொருள் வேண்டும். அதனாலோ என்னவோ 'பொருளில்லார்க்கு இவ்வுலகமில்லை' என்றார் வள்ளுவர். பொருளை நல்ல வழியில் தேடிச்சேர்ப்பதே சிறப்பு. தேடப்படும் பொருள் உழைப்பினால் வருவதே சாலச்சிறந்தது. பொருளைக் கஷ்டப்பட்டுத் தேடும்போது அதன் பெறுமதியை அனுபவ வாயிலாகக் காண முடிகிறது. அதனால் அப்பொருளைப் பேண வேண்டும்.பாதுகாக்க வேண்டுமென்று விரும்புகின்றோம். எமது மக்களுள் சிலர் செய்த பூர்வ புண்ணியம் காரணமாக, அம்மக்களது உறவினர்களோ, வழித்தோன்றல்களோ பிறநாடு சென்று பொருளீட்டி இவற்றைத் தம் உற்றார் உறவினர்களுக்கு அனுப்புகிறார்கள். இந்த உறவினர்களைப் பொறுத்தவரை அவர்கள் உழைக்காமல் செல்வம் பெறுகிறார்கள். இந்த உழைக்காமல் ஈட்டப்பட்ட செல்வத்தின் பெறுமதி பலருக்கும் புரியாத காரணத்தினால் அதை அநியாயமாகச் செலவு செய்கின்றார்கள். அத்துடன் அப்பணம் காரணமாக பிள்ளைகள் துர்ப்பழக்கங்களை பழகும் சந்தர்ப்பங்களைப் பெற்று அதனால் சீரழிகின்றார்கள். அப்பணம் காரணமாக மது மங்கை வயப்பட்டு சச்சரவுகளில் ஈடுபட்டு அழியும் போக்கையும் நாம் காண்கிறோம். மகாத்மா காந்தியடிகள் உலகம் கண்ட பெருந்தவறுகள் என ஏழு விடயங்களைக் கூறி அதனுள் முதலாவதாக உழைக்காது ஈட்டப்பட்ட செல்வத் தினை வைத்தார். அந்த ஏழு தவறுகள் காரணமாக உலகம் கெடும் போக்கில் போகின்றதென்று கண்டுகொண்டார்.

அந்த நாட்களில் கூட்டுக் குடும்ப வாழ்வே அமைந்திருந்தது. அங்கு வீட்டில் முதியோர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு அவர் அனைத்து வழிகளிலும் அக்குடும்பங்களை வழிநடாத்தினர். அவ்வாறு வழி நடாத்தும்போது ஒற்றுமை, இணக்க மனப்பான்மை, ஈதல், இசைவுபட வாழ்தல், ஏனையோரின் நன்மை தீமை என்பவற்றில் பங்கெடுக்கும் நிலைமைகள் காணப்பட்டன. ஆனால் இன்றோ சனப்பெருக்கம் காரணமாக கூட்டுக் குடும்ப முறை அடிபட்டுப் போய்விட்டது. அதனால் தனிக்குடும்ப முறை காணப்படுகிறது. அந்தப் பொதுப்பண்புகளை ஒதுக்கிவிட்டு தன்னைப் பற்றிச் சிந்திக்கும் போக்கே இன்று காணப்படுகிறது.

நாம் ஐந்து வயதாகும்போது விஜய தசமியில் எமது பிள்ளைக்கு நாட்பாடம் புகட்ட ஆரம்பிக்கிறோம். அன்றைய நாட்களில் பாடசாலை செல்ல ஆரம்பிக்கும் பிள்ளையொன்று ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலான நீதி நூல்களை என்பவற்றை முதலில் படிக்கும் வழக்கம் பின்பற்றப்பட்டது. அவ் வழக்கம் சமூக விழுமியங்களைக் காக்கும் தன்மையுடனிருந்ததால் பெற்றோர் தாய் தந்தையினருக்கு மதிப்பளித்து அவர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டனர். மாதா,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிதா, குரு, தெய்வம் என எமது குருநாதர்களை நாம் போற்றினோம். அவர் சொற்கேட்டு நடந்து நல்லன எல்லாம் பெற்றோம். இன்று அத்தகைய பாட விதானத்திற்குப் பாடசாலைகளில் இடமில்லை. அதனால் நாம் போற்றிய பண்புகளுக்கு இன்று இடமில்லை. பொதுப்போக்குவரத்துக்களில் ஒரு முதியவருக்கு இருப்பிடம் கொடுக்க யாருமில்லை. ஒரு கர்ப்பிணியை இருக்கையில் இருத்த யாரும் முன்வருவதில்லை. மனிதம் மாண்டுவிட்டது. எளியோருக்கு உதவி செய்ய வலியோர் இல்லை. இல்லாதவர்க்கு இரங்க யாரும் இல்லை. இவை அனைத்தும் எமது பிரதேசங்களில் மட்டுமே. வேண்டுமாயின் சிங்களப் பிரதேசங்களில் பொதுப் போக்குவரத்தில் முதியோர், வலுவிழந்தோர், கர்ப்பிணிகள் எவ்வாறு இருக்கைகளில் அமர்த்தப் படுகிறார்கள் என்பதைப் பாருங்கள். இது நான் அனுபவ வாயிலாகக்கண்ட உண்மைகள். ஏழைகட்கு இரங்குவதும் அங்கு கூட முக்கியமாக போயா தினங்களில் அனைத்து ஜீவராசிகளிடமும் ஜீவ காருண்ணியம் பேணுமுகமாக நாய்கள், பூனைகள், பறவையினங்களுக்கும் பாற்கஞ்சி காய்ச்சி உண்ணக் கொடுக்கும் வழக்கம் இன்றும் உண்டு. பிரதி போயா தினங்களிலும் கிராமங்களில் இவ்வாறான சிறப்புக் கைங்காரியங்கள் இடம்பெறும் போது நாம் என்ன செய்கிறோம் என்று சற்றுச் சிந்திப்போமா? எமது தாய், தந்தையரை வயோதிப காலத்தில் வயோதிப இல்லங்களுக்கு அனுப்பிப் பராமரிக்க முயலுகிறோம். ஏழை எளியவர்கட்கு உதவுவதினின்றும் விலகி நிற்கிறோம். அடுத்த வீட்டுக்காரன் ஏதோ காரணத்திற்காக துக்கப் பட்டிருக்க நாம் பிறந்த நாட்கொண்டாட்டம் நடாத்துகிறோம். இன்னும் ஒருபடி மேலே சென்று முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செய்ய அழைக்கப்படும்போது அதில் கலந்து கொள்ள மறுத்து டி.வி யில் பார்த்து இன்புறுகிறோம். அங்கு பாதிக்கப்பட்ட குடும்பங் களுக்கு உதவுங்கள் என்று எம்மை சமூக அமைப்புக்கள் அழைக்கும்போது இசைக்கோஷ்டி களையும், மேளக் கோஷ்டிகளையும் பல ஆயிரம் ரூபா கொடுத்து அழைத்துப் போட்டித் திருவிழா செய்கிறோம்.

பார்த்தீர்களா நாம் எங்கே போகிறோ மென்று? நாம் எமது சமயம் கூறும் வழியில் வாழ மறுத்து அதர்ம வழியில் செல்கிறோம். இதனால் நாம் எங்கே செல்கிறோம் என்று யாரையும் கேட்க முடியாதவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் காடு பற்றி எரியும்போது சந்தன மரம் பிற நீங்கல் இல்லையே. நாம் எம்முள் முட்டி மோதுகிறோம். யதார்த்த சிந்தனைகளுக்குப் பதிலாக தன் முனைப்பான சிந்தனைகளைக் கொண்டு வாழத் தலைப்பட்டு விட்டோம். இதன் முடிவு..... அழிவு. இதிலிருந்து எம்மைக் காக்கக்கூடிய ஒருவர் உள்ளார். அவர் எமது இறைவன் தான். ''யாரோடு நோவேன் ஆர்க்கெடுத்துரைப்பேன் ஆண்ட நீரருள் இல்லை யானால்'' என்பது மணிவாசகர் வார்த்தை. ஆண்டவன் அருள்பெற மனச்சுத்தம் வேண்டும். அந்த மனச்சுத்தம் பெறுவதற்குத் தூய சிந்தனை வேண்டும். அதற்காக நாம் மந்தரை போன்றோரின் போதனைகளைக் கேட்கலாகாது. வஞ்சக சகுனி போன்றோரின் சேர்க்கை எமக்கு ஆகாது. இவற்றை நாம் கருத்தில் எடுத்து எமது - வாழ்வை சிந்தனையை - வளம்படுத்துவோமாக. ■

**நினைவலைகள்** 45ம் பக்கத் தொடர்ச்சி....

உயரம் இருக்கும். தொங்க விடப்பட்டு இருக்கும் போது வாழைத் தண்டு நிலத்துடன் அல்லது நிலத்துக்கு சற்று உயரத்தில் இருக்கும். பழங்கள் பெரியனவாகவும், மஞ்சல் நிறத்திலும் பார்ப்பதற்கு அழகாகவும், ரம்மியமானதாகவும் இருக்கும். பக்கத்தில் செல்லத்துரை தேனீர்க்கடையொன்று சிறியதாக இருந்தது. இதில் பகோடாவும் பருப்பு வடையும் மிகவும் பிரபலமானது. இளைஞர்கள் இங்குதான் பகோடா வாங்கி உண்பார்கள். பருப்பு வடை மிகவும் பெரியதாகவும் இறுகியதாகவும் இருக்கும். மேலும் சிறியளவில் தேனீர்கடைகள் சில இருந்தன. பிரபல்யமானவையாக இல்லை. சுன்னாகம் மக்கள் இக் கடைகளில் தேனீர் அருந்துவதை வயதானவர்கள் விரும்புவதில்லை. மேலும் களைப்பினால் இக்கடைகளில் தேனீர் அருந்தினால் மற்றவர்கள் அவரை சற்றுக் குறைவாகவே பார்ப்பார்கள். உறவினர்கள் அவரைப் பேசுவார்கள். அக்காலத்தில் தூரம் துலைக்குப் போனாலும் வீட்டில் வந்துதான் தண்ணீர் அருந்துவார்கள். அப்போதும் சில வீடுகளில் தேநீர் அருந்தும் வழக்கம் குறைவாகவே இருந்தது. அரிசி வடித்த கஞ்சி, பழந்தண்ணீர், மோர் முதலிய வற்றைத் தான் தாகத்துக்கு அருந்துவார்கள். இங்குள்ள இளைஞர்கள் அக்காலத்தில் கையில் காசு கிடைத்தால் இங்குள்ள தேநீர் கடைகளில் தேநீர், வடை, சுசியம், பகோடா முதலியவற்றை ருசித்து உண்பார்கள். அவர்களும் யாரும் பார்க்கின் றார்களா என்று அவதானித்துக்கொண்டே தேநீர் கடைகளில் உண்ணச் சென்று வருவார்கள். உறவினர்கள் யாராவது கண்டால் வீட்டில் அவர்களுக்கு பிரச்சனைகள் ஏற்படும். கண்டிப்புகள், தண்டனைகள் கிடைக்கும். நல்ல பிள்ளைகள் தாய் தந்தையரின் உறவினரின் கண்டிப்புக்கள் தண்டணைகளுக்குப் பயந்து தேநீர்க்கடைப்பக்கமே போக மாட்டார்கள். சில இளைஞர்கள் காசு கொடுத்து பலகாரங்களை வாங்கி வெளியில் மறைந்து உண்பார்கள். ஏனெனில் தாய் தந்தையரோ உறவினர்களோ பார்த்தால் தண்டணைகள், கண்டிப்புக்கள் கிடைக்கும் என்ற பயத்தினால்.

நினைவலைகள் இன்னும் தொடரும்.........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்ககாலத்திற்கு முன்னதான ஆடற்கலை

திருமதி. அ. உமாமகேஸ்வரி B.FA
உடுவில் தெற்கு,
மானிப்பாய்.

மனித வாழ்க்கையின் ஆரம்ப முதலே ஆடலும் இசையும் அவர்களைப் பின்னிப் பிணைந்திருந்தமையை மானிடவியல் ஆய்வாளர்களின் ஆராய்ச்சிகளின் மூலம் தெரிந்து கொள்கிறோம். பிறந்த நேரத்தில் குழந்தை அழுகின்ற ஓசை இசையாகவும், அந்த அழுகையின் போது அசையும் உடலின் நிலை நடனமாகவும், அந்தக் குழந்தையின் உருவமே ஓவியமாகவும் பெற்ற தாய்க்கு முக்கலையின் அங்கமாகத் தெரிகிறது. கலைகள் மனித வாழ்வோடு இணைந்திருப்பதை நாட்டியக் கலையின் லௌகீக வரலாறு எடுத்துக் கூறுகின்றது. குறிப்பாக கற்கால மக்கள் வேடர்யுக, இடையர்யுக மக்கள் சூரியன், வானம், நிலம், பெருமரங்கள் போன்ற இயற்கையினை வழிபட்டுத் தம்முடைய தேவைகளைத் தாமே நிறைவேற்றிக் கொண்டனர். பரிபாஷைகளோ, வடிவங்களோ இல்லாத நிலையில் தமது கருத்துப் பரிமாற்ற ஊடகங்களாக கண், கை, தலை, கால் என்பவற்றையே பயன்படுத்தினர். இத்தகைய கருத்துப் பரிமாற்றங்கள் மகிழ்ச்சியான சந்தர்ப்பங்களில் சற்று அதிகமாகப் பயன்படுத்தப்பட்டது. அதாவது தமது வெற்றியையோ, மகிழ்ச்சியையோ வெளிப்படுத்த துள்ளிக் குதித்தும் கூக்குரலிட்டும் அசைவை வெளிப்படுத்தினர். எதுவித வரையறைக்கும் உட்படாத இந்தக் குதித்தாடும் கூத்து அவர்களின் கற்பனைக்கும், கட்டுப்பாட்டிற்குள்ளும் அடங்கி ஒரு சந்தத்தோடு வழி நடத்தப்பட்டு ஆடலும், இசையும் தோற்றம் பெற்றன. இதனை ஆடலிசை பற்றிய ஆரம்ப நிலை என்று கூறலாம். இவ்வாறாகத் தோற்றம், வளர்ச்சி பெற்ற ஆடல், இசை வரலாற்றுக் காலத்தின் முன்னும் பின்னும் எத்தகைய நிலைப்பாட்டில் இருந்தது என்பதை சான்றுகளும் எடுத்துக் காட்டுகின்றன.

ஆடற்கலையின் பரிணாம வளர்ச்சி பற்றிப் பார்க்கும் போது அனேகமாக சங்கம், சங்கம் மருவிய காலங்களில் இருந்தே ஆரம்பிப்பது வழமை. பொதுவாக எந்தத்துறை சார்ந்த ஆய்வுகளை மேற்கொள்வதற்கும் ஆரம்பகால மக்கள் வாழ்ந்த சிந்து சமவெளி காலத்தையே நோக்குவர். கி.மு 2500 - 1500ம் ஆண்டளவிலான காலப்பகுதி சிந்து வெளிக்காலம் என்பர். ஆரம்ப திராவிட இனக் குழுக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்களை மொஹஞ்சதாரோ, ஹரப்பா ஆகிய நகரங்களில் இடம் பெற்ற அகழ்வாய்வுகள் மூலம் அறியலாம். இங்கு கிடைக்கப்பெற்ற இலட்சினைகள், படிமங்கள், மனித உருவங்கள் என்பவற்றின் அடிப்படையிலே இங்கு வாழ்ந்த மக்களின் சமயம், நகர அமைப்பு, வாழ்க்கைமுறை, கலை, கலாச்சாரம் என்பவற்றைப் பற்றி அறிந்து கொள்ளலாம். இவ்விரு பெரு நகரங்களிலே மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கிடைத்த மண்ணினாலான நடன உருவங்கள், வெண்கலத்தாலான நேர்த்தியான நடனமாடும் சிலை என்பன பெண்கள் ஆடல் புனைந்தமையை எடுத்துக்காட்டுகிறன. இந்த நடனமாது கைநிறைய வளையல்கள் அணிந்திருந்ததாகக் கூறப்படுகிறது. மேலும் இக்காலத்தில் கிடைக்கப்பெற்ற இலட்சனைகளிலே ஒருவர் மேளம் அடிக்க சிலர் சூழ்ந்து ஆடுவது போன்று பொறிக்கப் பட்டிருப்பதைக் காணலாம். அகழ்வின் போது மண், மரம், உலோகம் போன்றவற்றிலான இசைக் கருவிகளும் கிடைக்கப்பெற்றதாகக் கூறப்படுகிறது. இது மட்டுமன்றி பொம்மலாட்டக்கலை நிலவியதற்கான ஆதாரங்களும் கிடைத்துள்ளன. இவ்வாதாரங்கள் சிந்துவெளிக் காலத்தில் நடனமும் இசையும் மக்கள் வாழ்வில் இணைந்திருந்தமையை எடுத்துக்காட்டுகின்றன.

இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதங்களிலிருந்து ஐந்தாவது வேதமாக நாட்டிய வேதம் உருவாக்கப்பட்டதாக நாட்டியத்தின் புராண வரலாறு கூறுகின்றது. இருக்கு வேதத்திலிருந்து பொருளையும், யசுர் வேதத்திலிருந்து அபிநயத்தையும், சாமவேதத்திலிருந்து இசையையும், அதர்வண வேதத்திலிருந்து ரஸங்களையும் எடுத்து பிரம்மா நாட்டிய வேதத்தை ஐந்தாவது வேதமாகத் தொகுத்தார் என்பர். வேதநூல்களில் கலைகள் சம்பந்தமான செய்திகள் பல கூறப்பட்டுள்ளன. வேதகாலம் பொதுவாக முன்வேதகாலம், பின் வேதகாலம் என இரண்டு பிரிவாக நோக்கப்படுகின்றது. இதில் இருக்கு வேதகாலத்தினை முன்வேதகாலம் என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனைய வேதங்களின் காலத்தைப் பின்வேதகாலம் எனவும் கூறுவர். முன்வேதகால ஆண்களில் போர் வீரர்கள், போர் நடவடிக்கைகளில் ஈடுபட்டமையையும், பெண்கள் இசையிலும், நடனத்திலும் முக்கிய பங்காற்றியதையும் அறிகின்றோம். பின்வேதகாலத்துச் சமூகநிலை முன்வேதகாலத்துச் சமூகநிலையிலிருந்தும் சற்று வேறுபடுவதைக் காணலாம். அதாவது நடர் (நடனம் ஆடுபவர்) களின் நடனங்களும், இசைக்கலைஞர்களின் பாடல்களும், பக்க வாத்தியப் பாவனைகளும் அதிகமாக இடம்பெற்றிருந்தன. இக்காலத்தில் நடர்கள் - சைலுஷர் எனவும், இக்காலத்தில் இசைக்கப்பட்ட பாடல்கள் 'கதா' எனவும், (பிற்காலத்தில் இதிஹாசங்கள்) வீணைவாசிப்பவர்கள் வீணாகாதின் எனவும் அழைத்தனர். மக்கள் கூடும் பொது வைபவங்கள், விழாக்களில் இசையும், நடனமும் இடம்பெற்றதை அறிகின்றோம். பின்வேதகாலத்திலே நடைமுறையிலிருந்த தொழில்முறைகள் கல்விமுறைகளில் "தேவஜன வித்தியா" ஒன்றாக இருந்தது. அதாவது தேவஜன வித்தியா என்பது இசை, நடனம், புராணம் பற்றிய கல்வி எனப்படுகிறது.

வேதகாலத்தை தொடர்ந்து ஆகமங்களில் இசை, நடனம் பற்றிய செய்திகளைப் பார்ப்போமாயின் காமிகாகமம் - உத்தரபாகம் பகுதியிலே சோடசோபசாரம் எனப்படும் கீதம், வாத்தியம், நிருத்தம் என்பன வழிபாடுகளில் இடம்பெற வேண்டும் என்று கூறப்பட்டிருப்பதைக் காணலாம். எனினும் ஆகமங்கள் கிறிஸ்துவுக்கு பின்னரான காலப்பகுதியில் தோற்றம் பெற்றன என்னும் கருத்தும் நிலவுகின்றது.

மகாபாரதம், இராமாயணம் ஆகிய இருபெரும் இதிஹாஸங்களும் 'கதா' பாடல்களாகப் பலகாலம் இசைக்கப்பட்டு வந்தன. இவ்விரு இலக்கியங்களிலும் ஆடல், இசைபற்றிய செய்திகள் ஆங்காங்கே இருக்கின்றன. மகாபாரதத்திலே இராஜசூய வேள்விக்கு வந்திருந்த அந்தணர்களை நடனமாதர், வாத்தியக் கலைஞர்கள் மூலம் மகிழ்வித்தமையைப் பற்றி அறிகின்றோம். மேலும் 'பக்ர' என்னும் நடிகனின் சிறப்புக்கள் பற்றிய செய்திகளும் காணப்படுகின்றன. அத்துடன் தசரதன் நடத்திய குதிரை வேள்வி, பரத்துவாச முனிவரின் ஆச்சிரமத்தில் பரதனது சேனைக்கு அளிக்கப்பட்ட விருந்துபசாரம் போன்ற நிகழ்வுகளில் நடனமாதர் வருவிக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டமையை இராமாயணம் கூறுகின்றது. இராவணனை இராமன் வென்றமையைப் பாராட்டி ரம்பை, ஊர்வசி, மேனகை, திலோத்தமை, பஞ்சசூட போன்ற ஆடல் நங்கையர்கள் மகிழ்ச்சியால் ஆடிய செய்திகளும் உண்டு.

தொடர்ந்து மௌரியர் காலம் கி.மு324 - கி.பி 325 வரையான காலப்பகுதியாகும். இக்காலத்தில் பௌத்த மதமும், சமண மதமும் மேன்மை அடையத் தொடங்கியிருந்தன. இதனால் இம்மதங்கள் போதிக்கும் தர்மமே பின்பற்றப்பட்டன. இக்கால உற்சவங்களின் போது இசை, நடனம், வாத்திய இசை என்பன பயன்படுத்தப்பட்டன. இக்காலத்தில் நிலவிய நாடகங்கள் பற்றி பதஞ்சலியின் யோக சூத்திரம் கூறுகிறது. கௌடில்யர் எழுதிய அர்த்த ஸாஸ்திரத்திலே அரசு நடனக்கலைகளுக்கு ஆதரவு அளித்தமை, களியாட்டங்களுக்கு வரி விதித்தமை, நடன அரங்குகள் இருந்தமை, பெண்களுகென்று தனியான அரங்குகள் கட்டப்பட்டமை போன்ற பல செய்திகள் காணப்படுகின்றன.

இவ்வாறாக ஆடற்கலையின் ஆரம்ப வரலாற்றினை கிறிஸ்துவுக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து அறிய முடிகிறது. இதே தலைப்பில் ஆழமாக ஆராயும்போது இன்னும் பல அரிய தகவல்களைப் பெற முடியும் என்பது திண்ணம். ■

## வாழ்வோம்

ஏகராஜ்

வாழ்க்கை என்பது வழுக்கு மரம்
வாழ்தல் என்பது அற்புதக்கலை
வாழ்வு தந்தவரிருவராயினும்,
வாழக்காட்டியோர் பலரேயாவர்
வாழ்வு புரியும் போகப் போக
வாழ்நாள் போகும் அதற்கு முன்னே
இன்ப வாழ்வு சிறிது நேரம்
இறுதி வரைக்கும் அலைக்கும் உலைக்கும்
துன்பம் தொடர்ந்து வந்து நிற்கும்
தூரத்தத் தூரத்த தொடரும் வாழ்வில்
எந்த வகையிலும் வாழ்வு வேண்டும்
ஏறி இறங்கிப் பார்த்த பின்பும்
மாறி ஆறி மயங்கிய பின்பும்,
தேடி ஓடும் மாய வாழ்க்கை
இதுதான் வாழ்வின் உலக நியதி!
உன்னைத் தப்பி ஓட விடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவியரங்கில்........

# கடவுளுக்கு ஓர் கடிதம்

இயல்வாணன்

உள்ளக் கமலமதில் உறையு மலர்மகளின்
அள்ளக் குறையா அருளதனை – வெள்ளமதாய்
மேனி சிலிர்த்திருக்க மெய்யுண்ணும் பரவசத்தை
தாநீ என்றும் எனக்கு!

வேங்கட மலைமுதல் வெண்ணுரைக் குமரியில்
தீங்கெழில் செய்தமிழ் எந்தமிழே!
பூங்குழலார் மொழி போலிள மென்மையும்
பொலிந்திடு நன்மொழி எந்தமிழே!
ஆங்கொரு பாரதி ஆர்த்திடு கவிதையில்
அருவியாய் பொழிந்ததும் எந்தமிழே!
தேங்கவி கம்பனும் வள்ளுவன் ஔவையும்
திகட்டிடக் கவிதந்த எந்தமிழே!
உனக்கென் வணக்கம்.

செந்தமிழும் ஆற்றொழுகச் செப்பிடுநல் லாங்கிலமும்
அந்தமிலா இறை போற்றுஞ் செந்தண்மை
கொண்டவரே! கவித் தலைவ! வணங்குகிறேன்
சிந்துகவி தந்திடவே வந்துள நம் கவிஞர்காள்!
வந்தமர்ந்து நாம் சொல்லும் வளர்கவிதைத் தேன்
மாந்தும் சிந்தைமிகு அவையோரே!
வணக்கங்கள் உமக்கென்றும்!

கனகதைகள் காதறிந்து நெஞ்சடைக்க
பூட்டிவைத்த இதயமடைதனைத் திறந்து
நினைவிருந்த விடயங்கள் யாவும் கோர்த்து
நித்தியனுக் கோர்மடலை எழுதுகின்றேன்!
மனதிருந்த விடயமெலாம் பலருக் கெழுதி
பதில் தேடிப் பார்த்திருந்து களைத்து விட்டேன்!
எனதருமைக் கடவுளே! நீ உண்மையானால்
என்மடலுக் குன்பதிலை அனுப்பி வைப்பாய்!

நேற்றொரு தாய் வழிநீள அழுதழுது
நிகழ்ந்ததொரு அநியாயம் பற்றிச் சொன்னாள்
போற்றி வளர்த்த தன்தனயன் போரின் தீயில்
பொசுங்கியதைப் புலம்பியவள் எடுத்துரைத்தாள்
'வேற்றுலக வாசியல்ல நமது நாட்டான்
வெந்துயரைத் தந்தவனை அழித்தான்' என்றாள்!

கூற்றுவனாய் பலர் மடியக் காரணமாய்
குடியழித்த கொடுங்கோலர்க் கென்ன செய்வாய்?

சிறைகளிலே பலர் வாடி நாளைக் கழிக்க
சிதைகின்ற தவர் குடும்பம் நாளும் நாளும்!
அறைகின்ற பேய்க்காற்று இன்னுமின்னும்
அவலத்தின் செய்தியதைச் சொல்கிறது!
முறையற்ற மனிதத்தின் செயல்கள் தன்னை
முரசறைந்து சொல்லிடவே முடியாச் சூழல்
முறையிட்டோம் உன்னிடமே முடித்து வைத்து
முழுநிறைவைத் தந்திடுவாய் எமக்கே என்றும்!

விடிழந்து பொருளிழந்து வாழ்வதற்கு
வழியிழந்து வலுவிழந்து வருந்துகின்ற
கேடிழக்கா மனிதருக்கு நீயே துணையாம்!
கேட்குமவர் துயர்தீர நீயே வழியாம்!
கூடிழந்து வருந்தி நின்ற குருவிக்கெல்லாம்
குந்தவொரு இடமளித்த திருவே! ஐயா!
வாடுமவர் துன்பமதைப் பனிபோல் நீக்கி
வாழும் வழி காட்டிடுமே சூரியன் போல்!

யுத்தமது ஓய்ந்து கன நாளுமாச்சு
யுத்தகளம் ஏதுமில்லை வெடிகள், ஷெல்லின்
சத்தமேதும் கேட்கவில்லை, சண்டையில்லை – (ஆனால்)
சந்தியிலே "சோதனைக்கு" குறைவுமில்லை
செத்தவரோ செத்தவழி தெரியவில்லை
செத்ததனைச் சொல்லிடவோர் சான்றுமில்லை
புத்திரர்கள் நம்புகிறார் வருவார் தந்தை
முடியவில்லை அவர் துயரம், முடிப்பாய் இன்றே!

கடவுளுமக் கெழுதிடவே கனக்க வுண்டு
காண்பதுவும் கேட்பதுவும் பலவா யுண்டு
'அட இதுவா நீதி' என அடித்துக் கூற
அதிக கதை இங்குண்டு உனக்கெழுத
மடைதிறந்த அருவியென அவற்றைக் கொட்ட
மனதுண்டு, ஆனாலும் அலுத்திடுவாய்
விடை பெற்றேன், நான் எழுதும் மடலுக்கு
விடை தருவாய் என்றந்த நம்பிக்கையோடு! ■

14.06.2011 சுன்னாகம் நூலக ஞானவிலாசம் நிகழ்வுக் கவியரங்கில் பாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கபொ. த (உ / த) பரீட்சையை வெற்றி கொள்ள விவசாய விஞ்ஞான பாடத்தைத் தெரிவு செய்வோம்.

ப. அருந்தவம்
ஆசிரிய ஆலோசகர்
[விவசாய விஞ்ஞானம்
வலிகாமம் கல்விவலயம்]

விவசாயம் என்பதனை பயிர்ச் செய்கையும், விலங்கு வேளாண்மையும் பற்றிய கலையும், விஞ்ஞானமும் என வரையறை செய்யலாம். இதன் அடிப்படையில் இலங்கையின் விஞ்ஞான, கலை பிரிவில் கல்வி கற்பவர்கள் விவசாய விஞ்ஞான பாடத்தினை க. பொ. த உயர்தரத்தில் பயில முடியும்.

## உயிரியல் பிரிவில் விவசாய விஞ்ஞானம்

எமது பிரதேசத்தில் உயிரியல் பிரிவில் க. பொ. த (உ / த) கற்கும் மாணவர்கள் பௌதீகவியல், இரசாயனவியல், உயிரியல் ஆகிய பாடங்களைத் தெரிவு செய்வதுண்டு. உயிரியல் பிரிவில் கல்விகற்கும் மாணவர்கள் பௌதீகவியல் பாடத்தில் இடர்படுவதால் அப்பாடத்திற்கு பதிலாக விவசாய விஞ்ஞான பாடத்தைத் தெரிவு செய்யலாம். இதேபோல் இரசாயனவியல் பாடத்திற்கு பிரதியீடாகவும் விவசாய விஞ்ஞான பாடத்தைக் கற்கலாம். அதாவது இங்கு இரண்டுவகைப் பாடச் சேர்மானங்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும்.

01) பௌதீகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம்.
02) இரசாயனவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம்.

இவ்வாறு கற்பதனால் பின்வரும் நன்மைகள் உண்டு.

01) பல்கலைக்கழக அனுமதியின் போது மருத்துவம், பல்மருத்துவம், மிருகவைத்தியம் தவிர்ந்த ஏனைய உயிரியல் துறையிலான அனுமதிகளை இலகுவாகப் பெறலாம்.

02) உயிரியல் பாடத்தின் பல அலகுகள், விவசாய விஞ்ஞான பாடத்தின் அலகுகளுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளன. எனவே இரு பாடங்களிலும் உயர் பெறுபேற்றைப் பெறுவதற்கு இது வாய்ப்பாக அமையும்.

03) இரசாயனவியல் / பௌதீகவியல், உயிரியல், விவசாய விஞ்ஞானம் என்ற ரீதியில் பாடத் தெரிவு இடம்பெறும் போது அம் மாணவன் விஞ்ஞான மாணவனாகக் கணிக்கப்பட்டு பல்வேறு விஞ்ஞானம் சார் கல்வி நெறிக்கும் அனுமதி பெறமுடியும் (பல்கலைக்கழக சாராத) அத்துடன் விஞ்ஞானத்துடன் தொடர்பான வேலை வாய்ப்புக்களையும் பெறமுடியும்.

04) இலங்கை இன்றுவரை விவசாய நாடாகவே திகழ்கிறது. எனவே விவசாயத்துடன் தொடர்பான பல்வேறு தொழில் வாய்ப்புக் களிற்கும் இப்பாடத் தெரிவு அடிப்படையாக அமைகிறது.

05) இலங்கை விவசாயக் கல்லூரி, இலங்கை கால்நடை பரிபாலனம் தொடர்பான பாடசாலை ஆகியவற்றில் இரண்டு வருடகால துறைசார் டிப்ளோமா கற்கையை மேற்கொண்டு மிக விரைவில் தொழிலுலகோடு இணைவதற்குச் சந்தர்ப்பம் ஏற்படும்.

06) அம்பாறை ஹாடி உயர் தொழினுட்ப நிறுவனத் தில் விவசாய தேசிய டிப்ளோமா, இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (விவசாயம்) போன்ற நாட்டில் தொழில்வாய்ப்பு அதிகம் பெறக்கூடிய பயிற்சி நெறிகளையும் மேற்கொள்ளவும் வாய்ப்புண்டு.

07) இது தவிர விவசாய பாடத்திற்கான கல்வியியற் கல்லூரிகளில் நுழைந்து வருங்காலத்தில் சிறந்த விவசாய ஆசிரியர்களாக மிளிர்வதற் கான வாய்ப்பையும் தருகிறது.

## கலைப்பிரிவில் - விவசாய விஞ்ஞானம்

கலைப்பிரிவில் - விவசாய விஞ்ஞானத்தை ஒரு பாடமாகத் தெரிவு செய்ய முடியும். இதனால் பின்வரும் தன்மைகள் உண்டு.

01) இலங்கை முழுவதும் விவசாய விஞ்ஞான பாடத்தை கற்கும் மாணவர் தொகை மிகக் குறைவு என்பதனால் "Z" புள்ளியில் அதிக புள்ளி பெற வாய்ப்புண்டு.

02) அத்துடன் குறைந்த "Z" புள்ளியுடனேயே கல்வியற் கல்லூரிக்கு நுழைந்து மிக விரைவில் ஆசிரியர் தொழில் பெற முடியும்.

03) கலைத்துறையின் ஏனைய பாடங்களுடன் விவசாய விஞ்ஞான பாடத்தைத் தெரிவு செய்வதினால் நாட்டிலுள்ள பல்வேறு விவசாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சார்ந்த தொழிற் துறைக்கும் விண்ணப்பிக்கக்கூடிய நிலை ஏற்படும்.

04) புதிதாக இரத்மலானையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்சார் தொழிநுட்பவியல் பல்கலைக்கழ கத்திற்கு நுழையும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளவும் முடியும்.

**முடிவுரை:-**

எமது பிரதேச மாணவர்கள் இயல்பாகவே விவசாயக் கல்வியின் மீது அதிகம் நாட்டம் கொண்டவர்கள். அதுமட்டுமன்றி கிராமிய ரீதியில் கல்வி கற்கும் மாணவர்கள் விவசாயம் பற்றிய அடிப்படை அறிவையும், செயன்முறை அறிவையும் கொண்டுள்ளனர். எனவே இம்மாணவர்கள் க. பொ. த (உ / த) ல் விவசாய விஞ்ஞான பாடத்தைத் தெரிவு செய்வதன் மூலம் தமது பெறுபேற்றை இலகுவாக உயர்த்திக் கொள்ள முடிவதுடன் தமது எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய பல்வேறு அடிப்படை அறிவையும் பெற்றுக்கொள்ள முடியும். ■

# ஓங்கி ஒரே குரலாய்.....



இயற்கையின் இயக்கத்தில் சூரியன் முக்கிய இடத்தைப் பெறுகின்றான். அவன் ஒளியை வெயில் என அழைக்கின்றோம். வெயிலின் தாக்கம் உயிரினங்கள் யாவற்றையும் பலவித அல்லல்களுக்கு உட்படுத்தி னாலும் வெயில் மிக வேண்டப்படும் ஒன்று. இதன் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ள இயற்கையான மரங்களும் செயற்கை யான கட்டடங்களும் உதவுகின்றன. உணவு, மருந்து, அழகு என மரங்கள் வளர்க்கப் பட்டாலும் வெயிலில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் குளிர்மையைத் தரவும் மரங்கள் உதவுகின்றன.

வெப்பப் பிரதேசங்களில் வாழ்பவ னுக்குத்தான் மரத்தின் அருமை கூடுதலாகத் தெரியும்.

"வெயிற்கேற்ற நிழல் உண்டு.
வீசும் தென்றல் காற்றுண்டு"

என்ற சினிமாப்பாடல் வரி மனிதனின் தேவையுள் இயற்கையின் பங்கை விளக்குகிறது. இன்று விஞ்ஞானம் வளர்ந்து அதன் காரணமாகப் பல வித வசதிகள் மனித வாழ்வில் இடம் பெறலாகிவிட்டன. கிராமங்கள் நகரங்கள், பட்டணங்கள் என உருவாகி தனது இருப்பிடத்தை குளிரூட்டிய அறையில் அமைத்துக் கொண்டாலும் வெளியில் வரும் பொழுது வெயிலின் கடுமையை உணர வேண்டித்தான் உள்ளது. எனவே தான் மனிதன் மரங்களை எங்கும் நட்டு வளர்த்து வந்தான்.

ஆனால் இன்று தேவையின் பெருக்கத்தால் மின்சாரம் முக்கிய இடம்பெற்று விட்டது. அம்மின்சாரம் போகுமிடமெல்லாம் மரங்கள் தூர ஓடிவிடுகின்றன. இதனால் பயனாகிய மின்சாரம் பயனாகிய நிழல் தரு மரத்தை ஒதுக்கிக் கொண்டு போகின்றதை நாம் காண்கின்றோம். பெருவீதிகள் மட்டுமன்றி குளிர்மையும் எளிமையும் நிறைந்த கிராம வீதியும் மின்சாரம் செல்வதால் மரங்களை துரத்திச் செல்கின்றது. எனவே மக்கள் வெளியில் வந்தவுடன் வெயிலின் தாக்கத்திற்கு உள்ளாகி வருகின்றனர். சிறு குழந்தைகள் முதல் வயோதிபர் வரை வெயிலில் வதைபடுவதை நாம் காணலாம். எனவே மின்சாரத்தைப் பெறவும் வீதிகளில் நிழல்தரு மரங்களை வளர்க்கவும் நாம் ஏன் முயலக்கூடாது. இது எமது பொதுப்பி ரச்சினையாகவும் அத்தியாவசிப் பிரச்சினை யாகவும் இருக்கின்றதால் நாம் வழிகாணல் அவசியமான தாகும்.

இன்று எமது பிரதேசத்தில் மின் செல்லும் வழியெல்லாம் அலுமினியக் கம்பிகள் பயன்படுத்தப் படுகின்றன. கிராமப்புறம் ஊடாகச் செல்லும் இந்த மின் வழியில் உபயோகிக்கும் கம்பிகளுக்குப் பதிலாக பாதுகாக்கப்பட்ட உறையிட்ட கம்பிகளை ஏன் பாவிக்கக் கூடாது? எவ்வளவு செலவுகளை மேற்கொள்ளும் நாம் இத்தகைய பாவனைக்கு ஒரே ஒரு முறை மட்டும் மின்செல்லும் வழித்திட்டத்திற்குச் செலவிட்டால் பயனுடைய தாகாதோ? களவாக மின்சாரம் பெறுவது தடைப்படும். மின்வழியில் நிழல் ஏற்பட்டு மக்கள் குளிர்மையை அனுபவிப்பர். பிரதேசம் குளிர்வடையும்.

அதேநேரம் பிரதான வீதியில் குறிப்பாக இன்று யாழ்குடாநாட்டில் வீதிகள் அகலப்படுத்தப் படுவதால் மின்கம்பங்களை வீதியில் நடுவண் நீள அமைப்பதால் நல்லதல்லவா? ஒன்று அகன்ற வீதியில் நடுவண் அமைக்கும் மின்கம்பங்களால் மின்னொளி இருபக்கமும் பரவி போக்குவரத்தை இலகுவாக்கும். அதேநேரம் மின்கம்பங்கள் அவ்வாறு அமைக்கப்படுவதால் சடுதியாகத் திரும்பமுயலும் வாகனங்கள் வேகத்தைக் குறைப்பதால் விபத்துக்கள் குறையும். அதுமட்டுமன்றி பெருவீதியின் மருங்கில் கட்டடங்கள் அமையாதவிடத்து வசதியாக அமைந்த இடத்தில் மரங்களை நட்டு வீதியைக் குளிர்மையாக்க முடியும். இதனால் பயணிப்போர் நன்மை அடைவர்.

எனவே இவ்வாறு பயன்பெறுவது வெயிலில் இருந்து பாதுகாப்பதற்காக என்பதைஉணர்வோமாக. ஒன்றாகச் சிந்தித்து உரிய குரலைக்கொடுத்து வெயிலில் வெப்பத்திலிருந்து எம்மை நாம் பாதுகாத்துக் கொள்வோமாக.

சிந்திப்போமா?
பயனடைவோமா?

இ.கணேசராசா,
ஏழாலை மேற்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு

டாக்டர். ந. கிருஸ்ணராசா J.P
தலைவர் ஆயுர்வேத பாதுகாப்புச்சபை,
உடுவில்.

## வருமுன் காப்போம்

**சலரோகம் அல்லது நீரிழிவு என்றால் என்ன?**

எமது உடலில் உள்ள சுரப்பிகளில் ஒன்றான சதையி (Pancreas) இல் இருந்து சுரக்கப்படும் இன்சுலின் (Insulin) சுரப்பின் அளவு குறைவதால் அல்லது முற்றாக இல்லாது விடுவதால் ஏற்படும் நோய் நிலமையாகும்.

எமது உடலில் இன்சுலின் (Insulin) இன் தொழில் உடற் செயற்பாட்டுக்குத் தேவையான குளுக்கோசை (Glucose) விட அதிகமாகக் குருதியில் காணப்படும் குளுக்கோசை கிளைக்கோஜன் (Glycogen) ஆக மாற்றிச் சேமித்தல் ஆகும். எனவே இன்சுலின் தொழிற்பாடு பாதிக்கப்படும்போது குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்து காணப்படும். நீரிழிவு நோயை உறுதி செய்வதற்காகக் குருதியிலுள்ள குளுக்கோசின் அளவு பரிசோதிக்கப்படுகின்றது.

❖ **நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள்**

1. அதிகமாக அடிக்கடி சிறுநீர் கழித்தல்
2. தாகம் அதிகரித்தல், நாவரட்சி
3. பசி அதிகரித்தல்
4. உடல் நிறை சடுதியாகக் குறைதல்
5. களைப்பு
6. கண் பார்வை மங்குதல்
7. ஆண், பெண் உறுப்புக்களில், சொறி அல்லது எரிவு ஏற்படல்
8. சுவாசத்தில், அசாதாரணமான வாசனை ஏற்படல் (Acetous smell)
9. கால்களில் உணர்ச்சியற்ற தன்மை
10. விரைவான, ஆழமான சுவாசம் ஏற்படல்
11. வயிற்றுப்பகுதியில் வலி
12. அடிக்கடி குமட்டல், வாந்தி ஏற்படுதல், மயக்கம் ஏற்படல்
13. அதிக கோபம், மனதை ஒரு நிலைப்படுத்தல் முடியாமை
14. காயங்கள் குணமடைய அதிக நாட்களாதல்

மேற்படி அறிகுறிகள் ஒன்றோ பலவோ காணப்படுமிடத்து மருத்துவரின் ஆலோசனையுடன் குருதியில் குளுக்கோசின் அளவைப் பரிசோதித்துக் கொள்ளுதல் வேண்டும்.

❖ நீரிழிவு நோயினால் ஏற்படக்கூடிய சிக்கல்கள்

1. அதிக நீர் இழப்பு
2. கால்களில் எரிவு (Neuritis)
3. கால்களில் உணர்ச்சியற்ற தன்மை, பாதத்தில் மண் இருப்பது போல் உணர்தல்
4. அதிக குருதி அமுக்கம் (Hypertention)
5. மாரடைப்பு (Heart Attack)
6. பாரிசவாதம் (Paralysis)
7. கண்களில் வீக்கம் ஏற்படல் (Glucoma)
8. கண் பார்வை குறைவு
9. ஆண்மைக் குறைவு
10. சிறு நீரகம் பாதிக்கப்படல்
11. கால்களில் இரத்த ஓட்டம் தடைப்பட்டு கலங்கள் இறப்பதனால் கால் விரல்களை அகற்ற வேண்டி ஏற்படுதல்
12. ஆழமான மயக்கம் (Coma)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நோய் வருமுன் காப்பது எப்படி?

இந்த வகையில் அதிகமாகப் பரம்பரையூடாகக் கடத்தப்படுவது கண்டறியப்பட்டுள்ளது. இதன்படி

- தாய் தந்தை இருவரும் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு அவர்களது பெற்றோருக்கும் நீரிழிவு நோய் இருந்தற்கான சரித்திரம் காணப்படுமாயின் நோய் உருவாகுவதற்கான சாத்தியக்கூறு 80% காணப்படுகின்றது.
- தாய் தந்தை இருவரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் காணப்பட்டு அவரது பெற்றோருக்கு நோய் இருந்ததற்கான சரித்திரம் காணப்படுமாயின் நோய் உருவாகுவதற்கான சாத்தியக்கூறு 65% காணப்படுகின்றது.
- தாய் தந்தை இருவரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் காணப்படாது அவர்களது பெற்றோருக்கு நீரிழிவு நோய்க்கான சரித்திரம் காணப்படுமாயின் நோய் உருவாகுவதற்கான சாத்தியக்கூறு 40% காணப்படுகின்றது.
- தாய், தந்தை இருவருக்கும் நீரிழிவு நோய் காணப்படாது அவர்களது பெற்றோருக்கும் நீரிழிவு நோய்க்கான சரித்திரம் இல்லை எனினும் நோய் உருவாகுவதற்கான சாத்தியக்கூறு 20% காணப்படுகின்றது.
- தாய் தந்தை இருவரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் காணப்பட்டு அவர்களது பெற்றோருக்கு நீரிழிவு நோய் இருந்ததற்கான சரித்திரம் இல்லை எனின் நோய் உருவாவதற்கான சாத்தியக்கூறு 45% காணப்படுகின்றது.

இதை தவிர பெற்றோருக்கு 60 வயதில் நீரிழிவு நோய் தாக்கம் ஏற்பட்டு இருப்பின் எமக்கு 50 - 55 வயதுகளில் நோய்த்தாக்கம் ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. வரும் சந்ததிகளில் நோய் ஏற்படும் வயது குறைந்து செல்வது அவதானிக்கப்படுகிறது.

எனவே இதில் இருந்து மீள்வதற்குப் பின்வரும் நடைமுறைகளை கடைப்பிடிக்கலாம்.

1. இயன்றளவு இயற்கையுடன் ஒத்து வாழ்தல்
2. சீரான உணவுப்பழக்கங்களைக் கடைப்பிடித்தல் (அளவுக்கு அதிகமான உணவைத் தவிர்த்தல்)
3. அதிக மாப்பொருள், இனிப்பு, கொழுப்பு சத்துள்ள உணவுகளைத் தவிர்த்தல்
4. உடல் நிறையை அதிகரிக்க விடாது உயரத்திற்கேற்ப நிறையைப் பேணுதல்
5. தினமும் 30 நிமிடம் உடற்பயிற்சி செய்தல்
6. மதுபானம், புகைபிடித்தல் என்பவற்றை முற்றாகத் தவிர்த்தல்
7. உள ரீதியான அமைதியைப் பேணல்

இதற்காக யோகாசனம், தியானம் என்பவற்றைப் பயன்படுத்தலாம்.

இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் நீரிழிவு நோய் வருவதனைப் பிற்போட்டுக் கொள்ளலாம்.

❖ நீரிழிவு ஏற்பட்டவர்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கு கடைப்பிடிக்க வேண்டிய உணவு முறை

காலை உணவு
1. 100 ml ஆடை நீக்கப்பட்ட பால் (சீனி இல்லாமல்)
2. தானிய வகை ஒரு கோப்பை (50g) பயறு, கௌபி, கடலை போன்றன.
3. தோசை அல்லது இட்டலி 2 அல்லது 3 உப்பு மா 1/2 கோப்பை அல்லது ஒரு துண்டு பாண்

காலை உணவு 10.00 மணியளவில்

கதலிப் பழம் - 01 பப்பாளிப்பழம் - 01 கொய்யாப்பழம் - 01 விளாம்பழம் - 01

இவற்றில் ஏதாவது ஒன்று

மதிய உணவு

சோறு 75g உடன் மீன் துண்டு - 02, கோழி இறைச்சி - 100g, பருப்பு - 50g, முட்டை - 01

இவற்றுள் ஏதாவது ஒன்றுடன் தயிர், மோர், இலைக்கறி விரும்பிய அளவு.

மரக்கறிகளில் சிறு குறிஞ்சா, பாவற்காய், கண்டங்கத்தரி, முருங்கையிலை, ஆவரசம் இலை வாழைப்பூ, வெந்தயம், போன்றவற்றைப் பாவிக்கலாம்.

மாலை 4.00 மணியளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடை நீக்கப்பட்ட பால் 100ml (சீனி, இல்லாமல்) தானிய வகை, கிறீம் கிறாக்கர் பிஸ்கட் - 02

இரவு

தானிய வகை, குரக்கன்மா பிட்டு, ஆட்டாமா பிட்டு, உப்புமா, இடியப்பம் மூன்று இவற்றில் ஏதாவது ஒன்று கறிவகை, மதிய உணவுபோல் எடுத்துக்கொள்ளலாம்.

இரத்தத்தில் குளுக்கோசின் அளவு குறையும்போது ஏற்படும் அறிகுறிகள்

1. படபடப்பு
2. அதிக சோர்வு
3. தலைச்சுற்று
4. மயக்கம்
5. தலையிடி
6. அதிக வியர்வை
7. வலிப்பு

இவ் அறிகுறிகள் தென்பட்டால் வாயில் சீனி அல்லது குளுக்கோஸ் இடவேண்டும். சிறிது நேரம் ஓய்வு எடுத்தல் வேண்டும்.

❖ **நீரிழிவு நோயாளர் பயன்படுத்தக்கூடிய சித்த மருத்துவக் குடிநீர்கள்**

இவற்றை சித்த மருத்துவரின் ஆலோசனைப்படி உபயோகிக்கலாம்.

**குடிநீர் - 01**

1. ஆவாரம் துளிர் - 15g
2. கல்மதம் - 10g
3. கொன்றைவேர் - 15g

**குடிநீர் - 02**

1. ஆவாரையிலை - 6g
2. கொன்றையிலை - 6g
3. நாவல் கொட்டை - 6g
4. கடல் அழிஞ்சல் - 6g
5. கோரைக்கிழங்கு - 6g
6. கோட்டம் - 6g
7. மருதம்பட்டை - 6g

**குடிநீர் - 03**

1. தேற்றாங் கொட்டை - 10g
2. கடுக்காய் - 10g
3. ஆவாரம் விதை - 10g
4. விளாம் பிசின் - 10g

மேற்குறிப்பிட்ட குடிநீர் வகைகளில் ஏதாவது ஒன்றின் மருந்துப்பொருட்களை குறிப்பிட்ட அளவுகளில் எடுத்து அவற்றை ஒன்றாகப் பொடித்து எடுத்து 680ml நீர் விட்டு 1/4 பங்காக (170ml) வற்ற வைத்து காய்ச்சி காலை மாலை சாப்பாட்டிற்கு முன் அருந்தவும்.

- கடல் அழிஞ்சில் மரத்திலான பாத்திரத்தில் இரவில் கொதி நீரை ஊற்றி காலையில் அதனை அருந்தி வரலாம்.
- நாவல் கொட்டைகளைச் சேகரித்து உலர்த்திப் பொடித்து கோப்பிக்குப் பதிலாக பயன்படுத்தலாம்.
- காலையில் சிறு குறிஞ்சா இலை 5 - 7 இலை சப்பிச்சாப்பிட்டால் இதை தொடர்ந்து செய்யாது கிழமையில் 04 நாட்கள் செய்தல் சிறப்பு. இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறையுமாயின் இதை நிறுத்தி தேவை ஏற்படும்போது பயன்படுத்தலாம்.
- சுத்தம் செய்து கழுவிக் காய வைத்த வெந்தயத்தை இரவு படுக்கைக்குப் போகும் முன் சுத்தமான நீரில் ஊறவைத்து காலையில் நீருடன் சேர்த்து பருகி வரலாம்
- தேநீரிற்குப்பதிலாக ஆவாரை பஞ்சாங்க தேநீரை பருகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றுடன் மருத்துவரினால் சிபாரிசு செய்யப்பட்ட மருந்துகளையும் சிரமமாக உட்கொள்ள வேண்டும். சலப்பரிசோதனை, குருதிப்பரிசோதனை செய்து மருத்துவரின் ஆலோசனைப்படியே மருந்துகளின் அளவைக் கூட்டிக் குறைத்தல் வேண்டும்.


- கிழமைக்கு ஒரு தடவை சலப்பரிசோதனை
- மூன்று அல்லது நான்கு கிழமைக்கு ஒரு தடவை குருதிப் பரிசோதனை

இவற்றைத் தவிர நீரிழிவு நோயாளர்கள் முக்கியமாக பாதக் கவனிப்பை (Diabetic foot care) மேற்கொள்ள வேண்டும்.

- எப்போதும் மிருதுவான கால்களுக்கு இறுக்கம் இல்லாத காயங்களை ஏற்படுத்தாத பாதணிகளைப் பயன்படுத்தல் வேண்டும்.
- கற்கள், முட்கள் உள்ள பாதைகளில் காலணி இல்லாது நடப்பதைத் தவிர்த்தல் வேண்டும்.
- சுடு தரையில் வெறும் காலுடன் நடத்தலைத் தவிர்த்தல் வேண்டும்.
- கால்களில் சொறிவு ஏற்பட்டு, புண்கள் ஏற்படாது தடுப்பதற்காக கால்களை சுத்தமாகப் பேணுதல்
- தினமும் இரவு படுக்கைக்குப் போகும் முன் இளம் சுடுநீரில் சிறிதளவு உப்பு கலந்து பாதங்களைச் சிறிது நேரம் அதில் வைத்திருந்து சுத்தப்படுத்திக்கொள்ள வேண்டும்
- காயங்கள் ஏற்படுமாயின் அதை சிரமமாகச் சுத்தப்படுத்தி மருந்து இட்டு விரைவில் மாற்றி விட வேண்டும்.

இத்தகைய முறைகளை ஒழுங்காகக் கடைப்பிடித்து வந்தால் நீரிழிவு நோயினால் ஏற்படும் சிக்கல்கள் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்ளலாம்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" ■

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா
அப்பாக்குட்டி அவர்களின் பூரண
நல்லாசிகளுடன்
அவர் வழியிலே ஆத்மீகப் பணிகளுடன்
சமூகப்பணிகளையும் கல்விப்பணிகளையும்
ஆற்றிவரும்
செஞ்சொற் செல்வர்

**ஆறு திருமுருகன்**


அவர்களுக்கு யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்
**"கௌரவ கலாநிதி"**
பட்டம் வழங்கிச் சிறப்பித்துள்ளது.
இப்பிரதேசப் பெருமகனார் பல்லாண்டு
வாழ்ந்து சமூகப் பணிகளை மேலும்
ஆற்றிச் சிறப்புற "வெள்ளிமலை"
அன்புடன் வாழ்த்துகின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தள்ளாத வயதிலும் மக்கள் சேவையில் வைத்தீஸ்வரக்குருக்கள்



சிவத்தமிழ் வித்தகர், பண்டிதமணி, தத்துவக் கலாநிதி, செந்தமிழ் ஞாயிறு சிவத்திரு க. வைத்தீஸ்வரக்குருக்கள் அகவை 95 இல் காலடி வைத்துள்ளார். இவர் அறநெறி தவறாக அந்தணர் வழியில் க. கணபதீஸ்வரக்குருக்கள் சிவயோகசுந்தராம்பாள் தம்பதியினருக்கு 22.09.1916இல் ஈழத்துச் சிதம்பரம் காரைநகரில் தோன்றியவர்.

இவரைப்பற்றி அதி. வண. கலாநிதி எஸ். ஜெபநேசன் குறிப்பிடுகையில் "குருக்கள் நாட்டின் தலைசிறந்த செல்வம். அவருடன் வாழ்கின்ற காரைநகர் மக்கள் பாக்கியசாலிகள். இப் பொழுது அந்த முதறிஞர் கந்தரோடையில் வாழ்ந்து வருவதால் அந்தப்பாக்கியம் அங்குள்ள மக்களுக்கும் கிடைத்துள்ளது. அவர் ஒரு பழுத்த பழம் மட்டுமல்ல பயன்தரும் மரமும் கூட" என்று குறிப்பிட்டுள்ளார்.

இப்படி ஒரு பாக்கியம் முன்னரும் 1931 – 39 காலப்பகுதியிலும் கந்தரோடை மக்களுக்குக் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. அப்பொழுதும் அவர் தமது சகோதரியார் வீட்டில் – 'சிறிபி' சிவசரவணபவன் வீட்டில் வாழ்ந்தவர். அப்பொழுதுதான் தென்கோவைப்பண்டிதர் ச. கந்தையாபிள்ளையும் கந்தரோடையில் இவர் வீட்டுக்கு முன்பாக வாழ்ந்து வந்தார்.

அவர் வித்தகம் கந்தையா – திருவாசகம் கந்தையா என்றெல்லாம் அழைக்கப்பெற்ற சுன்னாகத்தின் பெரும் புலவர்களில் ஒருவர். அவர் சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரின் மாணாக்கராக இருந்தவர். சுவாமி விபுலானந்தர், முத்தமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி, பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை என்போருக்குச் சிலகாலம் தமிழ் கற்பித்தவரும் கூட. 'பண்டை நல்வினையால் இவருடன் எனக்குத் தொடர்பு ஏற்பட்டது' எனக் கூறிக்கொள்ளும் குருக்கள் ஐயா தமக்குத் திருவாசகம் பற்றி 'வித்தகர்' விளக்கமளித்தமையையும் நன்றியுடன் நினைவு கூரத் தவறுவதில்லை.

"வித்தகர் ஒவ்வொரு நாளும் மாலையில் சுன்னாகத்துக்குப் போய்வரும் வழக்கமுடையவர். போகும்போதும் வரும்போதும் திருவாசகத்தைப் பற்றிய பேச்சுத்தான் நிகழும். சில சந்தர்ப்பங்களில், இவர் தம்மை மறந்த நிலையில் ஓர் இடத்தில் நின்றுகொண்டு திருவாசகத்தைப் பற்றிச் சொல்லுவார். அந்த நேரத்தில் எங்களைக் காண்பவர்கள் சிலர் எங்களுக்குத் "தலை யில் பிழை" என்று சொன்னதுமுண்டு!"

**கலாபூஷணம் பொ. சண்முகநாதன்**

தமிழ்ப் பித்தராகத் திகழ்கின்ற குருக்கள் ஐயா, ஆரம்பக்கல்வியை காரைநகர் வலந்தலை அ.மி. பாடசாலையில் மேற்கொண்டு காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை, காரைநகர் இந்துக்கல்லூரி, அளவெட்டி நாகபூஷணி வித்தியாசாலை, சுன்னாகம் பிராசீன பாடசாலை ஆகியவைகளிலும் கல்வி பெற்றார். பரமேசுவரா பண்டித ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் தமிழ் பண்டித பரீட்சையிலும், பயிற்றப்பட்ட ஆசிரிய தராதரப் பரீட்சையிலும் சித்தி பெற்றவர்.

ஆன்றவிந்தடங்கிய, சான்றோராகத் திகழும் குருக்கள் அத்தகைய சான்றோர்களான தென்கோவைப் பண்டிதர் ச. கந்தையாப்பிள்ளையிடமும் பண்டிதர் ச. பஞ்சாட்சரக் குருக்கள், வேதவிசாரத் சிதம்பர சாஸ்திரிகள், மகாவித்துவான் சி. கணேசையா போன்றவர்களிடமும் படிக்கின்ற பெருவாய்ப்பைப் பெற்றவர்.

1935ஆம் ஆண்டு சுன்னாகம் பிராசீனப் பாடசாலையில் படிக்கும் காலை வித்துவான் சி. கணேசையா அவருக்கு ஆசிரியராக வாய்த்தார். பாடசாலைகள் இல்லாத நாட்களில் வறுத்தலை விளானிலுள்ள ஐயரவர்களின் வீட்டுக்கே சென்று திருவாசகத்தின் சில பகுதிகளைக் கற்றுத் தெளிவுபெற்றதை ஐயா அவர்கள் நன்றியுடன் சொல்லுகிறார். குருக்கள் அவர்கள் 1940 இல் கொழும்பு விவேகானந்தா வித்தியாசாலையில் தமது ஆசிரியப் பணியைத் தொடங்கி, வேறுசில பாடசாலைகளிலும் பணியாற்றி 1971இல் ஓய்வு பெற்றவர். விவேகானந்தாவில் பணியாற்றிய காலத்தில் அகில இலங்கை சைவசமயப் பரீட்சைக் குழுவின் உறுப்பினராகி, அந்தச்சபையின் சார்பில் இவர் ஆன்மிகப் பணி ஒன்றையும் மேற்கொண்டார்.

அப்போது ஞாயிற்றுக்கிழமை தோறும் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று அங்குள்ள தமிழ்க் கைதிகளுக்குச் சமயச் சொற்பொழிவாற்றி அவர்களின் தூயவாழ்வுக்குப் பேருதவி புரிந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக்காலப்பகுதியில் இவர் தினகரன் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலே பகுதி நேர உதவி ஆசிரியராகப் பல வருடங்கள் பணியாற்றியுள்ளார். பரந்தன் பகுதியில் ஆசிரியப் பணி புரிந்த காலத்தில் வீரகேசரியின் கரைச்சி நிருபராகவும் இருந்திருக்கிறார். இவைகளால் நவீன பத்திரிகைத் தொடர்பு அனுபவங்களும் வாய்க்கப் பெற்றிருந்தார்.

மக்களின் துயரங்களை வெளிப்படுத்துவதில் ஆர்வம் காட்டிய வைத்தீஸ்வரக்குருக்கள் ஆசிரியத் தொழிலோடு பத்திரிகை ஊடகத்துறையிலும் நிறைந்த ஆர்வம் காட்டியவர். தமிழ் மக்களின் தொன்மைச் சிறப்புக்களையும் பாரம்பரிய மேன்மைகளையும் கட்டுரைகளாக உதயன் சஞ்சீவி பத்திரிகைகளில் எழுதியவர். தமது முதுமையையும் பொருட்படுத்தாது தள்ளாத வயதிலும் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய தேவை கருதி நிறையவே எழுதினார். தீவக மக்களின் துன்ப, துயரங்களை நேரிலே கண்டவர் என்ற வகையில் அவரது தகவல்கள் மக்களுக்கு நடந்த கொடுமைகளைத் தத்ரூபமான செய்திகளாக்கி வெளிப்படுத்த தமக்கு உதவியமை பற்றி, உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் பல வேளைகளில் எனக்குக் கூறியுள்ளார்.

தமிழ்மொழி, சமயம் ஆகிய துறைகளிலும் காத்திரமான பயன்தரும் பல கட்டுரைகளை வடித்தவர்.

பத்திரிகைகள் செய்கின்ற பணிகளையும் அவை செய்ய வேண்டிய பணிகளையும் அடிக்கடி அவர் சொல்லுவார்.

குருக்கள் அவர்கள் ஈழத்துச் சிதம்பர புராணச்சுருக்கம், பாரத இதிகாசத்தில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, பெரியபுராணம் - கிருநகரப்படல உரை. காரைநகரில் சைவசமய வளர்ச்சி போன்ற பல நூல்களின் ஆசிரியராவார். அத்துடன் பல நூல்களின் பதிப்பாசிரியரு மாவார். அவரின் பதிப்புப் பணி மகத்துவத்தைப் பற்றி நாம் சொல்லுவதை விட புலவர்மணி சோ. இளமுருகனார் ஐயாவுக்கு அப்போது தாமே கைப்பட எழுதிய திருமுகம் மூலம் காண்போம்.

"பேரன்பு சான்ற அந்தணப் பெருந்தகை, பண்டிதர் சிவத்திரு வைத்தீஸ்வரக்குருக்கள் ஐயாவின் திருவடிக் கமலங்களை தலைமிசைச் சூடிக்கொண்டு எழுதும் திருமுகம்.


ஈழத்துச் சிதம்பர புராணத்தை எழுதுவதற்கு நீங்கள் எடுத்த முயற்சியிலும், அதனை அழகுற அச்சிடுவதற்கு எடுத்த முயற்சி பல நூறு கோடி பெரிது. அதனைக்காட்டிலும் எம்மை விளம்பரம் செய்ய ஓராண்டுக் காலமாய் எடுத்த முயற்சி ஆயிரம் கோடி பெரிது. அதனைக் காட்டிலும் பாராட்டு விழாவெடுத்ததற்குப் பல திங்கள் எடுத்த முயற்சி பத்தாயிரம் கோடி பெரிது.

"இத்தனைக்கும் ஒன்றுக்கும் பற்றாத சிறியேம் என்ன கைமாறு செய்யப்போகின்றோமோவென்று அஞ்சுகின்றோம்! பெரிய சாதனை! அறிவும் சாதுரியமும் ஆற்றலும் உடையவர்கள் இந்த உலகில் எல்லாம் செய்வர் என்பதையே தங்களிடம் இருந்து படித்துக்கொண்டோம்"

இப்படியாக வசிட்டர் வாயால் பிரம்மஸ்ரீ விருது பெற்றவர் எங்கள் ஐயா அவர்கள்.

பதிப்புப் பணியில் சிகரமாக அண்மையில் வெளிவந்த 'திண்ணபுர அந்தாதி' நூலைக் குறிப்பிடலாம். கார்த்திகேயப் புலவரது ஆக்கங்களில் தலை சிறந்ததாகக் கருதப்பெறும் இந்த ஆக்கம் காரைநகர் 'ஈழத்துச் சிதம்பரம்' ஆகிய திண்ணபுரத்தில் கோயில் கொண்டருளிய அருள்மிகு சௌந்தராம்பிகை உடனுறையும் சுந்தரேசப் பெருமான் மீது பாடியதாகும்.

ஏற்கனவே இந்த நூலை முதலில் பதிப்பித்த பெருமையும் இவரையே சாரும். இப்பொழுது இந்த நூலின் மூன்றாம் பதிப்பினை கனடா சைவசித்தாந்த மன்றத் தலைவர் (அன்புநெறி ஆசிரியர்) தி. விசுவலிங்கம் மூலமாக வெளியிட வைத்திருக்கின்றார்.



அவரின் இந்தப் பணிக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் பெரும் தொகை கொடுத்து இந்த நூற் பிரதிகளைக் கொள்முதல் செய்ய முன்வந்திருக்கிறது.

இந்தத் தகவலை உடல் நிலை தளர்ந்த நிலையிலும் புத்துணர்ச்சி பெற்றவராக மிக்க புளகாங்கிதத்துடனும் நன்றியுடனும் ஐயா கூறக் கேட்ட நாமும் பெருமையடைகிறோம். இந்தப் புத்துணர்ச்சியுடனும் புளகாங்கிதத்துடனும் ஐயா அவர்கள் தமது மூன்று புதல்வர்களுடனும் நீடு வாழ்ந்து சிவப்பணியும் தமிழ்ப்பணியும் புரிய எல்லாம் வல்ல இறையருள் வேண்டுவோமாக......

■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் கதை

# பேராசை பெருநட்டம்.

சி. சிந்துஜா
தரம் – 11
யாழ் / நடேஸ்வராக் கல்லூரி

ஓர் ஏழை விவசாயிடம் இரண்டு உழவு மாடுகள் இருந்தன. அவற்றுக்குப் போதுமான உணவு கிடைக்காத காரணத்தால் இரண்டும் எலும்பும், தோலுமாகக் காட்சி யளித்தன. அந்த மாடுகளில் ஒன்றுக்கு கழுத்தின் மேற்பாகத்தில் நுகத்தடியின் அழுத்தத்தால் பெரிய புண் ஏற்பட்டது. புண்ணிலிருந்து சீழ் வடிந்து கொண்டே இருந்தது. வலி தாங்க முடியாமல் காளைமாடு கண்ணீர் வடித்தது.

சீழ் பிடித்த புண்ணில் புழுக்கள் உண்டாகி புழுக்களின் துளைப்பும் நெளிவும் மாட்டை மிகுந்த வேதனையை உண்டாக்கின. விவசாயி அதனைக் கண்டும் காணாதவன் போலிருந்தான். வேதனையைத் தாங்க முடியாத மாடு தன் கொம்பையும், வாலையும் ஆட்டி தன் துயரத்தை வெளிப்படுத்தியது.



புழுக்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டிருந்தது.

என்றைக்குமில்லாமல் அன்று பார்த்து ஒரு காக்கை மாட்டின் கொம்பின் மீது வந்தமர்ந்தது. ஒரு வேளை புண்ணில் வடியும் நிணநீரின் நாற்றம் தான் காக்கையை வரவழைத்ததோ என்னவோ! காளைமாடு காக்கையைப் பார்த்து "நண்பனே! இன்று உனக்கு நல்ல விருந்து படைக்க போகிறேன். என் கழுத்தின் உள்ளே புழுக்கள் நிறைந்திருக்கின்றன.

புழுக்களின் நமைச்சலை என்னால் தாங்க முடியவில்லை. நண்பனே என் புண்ணில் உள்ள புழுக்களை நீ கொத்தித் தின்றாயேயானால் உனக்கு வயிறும் நிறையும் எனக்கு வலியும் குறையும். செய்வாயா?" என்றது காளை மாடு. காளை அவ்வாறு கூறி முடிப்பதற்குள் புண்ணுக்கு அருகில் அமர்ந்து காக்கை தன் வேட்டையைத் தொடங்கியது. ஒவ்வொரு தடவையும் காக்கை புழுக்களைக் கொத்தும் போது மாட்டுக்கு மிகவும் சுகமாக இருந்தது.

"நண்பனே! இன்று இவ்வளவும் போதும் நாளை வைத்துக் கொள்ளலாம்" என்றது காளை மாடு. காக்கையும் மறுப்பு ஏதும் சொல் லாமல் பறந்து சென்று விட்டது.

சொன்னது போல் மறு நாளும் காக்கை அதே நேரத்துக்கு வந்து மாட்டின் அனுமதி இன்றியே புண்ணில் உள்ள புழுக்களை கொத்தித் தின்ன ஆரம்பித்தது. காக்கை அனைத்துப் புழுக்களையும் தின்று முடித்த நிலையில் மாடு காக்கையை நோக்கி "நண்பனே! நீ செய்த உதவியை என்றும் மறக்கமாட்டேன். என் புண்ணில் உள்ள புழுக்கள் அனைத்தையும் கொத்தித் தின்றுவிட்டாய். நாளை நீ வரவேண்டாம். உனக்கு மிக்க நன்றி" என்று கூறியது. அதைக்கேட்ட காகம் உடனே பறந்து சென்றுவிட்டது. நமைச்சலும், வலியும் நீங்கிய மாடு படுத்துத்தூங்க ஆரம்பித்தது.

அடுத்த நாளும் அதே நேரத்தில் காக்கை வந்து மாட்டின் கழுத்தின் மீதுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புண்ணுக்கு அருகில் அமர்ந்தது. உடனே "நண்பனே! என் புண்ணில் உள்ள புழுக்கள் அனைத்தையும் கொத்தித் தின்றுவிட்டாய். இனிமேல் கொத்துவதாக இருந்தால் என்னுடைய சதையைத்தான் நீ கொத்த வேண்டும். அது வேண்டாம் நண்பனே! சென்றுவிடு" என்று மாடு கூறியது.

புழுக்களைக் கொத்தும்போது காளை மாட்டின் தசையையும் கொத்தித்தின்று ருசி கண்ட காக்கை அல்லவா! காளைமாடு கூறிய சொற்கள் காக்கைக்கு "செவிடன் காதில் ஊதிய சங்கு போன்று" ஆயிற்று. தன்னுடைய வாலை வீசியும் கொம்பை ஆட்டியும் காக்கையை விரட்டிப் பார்த்தது காளைமாடு. வாலைக் கொண்டு வீசும் போதும், தலையை ஆட்டும் போதும் மட்டும் பறந்து விட்டு மறுபடியும் புண்ணின் மீது மாறி மாறிக் கொத்தியது காக்கை. ஒவ்வொரு தடவையும் கொத்தும் போதும் மாடு துடியாய்த் துடித்தது.

"நண்பனே! வேண்டாம். நட்புக்குத் துரோகம் செய்யாதே! வேண்டாம் நண்பனே! என்னைத் தொல்லைப்படுத்தாமல் விட்டுவிடு" என்று மன்றாடிக் கேட்டுக்கொண்டது மாடு. ருசி கண்ட காக்கை விடுவதாக இல்லை. வயிறு நிறையும் அளவுக்கு நன்றாக கொத்தித்தின்று விட்டு பறந்து சென்றது. வலியினால் மாடு மிகவும் துடித்தது. சாதாரணமாக இருந்த புண்ணில் ரத்தம் வடிவதைக் கண்ட விவசாயி அப்போதே கால் நடை வைத்தியரிடம் காளை மாட்டை கூட்டிச்சென்று விட்டான். அவர் ஒரு களிம்பு மருந்தை காளை மாட்டிற்கு ஏற்பட்ட புண்ணில் தடவிவிட்டார். களிம்பு தடவிய பின்னர் ரத்தம் வடிவதும் நின்று மாட்டிற்கு இதத்தை அளித்தது.

மறுநாளும் வழக்கமான நேரத்துக்கு காக்கை வந்தது மாட்டின் மீது உட்கார்ந்தது. மாடு நடத்தவற்றை திருப்பித்திருப்பி கூறியது. காக்கையோ அவற்றைப் பொருட்படுத்தவில்லை மாட்டின் பேச்சையும் பொருட்படுத்தவில்லை. தன் வேலையை ஆரம்பித்தது. புண்ணை ருசித்து ருசித்து கொத்தியது. சிறிது நேரத்தில் காக்கை தள்ளாட ஆரம்பித்தது. மாட்டின் முன் "சொத்" என்று மயக்கம் போட்டது. தரையில் விழுந்து "விலுக் விலுக்" என்று கால்களும், தலையும் இழுத்தன.

நீதி:- அடுத்தவர் கஷ்டத்தை பொருட்படுத்தாத இது போன்ற அநீதியான செயல்களில் ஈடுபடக்கூடாது. அவர்களின் கஷ்டத்தைப் புரிந்து அவர்களுக்கு உதவ வேண்டும். ■

## தாத்தா சாப்பிட்டால் பேரன் தருவான்



ஒரு ஒட்டலில் வாடிக்கையாளர்களைக் கவருவதற்காக ஓட்டலுக்கு முன் விளம்பர பலகையில் "தாத்தா சாப்பிட்டால் காசு பேரன் தருவான்" என்று எழுதியிருந்தது. இதைக் கண்ட ஒருவர் "எனக்கு இன்னும் மகனே பிறக்கவில்லை" என்று சொல்லி உள்ளே சென்றார். அங்கு சென்றவுடன் "வெளியில் இருப்பது உண்மையா?" என்று கேட்டார். அதற்கு "ஆம்" என்றார் சர்வர். உடனே பல சாப்பாடுகளை வாங்கி வயிறு முட்டச் சாப்பிட்டு விட்டார். அதன் பின் சர்வர் பில்லைக் கொடுத்தார். அப்போது அவ் வாடிக்கையாளர் மிகவும் கோபமடைந்து "நீங்கள் சொல்வது ஒன்று செய்வது ஒன்று" என்றார். அதற்கு சர்வர் நிதானமாக சொன்ன வார்த்தை வாடிக்கையாளருக்கு அதிர்ச்சியைக் கொடுத்தது.

**"வாடிக்கையாளரே! இது உங்கள் பில் அல்ல. இது உங்கள் தாத்தாவின் பில்" என்றான்.**

E. வினோதன்
தரம் - 8B (S.J.C)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால(ன்) பாடம்

அந்தப் பாடசாலை வெகு அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. மங்கல தோரணங்கள் பிரதான நுழைவாயிலின் இரு புறமும் வீதியெங்கனும் கட்டப்பட்டிருந்தன. சோடி வாழைகள் பசிய இலை பரப்பிச் சூழலை மெருகூட்டின. வாசலில் சம்பிரதாய பூர்வமாக நிறைகுடம் வைக்கப்பட்டிருந்தது. பொருத்தமானவரின் கைகளால் ஏற்றப்பட்டு சுடர்விட்டெரிவதற்காக குத்துவிளக்கு காத்திருந்தது. அன்று பாடசாலையில் ஏதோ விழா நடக்கப்போகின்றது. ஆம்! பாடசாலையின் வருடாந்த முத்தமிழ் விழா அன்றுதான். அதற்காக தான் இத்தனை ஏற்பாடுகள். விழா மண்டபம் சிறப்பான அலங்காரத்தில் மிளிர்ந்தது. வர்ண மாலைகளாலும் பலவர்ண மின்குமிழ்களாலும் அழகுபடுத்தப் பட்டிருந்தது. அலங்கரிக்கப்பட்ட விழா மேடையிலே முக்கியஸ்தர்கள் அமர்வதற்காய் இருக்கைகள் போடப்பட்டிருந்தன. மேடையின் முன் ஓரமாய் ஒலி வாங்கி தன் கடமைக்காய் பவ்யமாய்ப் பார்த்திருந்தது. மண்டபம் முழுமையும் ஆசனங்கள் ஓர் ஒழுங்கில் அடுக்கப்பட்டிருந்தன.

நேரம் காலை ஒன்பது மணி "எமது பாடசாலையின் இவ் ஆண்டிற்கான முத்தமிழ் விழா இன்னும் சற்று நேரத்தில் ஆரம்பமாகவுள்ளது" வழமையான அறிவித்தல் காற்றில் கலந்தது. அறிவித்தலின் பின் அரை மணிநேரம் கழித்து பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டவர் கல்லூரி மண்ணில் கால் பதித்தார். பாடசாலை மாணவர்களின் வாத்திய வரவேற்புடன் அவர் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். மாலை அணிவித்துக் கௌரவிக்கப் பட்டார். அதிதியால் மங்கல விளக்கு ஏற்றப்பட்டது. பாடசாலைக் கொடியை அதிபர் ஏற்றியபோது பாடசாலைக் கீதம் இசைக்கப்பட்டது. இறைவணக்கம் முடிந்து, விருந்தினர் மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

நிகழ்வுகள் நடந்தேறின. அதிபர் ஆசியுரை வழங்கினார். மண்டபத்தில் மாணவர்கள் அமைதியாக நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர். தினமும் வெள்ளை சீருடை அணிந்து அன்னப்பட்சிகளாய் சிறகடிக்கும் அவர்கள் இன்று தூரிகையால் வரைந்த வண்ண ஓவியங்களாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தனர். ஆண் மாணவர்கள் அனைவருமே வேட்டி கட்டியிருந்தனர். வெள்ளை சேட் அணிந்திருந்தனர். சிறு பிள்ளைகள் வேட்டியுடன் அமர்ந்து தங்களைப் பெரியவர்களாகப் பாவனை செய்து கொண்டிருந்தனர். அவர்களது குழந்தை முகங்களில் தென்பட்ட பெருமிதத்திற்கும் மகிழ்ச்சிக்கும் அளவில்லை.

**திருமதி உதயலதா நவதீசன்**

ஆண்பிள்ளைகள் இப்படி என்றால் பெண் பிள்ளைகளின் சந்தோசத்தைச் சொல்லவே தேவையில்லை. பாதம் தொடும் பட்டுப்பாவாடை ஏற்றாற் போல் சட்டை அணிந்து பட்டாம் பூச்சிகளாய்ப் பறந்தனர். கலை நிகழ்வுகளும் நடைபெற்றுக் கொண்டிருந்தன. முன்வரிசையில் இருந்த ஒரு சிட்டுக்குருவி வெள்ளை வேட்டி சட்டையுடன் தன் விரிந்த விழிகளால் மேடையைக் கவனித்துக் கொண்டிருந்தது. நடனம் மேடையில் நடைபெற்ற போது தானும் ஆடுவதாய் அசைந்தது. பாடல் நடைபெற்றபோது தானும் இதழ் அசைத்துக் கொண்டது. கலகலவெனச் சிரித்தது. முகம் முழுக்கச் சந்தோசச் சாயலோடு அந்தக் குழந்தை நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்தது. இடையிடையே அருகில் இருந்த தன் நண்பனுக்கு ஏதேதோ கூறியது. நிகழ்வுகள் பற்றிய அதன் விமர்சனம் அது. அவனது பார்வை பல தடவைகள் அதன் வேட்டி சட்டையிலே பதிந்து மீண்டது. அதனை நான் அடிக்கடி பார்த்து மனதுள் சிரித்துக் கொண்டேன். புதிதாகத் தான் அணிந்த ஆடையால் அவனுக்குப் பெருமிதம் ஏற்பட்டு விட்டது. அவனது சுட்டித்தனமும் குறுகுறு பார்வையும் அழகும் என்னை வெகுவாகவே கவர்ந்து விட்டன.

"தொடரும் நிகழ்வாகத் தரம் ஒன்றைச் சேர்ந்த மாணவன் செல்வன் கிருஷ்ணா திருக்குறள் சொல்ல வருகிறார்." மேடையில் இருந்து ஒலி வரவும் என் கவனத்தை ஈர்த்த அந்தச் சுட்டிப்பையன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கையால் வேட்டியைப் பிடித்துக் கொண்டு அழகு நடையில் மேடை நோக்கிச் சென்றான். 'இவன் பெயர் கிருஷ்ணாவா? பொருத்தமான பெயர் தான்' சபையோருக்கு தன் மழலைக் குரலில் வணக்கம் சொன்னான். "விருந்தோம்பல்" எனும் அதிகாரத்தில் இருந்து குறள் கூற ஆரம்பித்தான்.

**"இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**

"வீட்டிலே இருந்து பொருட்களைப் போற்றி வாழும் செய்கை எல்லாம் விருந்தினரை உபசரித்து அவர்கட்கு உபசாரம் செய்வதற்கே ஆகும்" மழலை மொழியாயினும் தமிழ் உச்சரிப்பில் மாற்றமேதுமின்றித் தெளிவாகத் தயக்கமின்றி அழகாகத் திருக்குறள் களையும் அவற்றின் பொருளையும் கூறினான். பத்துக் குறள்களையும் அவற்றின் பொருளையும் செம்மையாக கூறிய பின் நன்றி கூறி விடை பெற்றுச் சென்றான். தன் இருக்கையில் அமர்ந்து மேடை நிகழ்வுகளைக் கவனித்துக் கொண்டிருந்தான்.

மேடையில் அமர்ந்திருந்தவர்களுக்கு தேநீர் உபசாரம் நடைபெற்றது. தேநீரும் சிற்றுண்டிகளும் வழங்கப்பட்டன. கேக், பிஸ்கட், வடை என்று மாணவர்கள் பரிமாறினார்கள். விருந்தினர்களும் மேடையில் அமர்ந்தவாறு அவற்றைச் சாப்பிட்டனர். நான் கிருஷ்ணாவைப் பார்த்தபோது அவன் மேடையில் அமர்ந்திருப்பவர்கள் சாப்பிடுவதையே ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தான். வேறு சில பிள்ளைகள் போல் குழப்பம் செய்யாமல் அவன் ஆரம்பத்திலிருந்தே மேடை நிகழ்வுகளைக் கவனமாகப் பார்த்துக்கொண்டி ருந்ததால் அவன் இப்பொழுது பார்த்ததையும் நான் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. சற்று நேரம் தாமதித்து அவனைப் பார்த்தபோதும் அவர்கள் சாப்பிடுவதையே அவன் பார்த்துக் கொண்டிருந்தான். முகம் பல்வேறு உணர்வுகளின் ஒட்டுமொத்தக் கண்ணாடியாகத் தெரிந்தது. எனக்கு என்னவென்று புரியவில்லை.

"மதிப்பிற்குரிய எமது பிரதம விருந்தினர் அவர்கள் இப்போது உரையாற்றுவார்கள்" அறிவிப்பைத் தொடர்ந்து பிரதம விருந்தினர் உரையாற்றத் தொடங்கினார். பாடசாலையின் நல்ல அம்சங்கள் பற்றிக் கூறினார். கல்வி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஏற்படும் முன்னேற்றம் பற்றி கூறினார். இன்றைய முத்தமிழ் விழா நிகழ்வில் மாணவர் அனைவருமே தமிழ் கலாச்சார ஆடைகளுடன் வந்திருப்பதையிட்டு தன் மகிழ்ச்சியைக் கூறி, பாராட்டுக்களையும் தெரிவித்தார். திறமையாகச் செயற்பட்ட மாணவர்க்கு வாழ்த்துக் களைக் கூறினார். "அதிலும் தரம் ஒன்று மாணவன் கிருஷ்ணா திருக்குறள் விருந்தோம்பலை என்ன அழகாக மனனம் செய்து கூறினான். அந்த மாணவனுக்கு விசேட பாராட்டுக்கள்" என்றும் கூறினார். இவ்வளவு நேரமாக பிரதம விருந்தினர் உரையை கவனித்துக் கொண்டிருந்த நான் கிருஷ்ணாவின் பெயர் கேட்டபோது தான் அவனைத் திரும்பிப் பார்த்தேன். அங்கே...... அங்கே.... கிருஷ்ணாவின் அகன்ற விழிகள் இரண்டும் நீரால் நிரம்பியிருந்தன. கண்களிலிருந்து தாரை தாரையாகக் கண்ணீர் ஓடிக்கொண்டிருந்தது. மெல்லிய விசும்பல் ஒலி. கைகள் ஒன்றுடனொன்று பிசைந்து கொண்டிருந்தன. கிருஷ்ணாவைப் பார்க்க எனக்கு என்னவோ போலிருந்தது. அந்தக் குழந்தையிடம் நெருங்கினேன். "தம்பி கிருஷ்ணா ஏனய்யா அழுகிறாய்? என்ன பிரச்சினை சொல்லுங்கோ" அவன் தலையைக் கோதியவாறு கேட்டேன். தன் பிஞ்சு விரலால் மேடையைச் சுட்டிக் காட்டினான். எனக்கு என்னவென்று விளங்கவில்லை அவனது விசும்பல் இன்னும் அதிகரித்தது. என்னவென்று புரியவில்லை. ஏன் இவன் மேடையைக் காட்டி அழுகிறான். நான் கிருஷ்ணாவை அவ்விடத்திலிருந்து தனிமையில் அழைத்து வந்தேன். "கிருஷ்ணா அழவேண்டாம். அழாமல் என்னவென்று சொல்லுங்கோ" "பசி....க்.....குது" விசும்பலின் இடையே எழுத்துக்கள் ஒவ்வொன்றாய் வந்து சேர்ந்தன. ஓ! என் இதயம் கசக்கப்பட்டது. இந்தக் குழந்தைக்கு பசியா? பசியால் தான் அழுததா? இவ்வள்வு நேரமாக ஆசையாய் ஆர்வமாய் நிகழ்சிகளைப் பார்த்திருந்த குழந்தை பசியால் அழுகிறது. மேடையை அது சுட்டிக் காட்டியதன் அர்த்தம் இப்போது தான் எனக்குப் புரிந்தது. பசியோடு இருந்த குழந்தை மேடையில் இருந்தவர்கள் விதவிதமாகச் சிற்றுண்டிகளை உண்டபோது அவனது பசி இன்னும் தூண்டப்பட்டு விட்டது. குழந்தைதானே அடக்க முடியவில்லை, அழுதுவிட்டான். பசியால் பரிதவித்தது அந்தப் பிஞ்சு. அவனை ஆறுதல் படுத்தினேன். கரங்களால் கண்ணீரைத் துடைத்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குழந்தையின் பசியைத் தீர்ப்பதுதான் எனது அந்நேர உடனடிக் கருமமாய் இருந்தது. சிற்றுண்டி கொடுத்த உயர்தர மாணவியை அழைத்தேன். ஒரு தட்டில் சிற்றுண்டிகளை வைத்துக்கொண்டு வருமாறு கூறினேன். கிருஷ்ணாவை ஒரு கதிரையில் இருத்தி அவன் முன்னால் சிற்றுண்டித் தட்டை வைத்தேன். கிருஷ்ணா ஆவலாக, ஆசையாக அவற்றை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினான். தேநீர் வேண்டாம் என்று மறுத்துவிட்டான். வைத்த உணவில் தன் பசிதீர உண்டுவிட்டு மிகுதியைத் தட்டிலேயே விட்டுவிட்டான். "சாப்பிடு" என்று நான் சொன்ன போதும் "காணும்" என்று மறுத்து விட்டான். தன் குட்டி வயிறு நிரம்பி பசி மறைந்த பின் தான் அவனது முகத்தில் ஒரு தெளிவு ஏற்பட்டது. சந்தோசமாய் சிரித்தான். கதிரையில் இருந்து துள்ளி இறங்கினான். "நான் நிகழ்ச்சி பார்க்கப் போறேன்." மழலையாகக் கேட்டான். "சரி பார்ப்போம் வா" என்று அவனை மண்டபத்திற்கு அழைத்துச் சென்றேன். சந்தோசமாக தன் கதிரையில் இருந்து நிகழ்ச்சிகளைப் பார்க்கத் தொடங்கினான் கிருஷ்ணா.

அந்த நேரத்திலே ஒரு குழந்தையின் பசியை உடனடியாகத் தீர்க்க முடிந்ததில் எனக்கு ஆத்ம திருப்தி! ஆனால் அந்தச் சபையிலே இன்னும் எத்தனை எத்தனை கிருஷ்ணாக்கள் பசியோடு இருப்பார்கள் ஒவ்வொரு கிருஷ்ணாவையும் என்னால் அடையாளம் காண முடியுமா?

மேடையில் கிருஷ்ணன் கூறிய திருக்குறள் ஏனோ என் ஞாபகத்திற்கு வந்தது.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" ■

## "சங்கப் பாடல்கள், தேவாரங்கள் திருவாசகங்களை புதுக்கவிதை படைப்பவர்கள் படிக்க வேண்டும்"

**வெள்ளிமலை வெளியீட்டு விழாவில் முதுபெரும் புலவர் சிற்றம்பலம் தெரிவிப்பு**

காலம் கவிஞனைக் கொன்று விடும். கவிதை அவனை வென்று விடும். புதுக்கவிதை படைப்பவர்கள் சங்கப்பாடல்கள், தேவாரங்கள், திருவாசகங்கள் போன்றவற்றைப் படிக்க வேண்டும் என்று முது பெரும் புலவர் வை. சிற்றம்பலம் தெரிவித்துள்ளார். வெள்ளிமலை சஞ்சிகையின் 10வது இதழ் வெளியீட்டு விழாவின்போது பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் புதுக்கவிதைகள் வர வேண்டும், புதிய கவிஞர்களின் வரவு அவசியம், புதுக்கவிதை பாடும்போது யாப்பமைதி இருக்க வேண்டும். எனக்கு இன்னும் இரண்டு மாதங்களில் 98 வயதாகின்றது. என்னால் சரியாக பார்க்க முடியாது. உடல் உபாதை இருக்கின்றது. இளம் கவிஞர்கள் கவிதை பாடவுள்ளனர் என்ற செய்தி கேட்டே இந்நிகழ்வில் கலந்து கொண்டுள்ளேன். ஏனெனில் இளம் கவிஞர்களின் கவிதை கேட்பது பிடிக்கும். 1984இல் சிறிமாவோ பண்டாரநாயக்க யாழ்ப்பாணத்தில் பல்கலைக்கழகம் ஆரம்பிப்பதற்கு முன்பு ஆரிய



திராவிட பாஷா சங்கம் தமிழ் வளர்ப்பதற்கான பல்வேறு செயல்திட்டங்களை மேற் கொண்டிருந்தது.

முன்னுள்ள கவிஞர்கள் நன்றாகப் பாடுவார்கள். ஆனால் இன்று அது அருகி வருகின்றது எனக் குறிப்பிட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எந்தனூர் கந்தரோடை



"சிற்பி"

மூர்த்திசிறி தானாலும் கீர்த்திபெரி தென்கின்ற மூதுரைக்
கேற்றதாகி
சீர்த்திபல கொண்டுள்ள சின்னங்கள் பல சேர்ந்த
செழிப்பான கந்தரோடை
ஆர்வத்தி னாற்பலர் ஆராய்ச்சி செய்கின்ற
ஆதியூர் கந்தரோடை
பார்த்தவர் பாராட்டிப் பாடிடும் பக்குவம்
படைத்துள்ள கந்தரோடை 01

சீரிலங் கைத்தீவின் சென்னியாய்க் காவியச்சிறப்புற்ற
யாழகத்தில்
ஊர்களுட் சிறியதாய் ஆய்வுகட் குரியதாய் உலகோருள்
ளத்தையீர்த்து
நேர்மையோ டெந்தமிழ் மக்களின் தொன்மையை
நினைவுசெய் கந்தரோடை
ஏர்த்திறத் தோடுளச் செழிப்போ டிலங்கிடும்
எந்தனூர் கந்தரோடை 02

இடையிலே தானிலங் கைவந்த ஊர்தமிழர் என்ற இழி
சொல்லா வுளம்
உடைபட்டுப் போனோருக்கு உண்மையை உணர்த்தியே உற்சாகம்
மூட்டும் மெம்மூர்
குடை கொண்டு படை கொண்டு குன்றாத தமிழ் கொண்டு கோனிருந்
தாண்ட தெம்மூர்
அடையாளச் சின்னங்கள் அளவின்றி இருக்கின்ற அருங்கந்த
ரோடை யெம்மூர் 03

கல்லும்முள் ளும்கொண்ட கயற்கனை எனப்படும் களத்திற்பல்
லாண்டு முன்னர்
தொல்லியல் ஆய்வினைத் தொடங்கிய பீரிசும் தொடர் கொடக்
கும்பராவும்
கல்லியே கண்டமட் பாண்டங்கள் கட்டடச் சிதைவுகள்
காசு எல்லாம்
வல்லதொல் துறை வகையாகப் பேணியே சுற்றுலாத்
தலமாகும் கந்தரோடை 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிநாட் தொடக்கமே ஆர்கந்த ரோடையில் வாழ்பவர்
தமிழரென்ற
சேதிகள் சிலவற்றைச் சிற்றம்ப லம்பத்ம நாதனும்
சொல்லிவைக்க
மீதியை ரகுபதி கிருஷ்ணரா சாபுஷ்ப ரத்தினம்
விளங்கியுள்ளார்
ஆதலால் இந்தமண் எம்மவர் சொந்தமெனப்பதில்
ஐயமில்லை 05

அரியகல் இரும்புவெண் கலம்செப்பி லாக்கிய கருவிகள்
ஈமச்சின்னம்
அருளும்வே லாயுதம் அழகுசேர் மணிதிரி சூலம்மட்
பாண்ட வண்ணம்.
பெரியகற் காலப்பண் பாட்டினுக் குரியதாம் பிற பல
பொருட்களோடு
வரி வடி வந்தமிழ்ப் பிராமியும் ஆனதால் வாழ்ந்தவர்
தமிழ ரென்றார். 06

கருணையோ டகிம்சையைக் கடமையைக் கண்ணெனக்
காத்தகௌ தமபுத்தரின்
அரியதத் துவத்துக்கு ஆட்பட்ட சிற்சிலர் ஆக்கினர்
புத்தகோயில்
பரந்தவுள் எத்தினர் பண்பினர் சைவர்கள் பழகினர்
பகைமையின்றி
அரும்பெரும் தேசத்தின் ஆளுமை ஓங்கவே வளருதே
கந்தரோடை 07

ஆதிசிவ னையம்மன் பிள்ளையார் முருகனை
அருள்வைர வர்காளியை
ஓதுதே வாரங்கள் உயர்மந்தி ரஞ்சொல்லி
உய்ந்திடும் கந்தரோடை
நீதியை நெஞ்சிலே கொண்டுள்ள நீர்மையர்
நிலைக்கின்ற கந்தரோடை
வாதுசூ தறியாத மக்களால் வளம்பெற்ற
மாட்சியூர் கந்தரோடை 08

எண்ணமே ஏற்றமாய் எளிமைசேர் வாழ்க்கையாய்
ஏற்பதும் கந்தரோடை
திண்ணிய நெஞ்சுடன் திறமையும் சேர்ந்துளோர்
சிறப்பதும் கந்தரோடை
மண்ணகம் மீதிலே விண்ணகம் காண்பவர்
மகிழ்வதும் கந்தரோடை
எண்ணிய எண்ணியாங் கெய்துவோர் எழிலுடன்
இருப்பதும் கந்தரோடை 09


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகப் புலவர் பரம்பரை :

# முத்துக்குமாரக் கவிராயர்

**(1780 - 1852)**

சென்ற இதழ் தொடர்ச்சி.....

"புங்கவர்கள் நால்வேத கீதம் பாடப்
புனையிழையார் பரதவித நடனம் ஆட,
மங்கலநா லிரண்டுமிரு மருங்குங் கூட,
மாதவர்கள் சொரியுமலர் மாரி மூடச்
செங்கரங்கொண்டு அரம்பையர்சா மரங்கள் போடத்
திங்கள்படி மணிமாடத் தென்பால் மேவும்
ஐங்கரன்கண் குளமகிழ ஆடீர் ஊஞ்சல்
அரியரனார் திருக்குமரா! ஆடீர் ஊஞ்சல்

சுந்தரமார் முகில்மாரி பொழிந்து வாழ்க;
சுரபிநிரை வாழ்க, மன்னர் செங்கோல் வாழ்க;
மைந்தர்மனை நிதிபெருகி இல்ல றத்தின்
மனைவாழ்க மகா சைவசமயம் வாழ்க;
சிந்தையிற் கவலைமிடி வறுமை துன்பம்
தீர்ந்தடியார் வாழ்க; சுன்னைப் பதியும் வாழ்க;
அந்தணர்தம் கிளைவாழ்க; ஆடீர் ஊஞ்சல்
அரியரனார் திருக்குமார ஆடீர் ஊஞ்சல்.

கவிராயர் தமிழிலேயன்றிச் சைவ சமயத்திலேயும், சிவனடியாரிடத்தும் பேரபிமானமும் பெரும்பற்றும் கொண்ட பெரும் புலவராவர். அவர் சைவசமயத்தைப் பழைய பெருமை வாய்ந்த பீடத்தில் வைப்பதற்கு எடுத்த பெரு முயற்சியை "முத்துக்குமாரக் கவிராயர் மொய்யமர்" என்று பிற்காலப் புலவர் போற்றுவர்.

கவிராயர் சைவாபிமானம், மொழியபிமானம். ஊரபிமானம் மிக்கவர். அவர் தமக்கு முன் வாழ்ந்த புலவர்கள் சிலர் சுன்னாகத்தைப் போற்றிப் பாடிய வகையில் தாமும் தம் அபிமானந் துலங்கப் பாடியுள்ளார்.

"புன்னாக நீழலும் பொய்கை நடுவிற் பொருந்தியதும்
என்னாக ரோமஞ் சிலிர்ப் பெய்த வைங்கர னெய்தியது
முன்னாக நாடி யரியர னீன்ற முதல் வன்புரம்
சுன்னாக மாமித் தினமேது சொல்லித் துதிப்பதுவே"

சுன்னாகத்து ஐயனார் தம் படைத் தலைவன் மகாகாளன் என்பாரோடு அந்தப் பதியையும் அயலூர்களையும் அன்பருளம் மகிழக் காத்து வருபவர். அவர்மீது ஊஞ்சல் பாடிய வாயால் கவிராயர் வேறு தோத்திரப் பாடல்களும் பாடியுள்ளார். அத்தோத்திர மாலைக்குக் காப்பாக, மங்கல வாழ்த்தாக சந்திரசேகர விநாயக மூர்த்தியைப் போற்றும் பாடல் படித்தின்புறற்பாலது.

"ஓங்குகரு ணையினுருவ மாங்குயிலை நிகருமொழி
உமையம்மை பங்கனாம்
ஊத்தமனு நத்தமர வத்தமிசை வைத்தவனு
மொண்சால மரநிழலில்
தாங்களிரு வருமாண்பெ ணாங்கொலென மருவியே
சரமசர முய்யமகவாய்த்
தந்திடச் சுன்னைநகர் வந்திரட் சிக்குமா
சாத்தவருண் மூர்த்தி மீது
தேங்குமது ரத்தமிழி னாசிரிய மோதவென்
சித்தத்து ணித்தமுறையும்
திகழுமரு மறைமுதற் பிரணவத் துருவான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிற்பர னான்கினுடனே
தாங்குமொரு கையன்முரு கையனுய்க் குறத்
தையன்மை யற்குதவினோன்
சந்திரசே கரானந்த சிந் துரா னானஞான
தற்பரன் பொற்பாதமே”

## தனிப்பாடல்கள் தாராளமாகப் பாடியமை

கவிராயர் அவர்கள் தம் அறிவாற்றலுக் கேற்பப் பெரு நூல்கள் எவையும் செய்யவில்லை. அவர் பெரும்பாலும் பல தனிப் பாடல்களே செய்துள்ளார். அன்றி ஊர்கள் தோறும் பல தலங்களுக்கு ஊஞ்சல் பதிகம் என்னும் சிறு பிரபந்த வகைகள் பல பாடியுள்ளார்.

அக்காலத்துக் கிறிஸ்துமதப் போதகர்கள் வரம்பு மீறிச் சைவசமயத்தைத் தாழ்த்திப் பேசி பொன்னும் பொருளும் உண்ணும் உணவும் உடுக்க உடையும் கொடுத்து ஏழைகளைத் தம்மதத்தில் சேர்த்த தவறான போக்கை வெகுவாகக் கண்டித்துப் பாடி வந்தார்.

சனரஞ்சகமாக எல்லோரும் எளிதில் விளங்கிக் கொள்ளும் வகையில் இவர் பாடிய பாடல்கள் கும்மி வகையைச் சேர்ந்தவை. பெண்கள் கூடிக் கைகொட்டிப் பாடியாடும் வகையில் இவர் ஞானப் பெண்ணே! என விளித்துப் பாடிய பாடல்களே ஞானக்கும்மி என்னும் தொகுதியாகும்.

கவிராயர் ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம், ஐயனார் ஊஞ்சல், நடராசர் பதிகம் என்பனவோடு பல தனிப்பாடல்களும் பாடியுள்ளார். இவற்றுள் ஞானக்கும்மி, யேசுமத பரிகாரம் என்பவை அக்காலத்து கிறிஸ்தவ போதகர்கள் சைவத்தைப் பரிகாசம் செய்து குறைத்துப் பேசி பிரசாரஞ் செய்தமையைப் பொறாது, சைவத்தை விளக்குவதற்காகப் பாடியவையாகும்.

இவற்றுள் சில பாடல்கள் நகைச் சுவையாயும், நக்கல் கிண்டல் ததும்ப அக்காலத்து வெள்ளைக்காரப் பாதிரிமாரின் போக்கைக் கண்டிப்பனவாயும் உள்ளன.

வெள்ளைக்காரப் பாதிரிமார் தம்மைத் தேசிகர் எனக் கூறிக்கொண்டு, தேசிகர்குரிய ஆசார அநுட்டானமின்றி வாழ்ந்தமையையும் குறிப்பிடுவர். காலைக்கடன் முடித்ததும் கால் கழுவாமல் கடதாசியால் துடைக்கும் வழக்கத்தைக் கவிராயர் கடுமையாகக் கண்டிப்பார்.

“மாசார் மலத்தை விடுத்துக் குதத்திடை
மண்ணிட்டு நீர்கொண்டு சௌசஞ் செய்யாதவர்
தேசிக ராம்பரி சுத்தரு மாமினிச்
செப்புவ தேதடி ஞானப் பெண்ணே”

கவிராயர் ஞானக்கும்மி பாடும்போது எடுத்த எடுப்பிலே “சீர்கொண்ட வேதாகமங்களைப் பொய்யென்று செப்பு மிலேச்சர்” என்று புறச் சமயத்தாரைக் குறிப்பிடுவார். தொடர்ந்து மதவிகற்ப இயல்பு, யேகோவா இயல்பு, யேசு இயல்பு, பரிசுத்தாவி இயல்பு, சீவனியல்பு, கிரியை இயல்பு, நாக இயல்பு, முத்தி இயல்பு, மோசே முதலியார் இயல்பு, கிறிஸ்தவர்கள் இயல்பு என்னும் பல தலைப்புகளில் பலவித பாவினங்கள் விரவிவரப் பாடியுள்ளார். இவற்றுள் ஓசை நயமும் சொல்லலங்காரமும் பொருளடர்த்தியுமுள்ள ஆசிரிய விருத்தம், கொச்சகக்கலிப்பா, கலிவிருத்தம், கலித்துறை, வெண்பா முதலிய பாவினங்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வாறாக இவர் 116 பாடல்கள் அருமையாகப் பாடியுள்ளார்.

சைவர்கள் மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பனவற்றில் நம்பிக்கை கொண்டு தீர்த்தமாடுதலை விசேடமாகக் கருதி சென்றாடு தீர்த்தம் எனப் போற்றுவதை பிற சமயத்தவர் பழித்துவிட்டு, நீரைக் கிள்ளித் தெளித்து ஞானஸ்நானம் செய்வது எதற்கு என்றெல்லாம் கவிராயர் சாடியுள்ளார்.

சைவர்கள் திருக்கோயிலை மையமாகக் கொண்டு தங்கள் வாழ்வை வளம்படுத்தி உய்தி பெறுவதை, பிரதிஷ்டாதி உற்சவாந்தம், உற்சவாதி பிராயச்சித்தம் என்று பயபக்தியுடன் கொண்டாடுவர். இவ்வாறாகப் பிற மதத்தவர் சைவரின் பிரதிஷ்டாதி கிரியைகளைக் குறை கூறப் பொறாத கவிராயர் பாடுவார்.

“மேலான கோயிற் பிரதிட்டை யேனென்று
வீண்பழி சொல்வார் சலொமோ னெனும் வேந்தன்
ஆலயங் கட்டிப் பிரதிட்டை செய்த
தறிகில ரோவெடி ஞானப் பெண்ணே”

இங்ஙனமாக யேசு மதபரிகாரம் என்னும் தொகுதியும் ஆசிரிய விருத்தத்தாலமைந்த இருபத்து நான்கு பெரிய பாடல்களைக் கொண்டதாகும். இப்பாடல்கள் தோறும் ஈற்றடியாக “அமல பூரண சுத்த சச்சிதானந்த மயமாம் சிவனை அறிவதறிவே” என்னும் தொடர் விரவிவரப் பாடியுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் அரசாண்ட அக்காலத்துக் கிறிஸ்தவ பாதிரிமார் நடந்து கொண்ட வண்ணத்தைப் படம் பிடித்தாற் போலப் பாடியுள்ளார்.

"அள்ளிப் பணங் கொடுத்து ஆளேன் பிடிக்கிறார் அவர் வார்த்தை கேட்பது அறிவோ" என்றும், "அடியிலாப் புணையேறி நெடிய கடல் போகிறார். அவர் வார்த்தை கேட்பதறிவோ" என்றும் "சுட்ட மண்ணுடன் பச்சை மண் பரிசிக்குமோ" என்றும் "சூரியனை அங்கையால் மூடலாமோ" என்றும் "பரசமய நூல்களைத் தெய்வத்தை நடைகளைப் பாகுலாசாரதமனைச் சீரார் தவங்களையிகழ்ந்து பல புத்தகந் தீட்டியே கூலியாட்கள் சேர்த்து வைத்தெங்குங் கொடுக்கிறார் தமது தேசிகன் மொழி மறந்தார்" என்றும் "அருட்டுறையின் வழி சற்று மறியாமலைகிறாரவர் வார்த்தை கேட்பதறிவோ" என்றும் "தங்கள் சபையிடை சேர்ந்து யேசு மதமல்லாது சற்சமய மல்லையென்று சாற்றி" என்றும் பலவாறாக அக்காலத்துப் பிறமதத்தவர் செயல்களைக் கண்டித்துப் பாடியுள்ளார்.

இன்று பண்பாடு பற்றிப் பேசுபவர் தாய்மொழியன்பு, தாயன்பு, ஊரபிமானம், நாட்டபிமானம் என்றெல்லாம் பேசுகிறார்கள். கவிராயர் தாய்மொழியன்பும் ஊரபிமானமும் கொண்ட பெரியவர். அவரின் சமயாபிமானம் தலை சிறந்தது. அவர் சைவம் பட்ட பாட்டையும் கெட்ட கேட்டையும் கண்டும் மனம் நொந்து, எங்களை அடுத்துக் கெடுத்தவர்கள் கூறிய ஆசைவார்த்தைகளையும் இடையில் கைவிட்டதையும் அயலவரிடம் அநுபவரீதியில் கண்ட அமைவில் பாடிய பாடல்கள் பல. அக்காலத்து உடுவிற் பாதிரியார் ஒருவர் செய்த நீதியீனத்தை நினைத்து வருந்தி பராபரனிடம் முறையீடு செய்துள்ளார்.

"நல்லவழி காட்டுவோம் உடுபுடைவை சம்பளம்
நாளுநா ளுந்தருகுவோம்
நாஞ்சொல் வதைக்கேளும் எனமருட்டிச் சேர்த்து
நானமுஞ் செய்து விட்டார்
மெல்ல மெல் லப்பின்னை வேலையிங் கில்லைநீர்
வீட்டினிடை போமென்கிறார்
வேண்டியொரு கன்னியைக் கைக்கொண்டு கருவாக்கி
விட்டபின் கணவன் வேலை
இல்லைநீ போவென்று தள்ளுவது போலுமே
இனி எம்மை எம்முறவினோர்
எட்டியும் பாரார்கள் கிட்டவும் வாரார்கள்
ஏர்ப் பூட்டி உழவுமறியோம்
அல்லலாம் இம்மைக்கு மறுமைக்கு நரகினுக்(கு)
ஆளாகி மிக அழிந்தோம்
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே.

வண்டியேன்? மஞ்சமேன்? கதிரையேன்? குதிரையேன்?
வாங்கு மெத்தைகள் சிவிகையேன்?
வட்டித்த கவிகையேன்? மல்லிகைச் செடிகளேன்?
வாழை கமுகுயர் தோட்டமேன்?
பெண்டிரேன்? பிள்ளையேன்? திரவியத் தோட்டமென்?
பேணிவரு காணியினமேன்?
பேரின்ப ஞானவழி இதுகொலோ? யேசுவும்
பின்பற்று சீடருங்கைக்
கொண்டதோ இவையெலா மவர்நின்ற ஞானவழி
கூறிநற் புத்தி சொல்லிக்
குணமாக்க வல்ல இவர் பணமாக்க வந்தது
குறிப்பறிந் தும்வறுமையால்
அண்டினோம் உண்ணவும் உடுக்கவும் வாழவும்
அதற்குமங் கிடமில்லையே
ஆபரா பரனே! கிறிஸ்தவர்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தார்களே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சனரஞ்சகமாகவும் பாடியமை

கவிராயர் அவர்கள் முத்தகச் செய்யுள் வித்தகர் என்று பெயரெடுத்தவர். அவர் செந்தமிழ் மணக்குமாறு சிந்தைக்கினிய கப்பல் பாட்டு பாடியுள்ளார். தம்பெயராலே ஒரு கப்பல் ஓட்டியதாகக் கற்பனைக் கடலில் அதனையோட்டிப் பாடியுள்ளார். மக்களிலக்கியமாக அது போற்றப் பெற்றது.

ஏலேலோ ஏலஎலோ
ஏலேலோ ஏலஎலோ

ஆதிபுரம் சோதிவஸ்து தந்தத்தைய
முக் கண் ஐயன் வெள்ளைவிடை ஊர்த்திக்கு
மாதவத்தோன் பணிபாதம் அம்பலவாணன் மகன்
கப்பலிது இந்தத்தையா

மங்கையர்க் கானஒரு மஞ்சட் சிவப்பு
மைக்கூடு கண்ணாடி வண்ணவளை சீப்பு
கெங்கைக் கிசைந்தவொரு குத்தா றவுக்கை
குங்குமம் செம்பவளக் கஸ்தூரி மஞ்சள் (ஏலேலோ ஏலஎலோ)

திங்கள் நுதலுக்கான திலக செந்தூரம்
செம்பஞ்சு திருநாமத் தாசிலாப் பொடியும்
கொங்கு வங்காளத்தில் விலைநலம் பேசி
குமரவேள் கப்பல் கொண்டு வருகுது அப்பா (ஏலேலோ ஏலஎலோ)

## கவிராயரின் கவித்துவம்

கவிராயர் பாடிய பாடல்களுள் நடராசர் பதிகம் கிடைக்கவில்லை என்பர். அவர் தோத்திர ரூபமாகப் பல தலங்களிற் பாடிய பாடல்கள் பெரும்பாலானவை கிடைத்துள்ளன. இவற்றையெல்லாம் திரட்டி "முத்தக பஞ்சவிஞ்சதி" என்னும் தலைப்பில் கவிராயர் வழிவந்த சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்கள் 1907ஆம் ஆண்டில் வெளியிட்டுள்ளார்.

பின்னர் கவிராயர் மறைந்த நூற்றாண்டின் நினைவாகப் புலவரவர்களின் புதல்வர்களிலொருவராய முத்துக்குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள், கவிராயர் நூல்களைப் பிரபந்தத் திரட்டு என்னும் தலைப்பில் 1952ஆம் ஆண்டில் வெளியிட்டிருந்தார்.

கவிராயரின் கவித்துவம் பற்றி அன்று வெளிவந்த பதிப்பில் அருமையாகக் கூறப்பெற்றுள்ளது. "பாக்கள் எல்லாம் சொல்லும் பொருளும் சுவைபட நல்லிசையோடு கூடிப் படிப்பவர் மனத்தை மகிழ்விக்கும் தன்மையுடையன. மடக்கலங்காரம், நாமாந்திரிகை, சங்கியாதை, வியுற்கிராந்தை முதலிய பல அணிகள் இவருடைய பாடல்களில் நூதனமாக அமைந்துள்ளன.

## வாழ்க்கைக் குறிப்பு

கவிராயர் முதலில் வண்ணையைச் சேர்ந்த நீராவியடியில் இரகுநாதர் என்னும் புகழ் பெற்ற சிறாப்பரின் குடும்பத்தில் திருமணஞ் செய்தபின் சுன்னாகத்தைச் சேர்ந்த கதிராசி என்னும் மாதை மணந்து, வள்ளியம்மை, யோகம்மா, சின்னம்மா, பொன்னம்மா என்னும் நான்கு பெண்களைப் பெற்றார் என்பர். இப்பெண்கள் சந்ததியில் வந்தவர்களும் புலமை பெற்றவர்களாயிருந்தார்கள் என்பர். கவிராயர் 1852ஆம் ஆண்டு வரை வாழ்ந்து செந்தமிழ் வளர்த்தார் என்பது வரலாறு.

"புவிப் புலவர் கேட்டு நனிமேவுஞ் சுவை மகிழப் பொன்னார் நாட்டில்" கவிச்சுவை ததும்பப் பாடிய பாவாணர் வரிசையில் முத்துக்குமாரக் கவிராச சேகரமும் ஒருவராவர். "முத்துக்குமாரக் கவிராயன் பாடலென் மூதருஞ் செல்வத்துக்கு வாய்த்த பொன் மண்டல மீழநன் மண்டலமே" என்ற ஈழமண்டல சதகம் புகழும்வண்ணம் வாழ்ந்தவர் கவிராயர் ஆவார்.

இக்கட்டுரை "மில்க்வைற் செய்தி" ஆசிரியர் திரு. க.சி. குலரத்தினம் அவர்களால் எழுதப்பெற்றது. "லண்டன் சுடரொளி" ஐ.தி. சம்பந்தர் அவர்களிடமிருந்து பெற்று வெள்ளிமலையில் வெளியிடத் தந்துதவியவர் கலாபூஷணம் சு. துரைசிங்கம் (கவிஞர் துரையர்) ஆவார். இவ் அறிஞர்களுக்கு எமது நன்றிகள்.


– ஆசிரியர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தமிழ் மொழி போல் இனிதாவது.......'

# சன்மார்க்க நடராஜமும் நுழைபுலமும்




> இப் பத்தியை (column) யான் எழுதுவதன் நோக்கம் எவரது படைப்பின் மீதும் அல்லது வெளியீட்டின் மீதும் அல்லது கருத்தின் மீதும் குற்றங் காண்ப தற்காக வன்று. சரியானதை யான் கற்றறிந்ததை பகர்ந்து கொள்ள வேயன்றி வேறில்லை. தமிழ்மொழி இலக்கண இலக்கிய விடயங்களில் யான் கற்றுக் கொண்டதை வாசகர்களுடன், ஆர்வலர்களுடன் பகிர்ந்து கொள்ளவே எழுதுகின்றேன்.

- (மு. பா. துவாரகன்

அன்று பௌர்ணமி நாள் (09.04.2009). யாழ்ப்பாணம் அளவெட்டியில் வசிக்கும் பண்டிதர் நாகலிங்கம் அவர்களைச் சந்திக்கச் சென்றேன். அன்றைய உரையாடலில் இரு விடயங்கள் முக்கியத்துவம் பெற்றன.

முதலாவது விடயம் யாழ் ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை முன்னை நாள் அதிபர் திரு.செ.சிவநடராஜா அவர்களின் மணிவிழா மலரான நடராஜ சன்மார்க்கம் பற்றியது. உண்மையில் நடராஜ சன்மார்க்கம் என்ற நூல் பற்றிய விடயமல்ல இது. மணிவிழா மலரின் பெயராகிய 'நடராஜ சன்மார்க்கம்' பற்றியதே.

'நடராஜ சன்மார்க்கம்' என்ற நூலின் பெயரில் இரு மொழிகள் உள. அதாவது இது இரு சொற் தொடர் மொழி. 'இவ் இரு மொழித் தொடரில் சிறப்பு சன்மார்க்கத்திற்கு வந்திருக்கிறது. நடராஜாவிற்கு அல்ல' என்கிறார் பண்டிதர் நாகலிங்கம். நடராஜாவிற்குத் தான் சிறப்பு வந்திருக்க வேண்டும் என்றுந் தெரிவிக்கிறார்.

அவர் கூறுவதைக் கேளுங்கள்:

நடராஜ சன்மார்க்கத்தில் பிற் சொல் தான் சிறப்பைப் பெறுகிறது. இரு மொழித் தொடர்களில் முற்சொல் சிறப்பைப் பெறுவதும் உண்டு. உதாரணம்:- குடம் வனைந்தான் என்பதில் பொருள் தான் சிறப்பைப் பெறுகிறது. அதாவது குடம் சிறப்பைப் பெறுகிறது. இவ்வாறே பானை வனைந்தான் என்பதில் பானை சிறப்பைப் பெறுகிறது. வனைந்தான் என்னும் வினைக்கு முன்னே வரும் பொருள் சிறப்பைப் பெறுகிறது.

இரு மொழித் தொடரில் பின்னால் வரும் சொல் சிறப்பைப் பெறுவதும் உண்டு. 'நிலம் கொத்தினான்' என்பதில் கொத்தினான் என்ற பிற் சொல்லே சிறப்பைப் பெறுகிறது.

இரு மொழித் தொடரில் இரு சொற்களுமே சிறப்பைப் பெறுவதும் உண்டு. கபில பரணர் என்பதில் கபிலருக்குஞ் சிறப்பு; பரணருக்குஞ் சிறப்பு.

இன்னும் 'பொற்றொடி' என்பது அன்மொழிச்' சிறப்பைக் கொண்டது. (தொடி - வளையல், பொன் + தொடி = பொற்றொடி) பொற்றொடி என்பது பொன் வளையல் அணிந்த பெண்ணைச் சிறப்பிக்கிறது. அதாவது சொல்லப் படாத மொழியின் பொருளைச் சிறப்பிக்கிறது. இது பொன்னையும் சிறப்பிக்கவில்லை; தொடியையும் சிறப்பிக்கவில்லை என்பதைக் கவனிக்க. இதே போல் பூங்குழல் (குழல் - கூந்தல்) என்பது பூவையோ குழலையோ அல்லாமல் கூந்தலிற் பூச்சூடிய பெண்ணைச் சிறப்பிக்கிறது.

நடராஜ சன்மார்க்கம் என்பதில் சன்மார்க்கந்தான் சிறப்பிக்கப்படுகிறது. உண்மையில் நடராஜாவுக்குத் தான் சிறப்பு வந்திருக்க வேண்டும் என்று வலியுறுத்தினார் பண்டிதர்.

அப்போது யான் கூறினேன்: நூலை வெளியிட்டவர்கள் சன்மார்க்கத்தை அதாவது சைவ சன்மார்க்க வித்தியாசாலையை சிறப்பிக்க விரும்பியிருக்கலாம். ஏனெனில் சைவ சன்மார்க்க வித்தியாசாலைக்கு சிறப்பைத் தேடித் தந்தவர் நடராஜா (அதிபர்). அதனால் அவர்கள் நடராஜ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சன்மார்க்கம் என்று வைத்திருத்தல் நியாயம் என்றேன்.

உடனே பண்டிதர் ஐயா என்னிடங் கேட்டார்: யாரைச் சிறப்பிக்க மணிவிழா மலர் வெளியிட்டனர் என்று. யான் கூறினேன்: அதிபர் நடராஜாவைச் சிறப்பிக்கத்தான் மணிவிழா எடுத்தனர். மணிவிழா மலர் வெளியிட்டனர் என்று.

'நடராஜம்' என்று ஒரு மொழியாக வருகின்றபோது அதற்குச் சிறப்பு உண்டு. உதாரணமாக காந்தியம் என்பது போல அம் சாரியை சேர்கின்ற போது அந்தச் சொல் சிறப்பைப் பெறுகிறது.

இன்னும் 'சன்மார்க்க நடராஜம்' என்று வருகின்றபோது சன்மார்க்கத்திற்குஞ் சிறப்பு நடராஜத்திற்குஞ் சிறப்பு. அவர்கள் அதிபர் திரு.நடராஜாவை சிறப்பிக்கத்தான் நடராஜ சன்மார்க்கம் என்று பெயரிட்டார்கள். ஆனால் அவர்களது நோக்கம் நிறைவேறவில்லை. இலக்கணம் இடங் கொடுக்கவில்லை. எப்படிப் பார்த்தாலும் சன்மார்க்க நடராஜம் என்று தான் வைத்திருக்க வேண்டும்" என்றார் பண்டிதர் நாகலிங்கம் அவர்கள்.

கோப்பாய் கல்வியியற் கல்லூரி முன்னாள் அதிபர் திரு.கமலநாதனை சிறப்பிக்க ஒரு மலர் வெளியிட்டனர். அதற்குக் 'காலங் கடந்த கமலம்' என்று பெயரிட்டனர். அது காலத்தை வென்று நின்ற கமலத்தை, கமலநாதனை சிறப்பிக்கிறது.

எனவே 'சன்மார்க்க நடராஜம்' என்று நூலிற்குப் பெயரிட்டிருப்பின் சாலவும் பொருத்த மன்றோ!

இரண்டாவது விடயம் நடராஜ சன்மார்க்கத்தைத் திறக்க நுழைவாயில் என்ற இடத்தில் வரும் 'நுழைப்புலம்' என்ற உப தலையங்கம். நுழைப்புலம் தவறு என்று பண்டிதர் வ. பேரின்பநாயகம் தர்க்கப்பட்டதாக எனது நண்பர் ஒருவர் என்னிடம் தெரிவித்திருந்தார். என்னோடு அன்று காலை உரையாடுகின்ற போது நுழைப்புலம் சரியென்று நண்பர் நியாயப்படுத்தினார்.

இந்நிலையில் பண்டிதர் அவர்களிடம் இந்த நுழைபுலம் பற்றிக் கேட்டேன்.

பண்டிதர் வ. பேரின்பநாயகம் தன்னிடம் நுழைபுலம், நுழைப்புலம் இவற்றில் எது சரியென்று சிலவாரங்களுக்கு முன்னர் கேட்டதாகவும் நுழைப்புலம் என்று போடப்பட்டிருப்பது தனக்கு அவமானமானதாக இருப்பதாகவுந் தெரிவித்திருந்ததாகச் சொன்னார் பண்டிதர் நாகலிங்கம்.

பண்டிதர் அவர்கள் என்னிடம் வினாவினார் நுழைபுலம் என்றால் என்ன என்று. அவரே விடையும் பகன்றார். நுழைவாயில் தான் நுழைபுலம் என்று வந்தது. நுழைந்த, நுழைகின்ற, நுழையும் - புலம் என வருகின்ற போது நுழைபுலம் என்றே வரும். நுழைதலை உடைய புலம் என்று வருகின்றபோது அது வேற்றுமைத் தொகை. அப்போது நுழைப்புலம் என்று வர இடமுள்ளது. வேற்றுமைத் தொகையென்றால் வல்லினம் மிக வேண்டிய கட்டாயமில்லை. மிகின் மிகலாம். எனினும் வழக்கு நுழைபுலம் என்றே இருக்கிறது.

நீங்கள் பண்டிதர் பேரின்பநாயகத்திற்கு என்ன பதில் கூறினீர்கள் என்று கேட்டேன். நுழைந்த, நுழைகின்ற, நுழையும் - புலம், நுழைபுலந்தான் சரி. அது தான் வழக்குங்கூட என்றார்.

ஒரு சொல் பற்றிய சந்தேகம் வருகின்ற போது இலக்கியத்திலே ஆதாரங் காட்ட வேண்டும். வழக்கைப் பார்க்க வேண்டும். நுழைப்புலம் என்ற பாவனையை அண்மைக் காலம் வரை எவருமே பாவித்ததில்லை. திருக்குறள் பதிப்புக்களில் நுண்மாண் நுழைபுலம் என்று தான் வருகிறது.

மொழியில் புதிதாக ஒரு சொல்லை அறிமுகப்படுத்த முன்னர் அல்லது வழக்கில் உள்ள சொல்லில் மாற்றத்தை ஏற்படுத்த முன்னர் மூத்த அறிஞர்களிடம் உசாவுதல் நன்று. தனித்துவமான நம் தமிழ்மொழிக்கு இயைபில்லாத வழக்கை அறிமுகப்படுத்தல் நன்றன்று.


அடிக்குறிப்பு:

அன்மொழி - சொல்லாத மொழி, சொல்லாத மொழியின் பொருள்
அன்மொழிச் சிறப்பு - சொல்லாத மொழியின் பொருள் சிறப்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பவள விழாக்காணும் தமிழறிஞர் புலவர் ம.பார்வதிநாதசிவம்



தமிழின் சுவையுணர்ந்த கவிவல்லாளராக மரபு வழித்தமிழ்ப்பணி புரிந்த புலமைத்துவ மரபில் முகிழ்த்தெழுந்த தமிழறிஞர் புலவர், ம. பார்வதிநாதசிவம் அவர்கள் சிந்தனைச் செழுமை மிக்க தமிழ் கவிதைகளையும், இலக்கியச் செழும் புதையல்களான கட்டுரைகளையும், நூல்களையும் தமிழுலகிற்குத் தந்து தமிழைச் செழுமைப்படுத்தியதோடு, ஆசிரியர், பத்திரிகை ஆசிரியர், ஒப்பியல் ஆய்வாளர், கவியரங்க கவிஞர், எழுத்தாளர் யாப்பறி புலவர் என்ற பல் பரிமாண ஆளுமைச் சிறப்புக்களுடன் பணியாற்றி பவள விழா நாயகனாகத் தமிழ் சிந்தனையோடு வாழ்ந்து வருகின்றார்.

தெல்லிப்பழை மாவிட்டபுரத்தில் 1936.01.14இல் பிறந்த புலவர் அவர்களின் தந்தையார் பெயர் குருகவி மகாலிங்கசிவம் தாயார் பெயர் அருமைமுத்து என்பனவாகும். இவர் வீமன்காமம் மகாவித்தியாலயம், மகாஜனக்கல்லூரி ஆகிய வற்றில் கல்வி பயின்று, அண்ணாமலை பல்கலைக்கழகத்தில் வித்துவான்கள் தண்டபானி தேசிகர், சோமசுந்தரப்பிள்ளை, அருணாசலம் பிள்ளை போன்ற புலமைச் சான்றோர்களிடம் கல்வி பயின்று புலவர் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இலக்கண வித்தகர் பண்டிதர் நமசிவாயம், பண்டிதர் கவிஞர் கதிரேசம் பிள்ளை போன்ற நுண்மான் நுழைபுலமிக்க அறிஞர்களிடம் கல்வி பெற்றார். இவர் வித்துவ சிரோன்மணி பொன்னம்பலப்பிள்ளை அவர்களிடம் உரையாசிரியர் எனும் பட்டத்தினைப் பெற்றவரும், நாவலரின் தலை மாணாக்கருள் ஒருவரும் ஈழ மண்டலச் சதகத்தினை இயற்றியவரும் திருவாதவூரர் புராணத்துக்கு உரையெழுதியவரும் நாவலர் அவர்களது சிதம்பரம் சைவப் பிரகாச வித்தியாசாலையின் தலைமை ஆசிரியராய் விளங்கியவருமான ம.க. வேற்பிள்ளையின் பேரனாவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகத் தமிழ் பணிபுரிந்த குருகவி மகாலிங்க சிவத்தினது மைந்தனாகவும், நாவலரது தமிழ் பாரம்பரியத்தின் தொடர்ச்சியும் வளர்ச்சியுமான போக்கிலே முகிழ்த்தெழுந்தவராகவும், புலவர் ம. பார்வதிநாதசிவம் அவர்கள் விளங்குகின்றார். மேலும் சைவப்பெரியார் க. சிவபாதசுந்தரனார், பண்டிதர் ம.வே. திருஞான சம்பந்தப்பிள்ளை, பண்டிதர் க. சச்சிதானந்தன் போன்ற அறிஞர்களின் உறவினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் போது பாவேந்தர் பாரதிதாசனுடன் நெருங்கிப் பழகும் சந்தர்ப்பத்தைப் பெற்றவர். ஈழநாடு, முரசொலி, சஞ்சீவி, வளர்மதி, வீரகேசரி, சுதந்திரன், உதயன் போன்ற பல்வேறு நாளேடுகள், சஞ்சிகைகளில் இவரது படைப்புக்கள் வெளிவந்துள்ளன. ஈழநாடு, உதயன், முரசொலி ஆகிய இதழ்களின் வாரமலர் ஆசிரியராகப் பணியாற்றியதோடு இராமநாதன் கலைக் கழகத்தில் லண்டன் கலைமாணி பாட நெறிக்கு விரிவுரையாளராகவும் கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராகவும் தமிழ்ப்பணி செய்தார்.

"நாடியைப் பார்த்தார் இல்லை
நயனத்தைப் பார்த்தார் இல்லை
மாடியைப் பார்த்தவாறே
மருந்தினை எழுதித்தந்தார்"

என்ற புலவரது கவிதைவரிகள் அபூர்வ வைத்தியம் என்ற தலைப்பில் ''பசிப்பினி

சைவப்புலவர் சித்தாந்தபண்டிதர்
**டாக்டர் . வெற்றிவேல் சக்திவேல்**
B.A [With English Lit.], B.S.M.S
F.G..Dip.Ed, P.G.Dip. Pubadm, M.A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவன்' எனும் கவிதை நூலில் புலவரால் எழுதப்பட்டுள்ளதுடன் மருத்துவர்களிடம் காணப்படும் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சமூகத்தைச் சீர்படுத்த முயல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மரபுவழி யாப்பிலக்கணத் தளத்துள் நின்று புதுமை வளத்தை எளிய நடையில் புலவரது பாடல்கள் இயற்றப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. 'காதலும் கருணையும்', 'இருவேறு உலகம்', 'இரண்டு வரம் வேண்டும்', 'இன்னும் ஒரு திங்கள்', 'பசிப்பிணி மருத்துவன்', 'மானங்காத்த மறக்குடி வேந்தன்' போன்ற கவிதை நூல்களையும் 'தமிழ்ச் செல்வன்' என்ற கட்டுரை நூலையும் எழுதியுள்ளார். காதலும் கருணையும் என்ற குறுங்காவியம் 64 விருத்தப் பாக்களாலும் இருவேறு உலகம் 35 விருத்தப் பாக்களாலும் 4 ஆசிரியப் பாக்களாலும், இரண்டு வரம் வேண்டும் 126 விருத்தப் பாக்களாலும் இன்னுமொரு திங்கள் 170 விருத்தப் பாக்களாலும் 3 ஆசிரியர் பாக்களாலும் பசிப்பிணி மருத்துவன் 50 எண்சீர் விருத்தப் பாக்களாலும், மானங்காத்த மறக்குடி வேந்தன் 21விருத்தப் பாக்களாலும் ஒரு ஆசிரியர் பாவாலும் ஆக்கப்பட்டுள்ளன. மழலை மலர்கள், மகாஜனன் குழந்தைக் கவிதைகள் என்னும் நூல்களில் புலவரது குழந்தைப் பாடல்கள் வெளிவந்துள்ளன. 'தமிழ்ச் செல்வம்' எனும் நூல் கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு மிளிர்கின்றது. இவரது புலமைத்திறனைப் பாராட்டி நல்லூர் பிரதேச சபை 'கலைச்சுடர்' எனும் பட்டத்தினை வழங்கிக் கௌரவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சொல்லேருழவராக, மொழித்திறத்தின் முட்டறுத்து, செந்தமிழ்ச் சான்றோராக வாழ்கின்ற தமிழறிஞரை ஏற்றிப் போற்றிப் பாராட்டுவது தமிழர் தம் கடமையாகும். ■




பார்வதிநாதம் பவளவிழா மலரினைப் பேராசிரியர் சிவலிங்கராசா வெளியிட்டு வைத்தபோது எடுக்கப்பட்ட படம்



பவளவிழா நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் புலவரைக் கௌரவிக்கின்றபோது எடுக்கப்பட்ட படம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்ற இதழ் தொடர்ச்சி:

# தமிழ் இலக்கிய வரலாறு எழுதுதலில் ஈழத்தறிஞர் செல்வாக்கு — 3ம் பகுதி

ம.பா. மகாலிங்கசிவம்
ம.பா. பாலமுரளி

6. நூற்றாண்டுகளில் தமிழ்.

தமிழிலக்கிய வரலாற்றை நூற்றாண்டுகளின் அடிப்படையிற் பகுத்து ஆராயும் கா.பொ. இரத்தினத்தின் நூற்றாண்டுகளில் தமிழ் என்னும் நூல் 1961இல் வெளிவந்தது. இந்நூலின் முதல் இயலாக் ஆய்வுரை என்னும் நீண்டபகுதி அமைகின்றது. இப்பகுதியில், பொருத்தமற்ற கதைகள், அரங்கேற்றம், முற்காலக்கல்வி முறை, சிறப்புப்பாயிரங்கள், தமிழ் இலக்கியவரலாற்று நூல்கள் முதலிய பல தலைப்புக்களில் விடயங்கள் தரப்படுகின்றன. இவற்றுள் தமிழ் இலக்கிய வரலாற்று நூல்கள் என்னும் பகுதி நூலாசிரியரின் காலம் வரை வெளிவந்த தமிழ், ஆங்கில இலக்கிய வரலாற்று நூல்கள் பற்றிய இலக்கிய மீளாய்வாக அமைகின்றது.

தமிழ்ப் புலவர் வரலாற்றுக்கான ஆரம்பநிலையைத் தொண்டைமண்டலச் சதகம், பாண்டிய மண்டலச்சதகம், ஈழமண்டலச் சதகம் என்பவற்றில் இடையிடையே கூறப்படும் புலவர் வரலாறுகளில் இருந்து எடுத்துக்காட்டுகின்றார். அடுத்தகட்ட வளர்ச்சியாகத் தமிழ் நாவலர் சரிதை, விநோதரச மஞ்சரி, தமிழ் புளூராக் என்பன குறிப்பிடப்படுகின்றன. தமிழில் முதலிலே எழுதப்பட்ட இலக்கிய வரலாறாகப் பேராசிரியர் கா. சுப்பிரமணியப்பிள்ளையின் இலக்கிய வரலாற்றைக் குறிப்படும் கா.பொ. இரத்தினம், இரு நூல்கள் என்னும் சிறு தலைப்பில் வி. செல்வநாயகம், சி.பாலசுப்பிரமணியன் ஆகியோரின் இலக்கிய வரலாறுகளை முக்கியமானதாகக் குறிப்பிடுகின்றார். கா.பொ. இரத்தினத்தின் நூற்றாண்டு ரீதியான காலப்பகுப்பில் முதலிரு காலப்பகுதிகளாக கி.மு 5ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம், கி.பி 2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலம் என்பன அமைகின்றன. (யாழ்.பல்கலைக்கழக நூலகத் திலிருந்து பெறப்பட்ட இந்நூற் பிரதியில் இவ்விருகாலகட்டங்களுக்கிடையேயான 48-55 வரையான பக்கங்கள் இல்லாமையினால் இடையில் வேறு காலப்பகுதிகள் இருந்தனவா என்பதை உறுதி செய்ய முடியாதுள்ளது.)

இவற்றின் பின் கி.பி 2ஆம் நூற்றாண்டு தொடக்கம் 20ஆம் நூற்றாண்டுவரை ஒவ்வொரு நூற்றாண்டாகத் தொடர்ச்சியான காலப்பிரிவுகள் இடம் பெறுகின்றன. ஒவ்வொரு காலப்பிரிவிலும் முதலில் அக்கால அரசியல் நிலை கூறப்பட்டு அடுத்து நூலாசிரியர்கள், நூல்கள் பற்றிய விளக்கங்கள் தரப்படுகின்றன. இலக்கியங்களின் பொதுப் பண்புகளை எடுத்துக்கூறும் வழக்கம் இங்கு காணப்படவில்லை.

கி.பி 6ஆம் நூற்றாண்டு பற்றித் தரப்படும் தகவல்களை நோக்கினால்,

1. ஆட்சியாளர்கள் :- களப்பிர, பல்லவ மன்னர்கள் பற்றிய தகவல்கள் உள்ளன.

2. இலக்கியங்கள் :-
   1. கொங்குவேளிர் இயற்றிய பெருங்கதை
   2. திருமூலரின் திருமந்திரம்
   3. கல்லாடரின் கல்லாடம்
   4. வாகீச முனிவரின் ஞானாமிர்தம்
   5. ஐயடிகள் காடவர்கோன் என்ற பல்லவ அரசனின் சிவத்தளிவெண்பா
   6. காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதி , திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், திருவிரட்டை மணிமாலை

[1]

[5] இந்நூல்கள் பற்றிய விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

இலங்கையில் இன்பத்தமிழ் என்ற நூலை முன்னரே எழுதியிருந்த (1960) கா.பொ. இரத்தினம் ஈழத்து இலக்கிய வரலாற்றையும் நன்கு அறிந்திருந்தமையால் ஒவ்வொரு நூற்றாண்டிலும் ஈழத்துப் புலவர்களையும், ஈழத்து இலக்கியங்களையும் சேர்த்து ஆராய்கின்றார். உதாரணமாக,

"இந்துசாசனத்தின் ஆசிரியராக இருந்த திருஞானசம்பந்தரை மக்கள் 'பத்திராதிபர் சம்பந்தர்' எனப்போற்றினர். இவர் நகைச்சுவை ததும்பும் 'உலகம் பலவிதம்' எனும் கதையினை எழுதினார். சில நூல்களுக்கு இவர் உரையும் எழுதியுள்ளார். இவரும் இவருடன் பிறந்த குருகவி மகாலிங்கசிவமும் தமிழ்ப் பேரறிஞர் மட்டுவில் க. வேற்பிள்ளையின் மக்களாவர் [16] என 20ஆம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றில் ஈழத்து அறிஞர் பரம்பரை ஒன்றை அறிமுகம் செய்யும் பகுதியைக் கூறலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இலக்கிய வரலாற்றை நூற்றாண்டு களாகப் பிரித்தும் ஆராயமுடியும் என்பதை முதலில் எடுத்துக்காட்டியவர் கா.பொ. இரத்தினமே எனலாம். 1969இலிருந்து மு. அருணாசலம் ஒவ்வொரு நூற்றாண்டுக்கும் எனத்தனித்தனியாக நூல் எழுதுவதற்கும் இந்நூலே வழிகாட்டியாக இருந்திருக்கலாம்.

7. தமிழ் இலக்கியத்திற் காலமும், கருத்தும்.

பேராசிரியர். ஆ. வேலுப்பிள் ளையின் 'தமிழ் இலக்கியத்திற் காலமும் கருத்தும்' என்னும் நூல் 1969இல் வெளிவந்தது. ஆட்சியாளர்களின் பெயர்களிற் காலப்பகுப்பை மேற்கொள்ளும் பொதுவான இலக்கிய வரலாற்று மரபிலிருந்து விடுபட்டு அவ்வக்காலங்களில் முக்கியத்துவம் பெற்ற இலக்கியப் பாடுபொருள்களின் அடிப்படையில் அவர் காலப்பகுப்பை முன்வைத்தார். இவ்வகையில்,

1. இயற்கை நெறிக்காலம்.
2. அறநெறிக்காலம்.
3. சமய நெறிக்காலம்.
4. தத்துவ நெறிக்காலம்.
5. அறிவியல் நெறிக்காலம் என அவரது காலப்பாகுபாடுகள் அமைந்தன.

தமிழ் இலக்கிய வரலாற்றின் முதலாவது பொதுவான காலப்பகுப்பாகிய சங்ககாலத்தை இயற்கை நெறிக்காலம் என ஆ. வேலுப்பிள்ளை பெயரிட்டார். தமிழ் நாட்டுச் சூழலுக்கேற்ப தமிழ்மக்களின் வாழ்க்கை முறை அமைந்தமையாலேயே இக்காலம் இயற்கை நெறிக்காலம் என அழைக்கப்பட்டது. இயற்கை நெறிக்காலம் அடுத்து அறநெறிக்காலமாக மாற்றமுற அரசியல் நிலையில் ஏற்பட்ட மாற்றத்தைவிடத் தமிழரின் சிந்தனையில் ஏற்பட்ட மாற்றமே காரணமென அவர் வலியுறுத்தினார். இதனை,

"அரசாள்வோரில் ஏற்பட்ட மாற்றம் மட்டும் மக்கள் வாழ்க்கையை அதுவும் நிறுவனங்கள் முதலியன வளர்ச்சியடையாத பூர்வீகச் சமுதாயத்திற் பெருமாற்றமுறச் செய்திருக்க முடியாது. சங்ககால வாழ்க்கை முறையிற் காணப்பட்ட குறைபாடுகளால் மனம் நொந்த மக்களுக்கு வேறு வாழ்க்கை முறை தேவைப்பட்டது"[17] என்னும் அவர் கூற்றின் மூலம் அறியலாம். அறநெறிக் காலத்துக்குரிய நூல்களெனப் பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் முழுவதையும் குறிப்பிட்ட போதும், இக்காலப் பொதுப் பண்புகளை எடுத்துக்காட்டத் திருக்குறளையே பெரும்பாலும் உரைகல்லாகக் கொள்கிறார்.

அடுத்துச் சமய நெறிக்காலம், தத்துவ நெறிக்காலம் என்னும் இரு காலங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையவை என்றும் முந்தியதன் தர்க்க ரீதியான வளர்ச்சியே அடுத்தகால கட்டம் என்றும் விளக்கப்படுகின்றது. வி. செல்வநாயகம் குறிப்பிடும் பல்லவர்காலம், சோழர்காலம் ஆகிய இரண்டும் சமய நெறிக்காலத்தினுள் அடங்க நாயக்கர் காலத்தைக் குறிப்பதாகத் தத்துவ நெறிக்காலம் உள்ளது. இறுதிப் பகுதியான அறிவியல் நெறிக்காலத்தில் மேலைநாட்டுச் சிந்தனைகளின் விளைவாகத் தமிழ் அறிவியல் ரீதியாக வளர்ச்சியடையத் தொடங்கியமை கூறப்படுகின்றது.

8. தமிழில் இலக்கிய வரலாறு.

தமிழில் இலக்கியவழி வரலாறு எழுதுவதற்கு வழிகாட்டிய பெருமை ஈழத்துப் பேராசிரியரான கா. சிவத்தம்பியின் தமிழில் இலக்கிய வரலாறு என்றும் நூலுக்கே உரியதாகும்.[18] இந்நூல் தமிழ் இலக்கியங்களை மாக்ஸிஸ அடிப்படையிலான சமூக அழகியல் அம்சங்கள், இலக்கியப் பயில்வாளரின் சமூகநிலைமை, சமூகத்தின் பொதுவான உற்பத்தி முறைமைகளுக்கும் இந்த உற்பத்தியாளருக்கும் உள்ள உறவுகள். இலக்கியத்தின் கருத்து நிலைப்பாங்கு என்பன இந்நூலிலே தெளிவுபடுத்தப்படுகின்றன.

நான்கு இயல்களைக் கொண்ட இந்நூலின் முதல் இயலான இலக்கிய வரலாறு எனும் பயில்துறை, அதன் புலமைப் பரப்பமைவு பற்றிய சுருக்க அறிமுகம் எனும் இயலிலே இலக்கியம், இலக்கியவரலாறு என்பவற்றிற்கான வரை விலக்கணங்கள், 'இலக்கிய வரலாறு' என்னும் தொடரின் இருவகைமைப்பாடுகள் (இலக்கியத்தின் வரலாறு, இலக்கியவழி வரலாறு) பற்றிய விளக்கம் என்பவை இடம்பெறுகின்றன.

தமிழில் இலக்கியவரலாற்று ஆய்வின் வளர்ச்சியைக் கூறுவதாக இரண்டாவது இயல் உள்ளது. சங்க இலக்கியத் தொகுப்பிலே ஆரம்பித்த இலக்கியங்களைத் தொகுத்துப் பேண வேண்டு மென்ற பிரக்ஞை பல்வேறு தொகுப்புக்களினூடாக எவ்வாறு வளர்ச்சியடைந்தது எள்பதும், தமிழ் நாவலர் சரிதையிலே தொடங்கிய புலவர் வரலாறு எழுதுகை எவ்வாறு வளர்ச்சி அடைந்தது என்பதும் இவ்வியலில் விளக்கப்படு கின்றன. மூன்றாவது இயல் தமிழிலக்கிய வரலாற்றை எழுதும்போது ஏற்படும் பிரச்சினை மையங்கள் பற்றியும் நான்காவது இயல் தமிழ் இலக்கிய வரலாற்றைக் காலப்பகுப்புச் செய்வதிலுள்ள பிரச்சினைகள் பற்றியும் கூறுகின்றன. காலப்பகுப்புப் பிரச்சினைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளக்கப்பட்ட பின்னர் இறுதிப்பகுதியில் தமிழிலக்கிய வரலாற்றைப் புதிய நோக்கிற் பார்ப்பதற்குரிய நான்கு காலப்பிரிவுகள் முன்வைக்கப்படுகின்றன.

1. ஆரம்பம் முதல் கி.பி 600 வரை.
2. கி.பி 600 முதல் கி.பி 1400 வரை.
3. கி.பி 1400 முதல் கி.பி 1800 வரை.
4. கி.பி 1800 முதல் இற்றைவரை.[19]

இந்நான்கு காலப்பிரிவுகளும் தமிழகத்தில் அவ்வக்காலங்களில் நிலவிய சமூக அமைப்பு முறைகளைக் கருத்திலே கொண்டு வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முதற்காலகட்டம் வீரயுகக்காலம் (கி.மு 100 - கி.பி 250) நிலமானியக்காலம் (கி.மு 250- கி.பி 436/ கி.பி 450) வணிக மேலாண்மைக் காலம் (கி.பி 436/ 450 - கி.பி 560/590) எனமேலும் மூன்று உபபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளது. இந்நூல் தமிழிலக்கிய வரலாற்று நூல்களில் நவீனத்துவ சிந்தனையின் ஆரம்பத்தையும் புதிய வகையிலான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தையும் உணர்த்துவதாக உள்ளது.

9. தமிழிலக்கிய வரலாற்றுச் சுருக்கம்.

தி. மதிவதனனின் தமிழிலக்கிய வரலாற்றுச் சுருக்கம் 1999இல் வெளிவந்தது. சங்ககாலம் தொடக்கம் ஐரோப்பிய காலம் வரைக்குமான இலக்கிய வரலாற்றைக்கூறும் இந்நூல் காலப்பகுப்பு உள்ளிட்ட முக்கிய பலவிடயங்களைப் பேராசிரியர் வி. செல்வநாயகத்தின் இலக்கிய வரலாற்றைப் பின்பற்றியே எழுதப்பட்டுள்ளது. எனினும், க.பொ.த (உயர்தர) மாணவர்களையும் பல்கலைக்கழக மாணவர்களையும் கருத்திற்கொண்டு உருவாக்கப் பட்டமையால் மாணவர்களின் பரீட்சைத் தேவைகளுக்குரிய பலபுதிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. உதாரணமாகச் 'சங்ககால இலக்கியங்களும் சங்கமருவிய கால இலக்கியங்களும் ஓர் ஒப்புநோக்கு', சங்கமருவிய கால இலக்கியங்களும் பல்லவர்கால இலக்கியங் களும் ஓர் ஒப்புநோக்கு என்னும் தலைப்புக்களைக் குறிப்பிடலாம். ஒப்புநோக்கும் இப்பகுதிகள் குறித்தகால இலக்கியம் எவ்வாறு முற்காலத்தின் தொடர்ச்சியாகவும், பிற்காலத்துக்கு வழிகாட்டிய வளர்ச்சியாகவும் அமைந்துள்ளது என்பதை அறிய உதவுகின்றது.

"வட இந்தியச் செல்வாக்கு அதிகம் காணப்படாது வாழ்வு வாழ்வதற்கே என்ற மனிதமையச் சூழல் நிலவிய சங்கச் சமுதாயத்தில் இருந்து தோன்றிய சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களுக்கே உரியதான வாழ்க்கை முறைகளைச் சித்திரிப்பதாக அமைந்துள்ளமை புலப்படுகின்றது. வட இந்தியச் செல்வாக்கும் சமயக் கருத்துக்களும் புகுந்து மனிதமையச் சூழலில் இருந்து சமயமையச் சூழலுக்கு மாறிக் கொண்டிருந்த சங்கமருவிய சமுதாயத்தில் இருந்து முகிழ்த்த இலக்கியங்களில் அக்காலச் சமுதாயச் சூழ்நிலை சித்திரிக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது."[20] என்னும் பகுதி அவரது ஒப்புநோக்கற் சிறப்புக்கு உதாரணமாக அமைகின்றது.

10. பரீட்சை நோக்கில் தமிழிலக்கிய வரலாறு - சுருக்கக்குறிப்புகள்.

இலங்கையில் நடைபெறும் பரீட்சைகளிற் கேட்கப்படும் வினாக்களை மையமாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்நூல் சிவகேசவனால் 2004இல் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த தலைப்புக்களில் அமைந்த விடயங்கள் தொடர்பான சுருக்கக் குறிப்புக்களையே இந்நூல் கொண்டுள்ளது.

11. தமிழிலக்கிய வரலாற்றுச்சாரம்.

த. ஜீவராஜாவினால் 2009இல் வெளியிடப்பட்ட இந்நூல் 429 பக்கங்களைக் கொண்டது. பரீட்சை நோக்கில் அமைந்தாலும் ஒவ்வொரு காலகட்டத்தையும் பல்வேறு விரிவான கோணங்களில் ஆராய்வது, குறிப்பிடத்தக்கதாகும். உதாரணமாக நாயக்கர்காலம் பின்வரும் தலைப்புக்களில் நோக்கப்பட்டுள்ளது.

1. இக்கால இலக்கியங்களின் தனித்துவப் போக்கு களும் அவற்றை நிர்ணயித்த காரணிகளும்.
2. தமிழிலக்கிய வளர்ச்சியில் சமயச்சார்பு.
3. பள்ளு இலக்கியம் உருவாவதற்குரிய அக்கால சமூக பொருளாதார அரசியல் கலாச்சார ஆதிக்கங்கள்.
4. காவியங்களின் வளர்ச்சி தேக்கமடைந்ததற்கான காரணங்கள்.
5. சோழர்கால - நாயக்கர்கால இலக்கியங்களுக்கு இடையிலான ஒற்றுமை வேற்றுமைகள்.
6. கி.பி 16ஆம் நூற்றாண்டில் இருந்து தமிழிலக்கிய வளர்ச்சியில் புதிய போக்குகள் ஏற்படுவதற்கான காரணங்கள்.
7. இஸ்லாமியத் தமிழர்களின் தமிழ்ப்பணி.[21]

இந்நூலில் இடம்பெறும் காலப்பகுப்புக்களும் பேராசிரியர். வி. செல்வநாயகத்தைப் பின்பற் றியே அமைக்கப்பட்டுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12. கட்டுரை

ஈழத்தவர்களின் இலக்கிய வரலாற்று நூல்கள் மாத்திரமன்றிச் சில கட்டுரைகளும் தமிழிலக்கிய வரலாறு எழுதும் முயற்சியில் முக்கியத்துவம் வாய்ந்த செய்திகளை வெளிப்படுத்தி உள்ளன. இவ்வகையிற் பேராசிரியர் அ. சண்முகதாஸின் 'இப்படியும் பிரிக்கலாமா?' என்னும் கட்டுரை முக்கியமானதாகும். இக்கட்டுரையில் வி. செல்வநாயகத்தின் காலப்பகுப்பிலுள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டிய அவர் அவற்றுக்கான தீர்வுகளையும் முன்வைக்கிறார். செல்வநாயகத்தின் முதலிரு காலப்பகுதிகளும் சங்கம் என்னும் நிறுவனத்தையும் (சங்க, சங்கமருவிய காலங்கள்) 20ஆம் நூற்றாண்டு தவிர்ந்த ஏனையவை ஆட்சியாளர் பெயர்களையும் (பல்லவ, சோழ, நாயக்க, ஐரோப்பிய காலங்கள்) அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கின்றன. இதனால் அவை ஒருமைத் தன்மையின்றிக் காணப்படுவதை எடுத்துக் காட்டிய அவர் அதற்கான தீர்வினை,

"சங்க காலத்தை மூவேந்தர் காலம் எனவும் சங்கமருவிய காலத்தைக் களப்பிரர்காலம் எனவும் பெயரிட்டுப் பிரித்தால் தமிழிலக்கிய வரலாற்றினை அரசியல் அடிப்படையிற் பிரித்தலுக்குப் பூரணத்துவம் அளிக்குமெனக் கொள்ளலாம் என முன் வைக்கிறார்.

அடிக்குறிப்புக்கள்

8. பூலோகசிங்கம், பொ. தமிழிலக்கியத்தில் ஈழத்தறிஞரின் பெரு முயற்சிகள், கலைவாணி புத்தகநிலையம், யாழ்ப்பாணம் - கண்டி 1970. பக் 261.

9. பூபாலபிள்ளை . ச, தமிழ் வரலாறு, சுத்தாத்வைத யந்திரசாலை, மட்டுநகர் 1920. பக் 219 - 22).

10. தாமோதரம். சி.வை. தாமோதரம்பிள்ளை பதிப்புரைகளின் தொகுப்பு, யாழ்ப்பாணம் கூட்டுறவுத் தமிழ்நூற்பதிப்புக் கழகம், யாழ்ப்பாணம், 1971, பக் 19 - 23.

11. இக்காலப்பகுப்பு கா. சிவத்தம்பியின் தமிழில் இலக்கிய வரலாறு நூலிலிருந்து பெறப்படுகிறது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டெட், சென்னை. 1988, பக் 255.

12. செல்வநாயகம். வி, தமிழ் இலக்கிய வரலாறு.

13. இவ்விடயம் பற்றிய மேலதிக தகவலுக்கு ம.பா மகாலிங்கசிவத்தின் "அண்மைக் காலத் தமிழக இலக்கிய வரலாற்றாசிரியர்களால் இருட்டடிப்புச் செய்யப்படும் பேராசிரியர் வி. செல்வநாயகம்" என்னும் கட்டுரை பார்க்க வணிகநாதம் - ஸ்கந்தவரோதயக்கல்லூரி சிறப்பு மலர், சுன்னாகம். (2005, பக். 75 -77)

14. மேற்படி.

## இனத்தின் துடிப்பு

பரபரப்பான காலை நேரம் நானும்
அன்றாட அலுவல்களில்
மும்முரமாய்.....

சர்வமும் பரபரத்த வேளையில்
காகக்கூட்டமொன்று
வீதியில் விலத்த முடியாதபடி
கரைந்து அழுது
குந்திப் பறந்தது;


அடிபட்ட காக்கையைச் சூழ
ஆதரவுக் குரலோடு
அனைத்துக் காகங்களும்
அரணாகக் காவலிட்டன.


இனத்தின் துடிப்பு
இதயத்தை வருட...
எனக்குள் ஏக்கம்,
எம்மினத்தை எண்ண

S. மதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஓவியச் சிற்பக் கலைஞர்

கந்தரோடை

# திரு. பொ. பசுபதி

நேர்காணல்

திரு.த. அருள்குமரன்

சுன்னாகம் கந்தரோடை வீதியில் ஆலடிக்கு அருகாமையில் வசிக்கும் இளைப்பாறிய தபாலதிபர் திரு. பொன்னர் பசுபதி அவர்கள் ஓவியம், சிற்பம், சோதிடக்கலைகளில் சுய ஆர்வங் கொண்டு பல்வேறு படைப்புக்களை உருவாக்கி தனது இல்லத்தில் காட்சிப்படுத்தியுள்ளார். இவரை 'வெள்ளிமலை' சஞ்சிகை சார்பாகச் சந்தித்தோம்.

வெள்ளிமலை வாசகர்களுக்காக அவர் நம்முடன் பகிர்ந்து கொண்ட கலை அனுபவங்களை இங்கே தருகின்றோம்.

நேர்காணலை வழங்குபவர் யா / மானிப்பாய் இந்துக்கல்லூரி நாடகத்துறை ஆசிரியர் திரு. த. அருள்குமரன் அவர்கள்.

**அருள்:-** வணக்கம் திரு. பசுபதி அவர்களே. உங்களைச் சூழ அழகிய பலவர்ணப் படங்கள் காட்சியளிக்கின்றன. பிரதிமைகள், அழகிய சூழல் விபரிப்புகள், ஆழிப் பேரலைக் காட்சிகள் தைலவர்ண கலவையில் இயற்கையை அப்படியே தத்ரூபமாகக் காட்சிப்படுத்தி உங்களது ஆக்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றை உருவாக்கிய உங்களது வாழ்க்கைப் பின்னணி பற்றிக் குறிப்பிட முடியுமா?

**பசுபதி:-** நன்றி... என்னுடைய கலைத்துறை ஈடுபாடு என்பது பள்ளிப் பருவத்திலிருந்தே உருவாகியது எனக் கூற முடியும். நான் அளவெட்டி தெற்கில் 15.12.1938ல் பிறந்தேன். ஆரம்பக் கல்வியை அளவெட்டி அருணாசலம் வித்தியாசாலையில் பெற்றேன். தரம் - 05க்கு மேல் HSC வகுப்பு வரை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் கற்றேன்.

அக்காலத்தில் சிலேற் பாவனையில் இருந்தது. ஆரம்ப பாடசாலைகளில் எழுதுவதற்கும், படங்கள் கீறிப் பழகுவதற்கும் சிலேற்றும் அதற்கான பென்சிலும் உபயோகமாயின. கனிஷ்ட வகுப்புக்களில் சித்திரம் கீற ஆசிரியர்கள் கற்பித்தார்கள். நானும் சிலேற்றில் சப்பறம், யாழி, மிருகங்கள் என பலவற்றைக் கீறி சேதுப்பிள்ளை ரீச்சரிடம் காட்டுவேன். அவா எனக்கு சித்திரம் படிப்பித்தவா. அவற்றைப் பாராட்டுவதுடன் எல்லா வகுப்புப் பிள்ளைகளுக்கும் காட்டுவா. இதனால் ஊக்கப்படுத்தப்பட்டு மேலும் இதில் ஈடுபட்டேன்.

**அருள்:-** கிராமப் பின்னணியைக் கொண்ட உங்களுக்கு பாடசாலைப் பருவத்திலும் சித்திரம் கற்றலுக்கான சூழ்நிலை ஏற்பட்டதா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுபதி:- அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் தான் என்னுடைய இடைநிலை, உயர்நிலை கல்வியைப் பெற்றேன். அங்கும் எனது சித்திரபாட ஆர்வம் மேலும் வளரக் கூடிய வாய்ப்புகளே அமைந்தன. சித்திரப்போட்டிகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புக்கள் வந்தன. ஆசிரியர்களின் ஊக்குவிப்பால் கலந்து கொண்டு பரிசில்கள் பெற்றுள்ளேன். 1956ம் ஆண்டில் கொழும்பில் நடைபெற்ற Royal Agricultural and Food Exhibition இல் கலந்து கொண்டு மூன்று பரிசில்களைப் பெற்றேன். சில்வர் மெடல், கிண்ணம், சான்றிதழ் கிடைத்தன. தொடர்ந்து எனது சித்திர ஆசிரியரான திருமதி யோகேந்திரம் அவர்களுடைய ஊக்குவிப்பினால் பாடசாலை ஓவியக் கழகத் தலைவராக இருந்து சித்திரக் கண்காட்சி ஒன்றை 1959ல் ஒழுங்குபடுத்தினோம். ஏனைய மாணவர்களுடைய ஆக்கங்களையும் காட்சிப்படுத்தியதோடு எனது பல ஆக்கங்களும் இதில் இடம் பெற்றன.

நல்ல வரவேற்பைப் பெற்று இருவாரங்கள் வரை நீடித்து நடந்து இறுதியில் கலைவிழாவாக நிறைவுபெற்றது.

ஸ்கந்தவரோதயக் கல்லூரி சித்திரப் பாட ஆசிரியராக இருந்த திரு. எஸ்.பொன்னம்பலம் அவர்கள் எனக்கு வழங்கிய ஊக்கம் முக்கியமான வளர்ச்சிக் காரணியாக இருந்தது. யாழ் நகர மண்டபத்தில் (Town Hall) இடம் பெற்ற சித்திரக் கண்காட்சியில் எனது ஆக்கங்களை இடம் பெறச்செய்தார். வீரகேசரி பத்திரிகையிலும், கலைச்செல்வி சஞ்சிகையிலும் இக்கண்காட்சி பற்றி பாராட்டிச் செய்திகள் இடம்பெற்றன. இது உற்சாகமளித்து நம்பிக்கையை எனக்குள் ஊட்டியது. இதன் வெற்றியைப் பாராட்டி ஊரிலும் விழா எடுத்துக் கௌரவித்தார்கள்.



அருள்:- பாடசாலைக் கல்விக்கூடாக மனமகிழ்ச்சிக்குரிய ஒரு கலையில் பயிற்சியைப் பெற்று பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றுக் கொண்ட நீங்கள் ஓவியத்துறையையே வாழ்க்கை வருமானத்துக்கான தொழிலாகவும் வளர்த்துக் கொண்டீர்களா?

பசுபதி:- கனவுகளிலும் கற்பனைகளிலும் மிதந்து கொண்டிருப்பதில்லை வாழ்க்கை. கல்லூரி படிப்புக் காலத்தைத் தொடர்ந்து உடனடியாகவே தொழில் முயற்சி தேடும் முயற்சியில் எனக்கு வெற்றி கிடைத்தது. தபாலதிபராக கடமையில் ஈடுபட இங்கிருந்து கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு எனச் செல்ல வேண்டி ஏற்பட்டது. அதனால் ஓவியத்துறை ஆர்வத்தை மேம்படுத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. கொழும்பில் சிறிய அறையில் மூவர் தங்கியிருக்க வேண்டிய நிலையில், தொழில் முடிந்து திரும்பிய களைப்புடன் மனதை ஒருமுகப்படுத்தி ஓவியத்தில் சிரத்தைப் படமுடியாதிருந்தது. ஒருபடத்தை வரைய நீண்ட காலம் தேவைப்பட்டது. அவ்வாறு வரைந்த சில படங்களை நண்பர்களுக்குக் காட்டுவேன். அவர்கள் தமது வீட்டில் காட்சிப்படுத்த விரும்பி வாங்குவார்கள். இயற்கைக் காட்சிகளையே அதிகம் வரைவதில் ஈடுபாடு காட்டினேன். அவ்வாறான ஓரிரண்டு ஓவியங்களை எனது நண்பர் ஒருவர் கொள்ளுப்பிட்டியில் உள்ள நியூகோப்ஸ் என்னும் கடையை நடாத்திய "பாய்" ஒருவரிடம் காட்டினார். அவற்றைப் பாராட்டிய அம்முதலாளி என்னைக் கூப்பிட்டு ஊக்கப்படுத்தி, தமது கடையில் விற்பதற்கு இவ்வாறான படங்களைக்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கீறித் தருமாறு கேட்டார். ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி சிலகாலம் அவருக்குப் படங்கள் கீறிக் கொடுத்தேன். சன்மானங்கள் கிடைத்தன. இடமாற்றங்கள் காரணமாக நீடித்து வாய்ப்பைப் பயன்படுத்த முடியவில்லை.

ஆயினும், நண்பர்களின் வேண்டுகோளுக்காகவும், என்னை மகிழ்ச்சியுடன் இருக்க உதவுவதாலும் இயற்கை சார்ந்த படங்களை வரைந்து கொண்டே இருக்கிறேன்.

யுத்தத்தினால் பல முறை இடம் பெயர நேரிட்ட போதெல்லாம் எனது முன்னைய ஓவியங்கள் பல அழிய நேரிட்டுவிட்டன. ஓய்வு பெற்ற பின்பு கந்தரோடையில் வீட்டில் மீண்டும் பல படங்களை வரைந்து வைத்திருக்கின்றேன்.

**அருள்:-** உங்களது கலைக்கூடத்தைப் பார்வையிடும் போது சில அருமையான சிற்பங்களைக் காணக் கூடியதாக உள்ளது. ஓவியத்துறை போலவே சிற்பத்துறையிலும் உங்களின் மனவெளிப்பாடுகள் பற்றி.....

**பசுபதி:-** ஓவியக்கலை போலவே சிறுவயதில் களிமண்ணைப் பயன்படுத்தி பல்வேறு உருவங்களை செய்ய பாடசாலை ஆசிரியர்கள் ஊக்குவித்தார்கள். அதன் காரணமாகவும் இயல்பாகக் கொண்ட ஊக்கம் காரணமாகவும் பல உருவங்களைச் செய்து வந்தேன்.




காலப்போக்கில் நுட்பமும் நுண்மையும் கொண்ட கலைத்துவமுடையனவாக மெருகூட்ட முயன்று ஓரளவு வெற்றி பெற்றிருக்கின்றேன் என நினைக்கின்றேன். இடம்பெயர்வின் போது பல படைப்புக்கள் அழிந்து விட்டன. இவை கூட சிதைந்த நிலையில் மீட்டு மீண்டும் ஒட்டவைத்துக் காப்பாற்றி வருகின்றேன். கலைஞனுக்கு அவனது ஒவ்வொரு படைப்பும் புதிய அனுபவத்தை ஏற்படுத்தும். அவன் மனத்தில் எவ்வாறு இருக்கிறானோ அவ்விதமாகவே அவனது படைப்புக்களும் அமையும். பார்த்தவற்றை மீளச் செய்துபார்க்க வேண்டுமென்ற ஆர்வத்தால் ஓவியம் சிற்பம் என முயன்று பார்க்கிறேன். நன்றாக உள்ளன என நான்குபேர் பாராட்டும் போது அவர்களை மகிழ்ச்சிப்படுத்தி நானும் மகிழ்கிறேன். இதுவே அடிப்படை.

**அருள்:-** இயற்கைச் சூழலில், சண்டையிடும் இரு மாடுகள், கரைவலை இழுக்கும் கடற்கரைக்காட்சி, கிராமிய தெருவும் ஆற்றுப் பாலமும் பயணிகளும், ஜன்னலோரக் கன்னி, சிந்துபாடும் சிற்றாறு, பால் தரும் பசுக்கன்றுக்கே பால் பருக்கும் பாலகன், நீரோடையும் நீரருந்தும் மான்களும், பூவை ரசிக்கும் பூவை, கிள்ளையைக் கையில் ஏந்தும் பிள்ளை, பாய்விரித்து படகோட்டும் காட்சி, ஆற்றுக்குள் ஆனைகள் கிராமக் குடியிருப்பு, ஆழிக்கரையோரம், ஓரப்பார்வையில் ஒரு செய்தி, தேர்த்திருவிழா, ஆழியும் அழிவும் நீராடும் மங்கை, என்று எத்தனை எத்தனை தலைப்புக்களில் இயற்கை எழில் கொஞ்சும் படைப்புக்களை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்கியுள்ளீர்கள். ஓவியத்தில் காணும் உணர்ச்சிகளையும் ஓவியத்தைக் கண்டதால் நாங்கள் அடையும் உணர்ச்சிகளையும் ஓரிரு வார்த்தைகளால் கூறமுடியாது. ஆனால் உங்கள் தூரிகையின் மொழி பயின்று வந்ததல்ல. அது உங்கள் ஆத்மாவின் மொழி இதயத்து மொழி என்று கூறலாமெனக் கருதுகின்றேன். உங்கள் கருத்து என்ன?

பசுபதி:- எனது படைப்புகள் அனேகமாக இயற்கைக் காட்சிகளாகவே அமைந்துள்ளன. இது அழகுக் கலையாகவே அமைந்தாலும் அதனூடாக ஒரு செய்தியைச் சொல்வனவாகவே உருப்பெற்றுள்ளன. மனமது செம்மையானால் எமது மொழியும் செம்மையாகவே அமையும். உள்ளத்தில் வெறுப்பும் கோபமும் இருக்கும் போது இனிய சொற்கள் பிறப்பது அரிது. உயிரோவியம் என்பதும் ஓவியத்துக்கும் உயிர் இருக்க வேண்டும். உயிர் இருந்தால் தான் அங்கு உணர்ச்சிகள் பேசும். எனது வாழ்க்கை தெளிந்த நீரோடை போல் அமைய எனது மனைவி, பிள்ளைகள், விருப்புடன் செய்த தொழில், என் உற்றார், உறவினர்கள் ஊக்குவித்த ஆசான்கள், ஊரவர்கள் எல்லாமே நன்றாக அமைந்தமையால் இது வரை இவற்றையெல்லாம் உருவாக்க முடிந்தது.



அருள்:- யதார்த்தப் படைப்புக்கள் உள்ளதை உள்ளபடி உரைப்பவையாகும். உங்கள் பணி இதுவாகவே இருப்பதாக கூறுகின்றீர்கள். கலைஞர்களுக்கு அழகு கற்பனையையும் காட்சியையும் இணைப்பதல்லவா. ஓவியம் சிற்பம் தவிர வேறெந்தக் கலைகளில் உங்களின் ஈடுபாடுகள் இருக்கின்றன?

பசுபதி:- பொதுவாக மரபு சார்ந்த அம்சங்களே எனது படைப்புக்கள். நவீன பாணியிலமைந்த ஓவியங்களை, சிற்பங்களை, இலக்கியங்களை ரசிப்பதற்கு முயல்வேன். காத்திரமான கருத்துக்களை ஓவியத்தின் சில கோடுகளாலும் வர்ணங்களாலும் பார்ப்பவனிடம் தொற்றிக் கொள்ளச் செய்ய முடியும் என்பதே ஓவிய அடிப்படை.

என்னைப் பொறுத்தவரை கவிதையிலும் சோதிடத்திலும் ஈடுபாடு உண்டு. அளவெட்டி பண்டிதர் நாகலிங்கத்திடம் கல்லூரியில் தமிழ் பயின்றவன். இலக்கியங்களை உணர்ச்சி பொங்க பாடிப் பொருள் கூறி ரசிக்கச் செய்து கற்பித்தவர் அவர். அந்த அருட்டலின் காரணமாக கவிதைகள் எழுதுவேன். அக்காலத்தில் பத்திரிகை சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. அவற்றைச் சேகரித்து வைத்திருந்தேன். இடம்பெயர்வின் போது வீட்டிலிருந்தவை தவறிவிட்டன. ஆலய ஊஞ்சற் பாக்கள், திருமண வாழ்த்துக்கள், கல்வித்தேவைக்கான கவிதைகள் என இப்பொழுதும் எழுதுவதுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


எனது குடும்பத்தினரின் வாழ்க்கையில் சோதிடரீதியில் கூறப்பட்ட செய்திகள் பின்பு நடைபெற்றபோது அவற்றையிட்டு ஆராயத் தலைப்பட்டேன். ஒரு சம்பவம் நடைபெறுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே எதிர்வு கூற சோதிடத்தில் முடிவதையிட்டு கண்டறிந்ததைத் தொடர்ந்து பல சோதிட நூல்கள், சஞ்சிகைகளைப் படித்து, சோதிடர்களின் அனுபவங்களை கேட்டறிந்து சந்தேகங்களை தீர்த்துக் கொண்டேன்.

அதன் பின் அளவெட்டி சோதிடர் திரு.மு. சின்னப்பு அவர்களிடம் சோதிடம் பயின்றேன். மேலும் யாழ் பல்கலைக்கழக புறநிலைப்படிப்புக்கள் அலகில் சோதிடப் பயிற்சிகளைப் பெற்றுக் கொண்டேன்.

சுய ஆர்வத்தை முதலீடாகக் கொண்டு பல நூல்களினூடாக சோதிட அறிவை வளர்த்துக் கொண்டு இப்பொழுது என்னை நாடி வந்து சோதிடம் பார்ப்பவர்களுக்கு பலன் கூறுகின்றேன்.

**அருவ்:-** இக்கலைகளை உங்களிடம் பயில யாராவது முன்வந்துள்ளார்களா?

**பசுபதி:-** தற்காலக் கல்வி முறையில் குருவிடம் சென்று கற்கும் நிலை இல்லையல்லவா. தொழிலைக் குறித்துக் கற்பவர்களும், எதையாவது கற்ற பின்னர் கிடைக்கும் தொழிலைச் செய்பவரும் தான் பெரும்பான்மையாகவுள்ளனர். சிற்பம், ஓவியம், சோதிடம் என்பவற்றை கற்க யாராவது முன் வந்தால் சொல்லிக் கொடுக்க விருப்பம் இருக்கிறது. ஆர்வம் தான் எச் செயலாளிக்கும் அவசியம். இறையருள் இருந்தால் எல்லாம் இனியவையாக அமையும் என்று நம்புகின்றேன்.




**அருவ்:-** வாசகர்களுக்கு இந்நேர்காணல் மூலம் நீங்கள் விடுக்கும் செய்தி ஏதாவது.......

**பசுபதி:-** நம்முடன் வாழ்ந்து கொண்டிருக்கும் கலைஞர்களையும் மறைந்த மேதைகளையும் அடையாளங்கண்டு, - கலைஞனின் அடையாளம் என்பது அவனது படைப்புக்களேயாகும். - அவர்களைக் கௌரவிப்பதுடன் புதியவர்களை ஊக்கப்படுத்துவதும் அவசியம். "ஒரு கலைப்படைப்பு நமது வரவேற்பறையில் மாட்டிவைக்க கூடிய ஒரு அலங்காரப் பொருள் மட்டுமல்ல - அது அதனிலும் மேம்பட்ட ஒன்று என்பதை புரிந்து கொள்ள வேண்டுமென எழுத்தாளரும் கலைஞருமான இந்திரன் கூறியிருப்பதை நினைவுபடுத்த விரும்புகின்றேன்.

கலைப்படைப்புக்கள் அவ்வக்கால மக்களின் பண்பாட்டை, வரலாற்றை, மனப்பதிவுகளை வெவ்வேறு ஊடகங்களினூடாக அடுத்த சந்ததிக்கு என கடத்தி செல்ல உதவுகின்றன என்பதால் இவ்வாறு ஆவணப்படுத்த, எடுத்துச் சொல்ல, வெளிக்காட்ட முன்வந்துள்ளமைக்கு நன்றிகளைக் கூறவிரும்புகின்றேன். ■


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் வங்கி: ஐம்பது ஆண்டுகால மகத்தான சேவைகள்



சு. இராசமனோகரன்
முகாமையாளர்,
மக்கள் வங்கி சுன்னாகம்

சமூகத்தில் வசதி படைத்தவர்களின் ஆதரவுடன் பிரசித்தி பெற்ற 'பரிமாற்றல் வங்கிகள்' மற்றும் மதிப்பு வாய்ந்த வங்கிகளே வங்கித் தொழிலில் உள்ளடக்கப்பட்டிருந்தன. இக்கால கட்டத்திலேயே மத்திய வங்கியின் ஆளுநர் சேர் ஆர்தர் ரணசிங்க மற்றும் அவர் சக பணியாளர் களின் செயல் திட்டத்தின் கீழ் "மக்கள் வங்கி" என்ற பெயரில் 1961ஆம் ஆண்டு யூலை மாதம் 1ம் திகதி இவ் வங்கி ஆரம்பிக்கப்பட்டது.

"தோன்றில் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்ற வாக்கிற்கு அமைவாக மக்கள் வங்கியானது தனது மகத்தான சேவைகளை ஆற்ற ஆரம்பித்தது. மக்கள் வங்கியானது வசதி படைத்தவர்களிற்கு மட்டும் அல்லாது சாதாரண மக்களுக்கான வங்கியாகவும் அவர்களின் வாழ்க்கை நலன் கருதியும் ஆரம்பிக்கப்பட்டது எனக் கூறின் அது மிகையாகாது. அந்த வகையிலே 1962இல் இருந்து அடகு துறையில் முன்னோடியாகவும் 1964 இல் கிராமிய வங்கி முறையின் முன்னோடியாகவும் திகழ்கின்றது. 1993இல் இந் நாட்டின் வங்கிகளிற்கிடையே முதல் தடவையாக பெண்களுக்கான சேமிப்புக்கணக்கு ஒன்று என பல்வேறுபட்ட கணக்குகள் ஆரம்பிக்கப்பட்டன.

சின்ன வயதில் அப்பா எனக்குச் சொல்லி இருக்கிறார் "சிறு துளி பெரு வெள்ளம்" என்று அத்தனை பெரு வெள்ளத்தினை அணைக்கட்டி காவல் காக்கும் காவலனாக முடிசூடா மன்னனாக திகழ்கின்ற வங்கி "மக்கள் வங்கி" ஆகும். உலகின் அழகிய தீவான இலங்கை வளமான நாடு. அதனுள் செழிப்பான பிரதேசம் யாழ்ப்பாணம். இதில் வர்த்தக மையங்கள் இரண்டு.

01. யாழ்ப்பாணம்
02. சுன்னாகம்.

வணிகர்களின் சலசலப்புடன் மாளிகை போலக் கட்டிடங்களும் வணிக நிறுவனங்களும் விளங்க பல்வேறு தனியார் வங்கிகள் உருவாகிய போதும் வைரமாக மிளிர்கின்றாள் "மக்கள் வங்கி" மாதா. அன்றைய காலத்து கிழவிமார் முந்தானையில் காசை முடித்து தம் கற்பைக் காப்பது போல காசையும் நாணயமாக்கக் காப்பார்கள். அது போலத்தான் நம் வங்கியும்.....

"தேவை நிறைவேற பணம் தேவை, பணத் தேவை நிறைவேற எம் சேவை தேவை" 'கணக்குகள் ஆயிரம் நீங்கள் தொடங்கி வனப்புக்கள் கோடி பெற' என்று தொடங்கிய மக்கள் வங்கி இன்று கடன், அடகு சேவை, ATM வசதிகள், நடமாடும் சேவை பணப்பரிமாற்றம், Online Banking SMS Banking, என்ற ஆயிரம் சேவைகளை அள்ளி வழங்குகிறது. எங்கு இருந்தாலும் பணத்தை உடனடியாக வைப்பு செய்யவும் பணம் மீள எடுப்பதற்கும் இவ்வங்கி முக்கியம் வகிக்கிறது.

சிறுவர்களின் சேமிப்பு பழக்கத்தை அதிகரிக்க என்று "இசுறு", "சிசு உதான" கணக்கு. 18 வயது இளைஞர்களுக்காக அறிமுகம் செய்த கணக்கு "Yes" மகளிருக்காக "வனித வாசன"



உடுவில் மகளிர் கல்லூரி சிசு உதான வங்கி அலகு திறக்கப்பட்டபோது

கணக்கும் முதியோருக்கு பரின சேமிப்புக் கணக்கு, NRFC, எனப் பலவகை கணக்குகள் உள்ளன. பழங்காலம், ஊர் முடக்குகளிலும் சந்திகளிலும் வட்டிக்கு மேல் வட்டி போட்டு ஏழை பாழைகளின் வயிற்றில் தீ மூட்டிய கொடுமைகளை எரிப்பதற்காக எம் மக்கள் வங்கி மாதா அறிமுகம் செய்தாள். "அடகு சேவை" சிறு கைத்தொழில் கூட்டு முயற்சி. கால் நடை வளர்ப்பு இத்தனையும் செழிப்பதற்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கியால் வழங்கப்பட்ட சேவை (Loane) கடன் வசதி. அதனால் உயர்ந்தவர் ஏராளம் ஏராளம். அன்றொரு காலம் உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? நீங்கள் ஆயிரம் ரூபா தாளை ஆடைகளுக்குள் ஒழித்து, மறைத்து கொண்டு திரிந்தீர்கள்! கள்ளர்களுக்கு பயந்து இன்று கோடி ரூபாவையும் கொண்டாட்டமாய் கொண்டு திரியலாம். மக்கள் வங்கியின் "PET Card" இல் எந்த நேரமும் 24 மணி நேரமும் மக்களுக்காக ATM சேவைகள் அட்டையை தள்ளிக் கட்டையை அழுத்தக் கட்டுக்கட்டாய் காசு கைகளிலே கணப் பொழுதிலே கிடைக்கும். விந்தை மிகு சேவைகள் நாம் அதிகம் செலவு செய்தால் அம்மா எப்படி பேசுவாளோ, கண்டிப்பாளோ அப்படித்தான் இந்த PFT அட்டையும் ஒரு நாளுக்கு 40,000 தாளுக்கு அதிகம் வராது.

அடுத்து மக்கள் வங்கியானது தனது பொன் விழா ஆண்டில் செய்த மகத்தான சேவைகளை எடுத்து நோக்கின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை ஒட்டி மடுவை அண்டி 50 வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளோம். யுத்தத்தால் பாதிக்கப்பட்டு மீள் குடியேற்றம் நடந்துவரும் பிரதேசங்களில் சிறுவர் பாடசாலைகள் அமைத்து கொடுத்துள்ளது.


50 ஆவது ஆண்டு பொன்விழாவில் ஒரு காட்சி

இதற்கான முழுச் செலவும் மக்கள் வங்கி ஊழியர்களின் செலவிலேயே அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ் வீடுகள் இன மத பேதமின்றி அனைவரும் அனைத்து வங்கி ஊழியர்கள் முன்னிலையில் அனைத்து இன மக்களுக்கும் வழங்கப்பட்டது. இவற்றினால் மக்கள் வங்கியினது மகத்தான சேவை முன்னெடுக்கப் படுகின்றது.

மக்கள் வங்கியின் இன்னொரு மகத்தான சேவை அண்மைக் கால் கட்டத்திலே கொண்டு வரப்பட்ட திட்டம் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு எந்த ஓர் சிரமமும் இன்றி கடன் வழங்கும் சேவையை இவ் வங்கி முன்னெடுத்து செல்கின்றது என்றால் அது மிகையாகாது. மற்றும் 5ம் தர மாணவர்களுக்கு முன்னோடி பரீட்சைகள் நடாத்தப்பட்டு சிறந்த

ஏழாலை சைவசன்மார்க்க வித்தியாலய புலமைப்பரிசில் சித்தியடைந்த மாணவனுக்கு கௌரவிப்பு



பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு தினக்குரலின் அனுசரணையுடன் வேம்படி மகளிர் கல்லூரியில் பரிசில் வழங்கல் நிகழ்வு மக்கள் வங்கி ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் போது வறுமைக்கு உட்பட்ட மாணவர்கள் மற்றும் பின்தங்கிய பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் கௌரவிக்கப்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் வங்கியானது தனது நோக்காக இலாபம், பணம் என்பன இல்லை என்பதை உறுதிப்படுத்துவதற்காக சமூக சேவை, கல்விச் சேவை, கலாச்சார சேவை போன்றவற்றிற்கு முழுமையான ஆதரவாக விளங்குகின்றது. அண்மைக் காலத்தில் நடைபெற்ற 50ம் ஆண்டு நிறைவு விழாவை முன்னெடுத்து மாத்தளை முத்துமாரி அம்மன் கோயிலில் அனைத்து மாவட்ட மக்கள் வங்கி ஊழியர்களும் சேர்ந்து மக்களின் நன்மை கருதி திருக்கோயில் தரிசனம் செய்தார்கள் என்பது நாம் பத்திரிகை வாயிலாக யாவரும் அறிந்த ஓர் விடயம்.

தமது சமூக சேவையை எடுத்துக் காட்டும் முகமாக இரத்த தானம் மற்றும் புற்று நோயாளிகளுக்காக பாதயாத்திரை, மக்கள் வங்கி ஊழியர்களின் பங்களிப்புடன் பெறப்பட்ட நிதியுதவியில் வழங்கப்பட்டது.

மக்களாகிய அனைவரும் 100% நம்பிக்கையை மக்கள் வங்கி மீது வைப்பது தவறில்லை. ஆனால் 100% பொறுப்பினை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் வங்கி மீது செலுத்துகின்றீர்கள். மக்கள் வங்கி எங்களுடன் ஒருவனாக விளங்குகின்றான். எவ்வாறு எனின் மக்கள் வங்கியின் மகுட வாசகம் அனைத்து மக்களின் உயிர் நாடி அதாவது The Pulse of the People.

"சங்கு சுட.டாலும் வெண்மை தரும்" என்பதற்கு இணங்க பல்வேறு இன்னல்கள் மத்தியில் போர் நடைபெற்ற வன்னி, கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் கூட தனது சேவைக்காக மக்கள் வங்கியானது தலை நிமிர்ந்து நிற்கின்றது. அதுமட்டும் அல்லாது அனைத்து வங்கிகளும் கொண்டுள்ள அனைத்து வசதிகளும் இவ் வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை நாம் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது. மக்கள் வங்கி தனது மகத்தான சேவைக்கால 50வது ஆண்டை குறித்து 1000 ரூபா நாணயகுற்றியும் 5 ரூபா முத்திரையும் தமது ஞாபகக் காணிக்கையாக் குகின்றது. இவை இல்லாது விட்டாலும் மக்கள் வங்கியின் ஞாபக அலை எப்பொழுதும் மக்கள் மத்தியில் இருக்கும். மக்கள் வங்கியானது தலை நிமிர்ந்து எப்போதும் வாழும்.

பல்வேறு வர்த்தக வங்கிகள் இருந்த போதிலும் மக்கள் வங்கியானது தலை நிமிர்ந்து நிற்பதன் முக்கிய காரணம் பழைமை வாய்ந்ததும் மற்றும் அதன் மேல் வைத்துள்ள மக்களின் அசையாத நம்பிக்கையும் ஆகும். மக்கள் வங்கியானது தனது தன்னிகரில்லாச் சேவைகளை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் 13 கிளைகளும் 13 சேவை நிலையங்களும் மொத்தம் 26 மக்கள் வங்கிகளைக் கொண்டு இருப்பதனை காணமுடிகிறது.

சுன்னாகம் மக்கள் வங்கி கிளை ஆனது முதன்மை வங்கியாகத் திகழ்கின்றது. முனியப்பர் கோவில் மணியும் கதிரமலை சிவன் கோயில் மணியும் ரீங்காரம் செய்ய மத்தியில் மக்கள் வங்கி அளப்பெரிய சேவைகளை ஆற்றுகின்றது. அடகு துறையில் முன்னோடியாகவும் கடன் துறையின் முன்னோடியாகவும் மக்களின் மனதைக் கவர்ந்த வங்கியாக சுன்னாகம் மக்கள் வங்கி திகழ்கின்றது.

மக்கள் வங்கி சுன்னாகத்தின் கிளையானது கோப்பாய் பிரதேச மக்களின் சேவை கருதி 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கி சேவையாற்றி வருகின்றது. இவ்வாண்டு பொன் விழாவை ஒட்டி டிசம்பர் மாதம் 7ம் திகதி புதன்கிழமை யாழ் மாவட்டத்தில் இவ்வாண்டு திறக்கப்படும் 27 ஆவது கிளையாக அளவெட்டிக் கிராமத்தில் சேவையை விஸ்தரிக்கவும் உள்ளது. "மக்கள் மனம் அறிந்த வங்கி மக்கள் மனதை வென்ற வங்கியாகவும் மக்களின் தேவையை கருதிச் சேவை ஆற்றும் வங்கியாகவும் இருப்பது அளப்பெரும் சாதனைகளாகும். ■

---

# நினைவலைகள்

சு. திருச்செல்வம்

சுன்னாகம் சந்தியிலிருந்து தெற்குப் பக்கமாக யாழ்ப்பாணம் செல்லும் பாதையில் சிங்கர் தையல் மெசின் கடை இருந்தது. அதன் உரிமையாளர் வடிவேலு என்பவராகும். இவரைச் சிங்கர் மெசின் வடிவேலு என்று அழைப்பார்கள். உயரம் குறைவாக இருந்தாலும் அழகான ஆம்பிளை. கிழமையில் ஒரு நாள் மௌன விரதம் இருப்பார். அந்த நேரம் வாடிக்கையாளருடன் கைச் சைகையாலேயே கருத்துக்களைத் தெரிவிப்பார். நல்லொழுக்கமும் கட்டுப்பாடும் கண்டிப்பும் பண்பாடும் உள்ள நல்ல மனிதர். இவர் தனது மோட்டார் சைக்கிளை மிக விரைவாகவும் லாவகமாகவும் முழுக்கட்டுப்பாட்டுடன் ஓட்டுவார். பார்ப்பவருக்கு மிகவும் ரம்மியமாக இருக்கும். சில வேளைகளில் இரண்டு கால்களையும் ஒரு பக்கத்துக்கு வைத்துக் கொண்டு விரைவாகவும் கட்டுப்பாட்டுடனும் இவர் மோட்டார் சைக்கிளை ஓட்டுவதைப் பார்த்து மக்கள் பிரமிப்பார்கள். இவருடைய கடையில் உதிரிப் பாகங்கள் நியாயமான விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

அடுத்ததாக மதவடிக் காக்கா என அழைக்கப்பட்ட முஸ்லிம் வியாபாரியின் இரும்புக்கடை - அக்காலத்தில் மிகவும் பெரிய இரும்புக்கடை - இதுதான். பின்னர் இக் கிட்டங்கி கடைகாரராகிய டொக்டர் வன்னியசேகரம் இப் பழைய கிட்டங்கிகளை இடித்துப் புதிதாக பெரிய மாடிக் கட்டடம் ஒன்றைக் கட்டினார். இதற்கு சேகரம் பில்டிங் எனப் பெயர் எழுதப்பட்டது. மதவடிக் காக்கா பின்னர் தனது பெரிய கடையைச் சற்றுத் தள்ளி அமைத்துக் கொண்டார். இக்கடையில் சகல இரும்புப் பூட்டுகள் கட்டிட இரும்புகள் இரும்புப் பொருள்கள், பித்தளைப் பிணைச்சல்கள் என்பன பெரிய தொகையில் கடை முட்ட இருக்கும். இவருடைய கடைக்குப் பக்கத்தில் புன்னாலைக் கட்டுவன் பிரபல அரிசி மில்காரரான இராசரத்தினத்தின் அரிசிக் கடை இருந்தது. இதில் ஏழு பெரிய கடைத்தொகுதிகள் இருந்தன. இக் கட்டடங்களுக்குப் பின்னால் பெரிய மில் ஒன்று இருந்தது. இதில் அரிசி குத்தித் தவிடு பிரித்து மூடைகளாகக் கட்டி லொறிகளில் வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களுக்கு அனுப்புவார்கள். இலுப்பெண்ணெய்க் காலங்களில் பெரிய அளவில் இலுப்பெண்ணெய் ஊற்றப்படும். அடுத்த கட்டிடத் தொகுதியில் ஏகாம்பரம் டிஸ்பென்சரியும், பிரின்ஸ் ஸ்ரூடியோ என்று பிரபலமான ஸ்தாபனங்கள் இருந்தன. அந்தக் காலத்தில் உள்ளூர்ப் பென்சனியர்களும் மலாய் நாட்டுப் பென்சனியர்களும் ஏகாம்பரம் டிஸ்பென்சரியில் ஆங்கில மருந்துகளை வந்து வாங்கிக் கொண்டு அங்கிருக்கும் ஆங்கில தினசரிகளான Morning Times, Daily News முதலியவற்றை வாசித்துவிட்டுத் திரு. ஏகாம்பரம் அவர்களுடன் சிறிது நேரம் கதைத்து விட்டு வீடு செல்வார்கள். அடுத்தது பிரின்ஸ் ஸ்ரூடியோ. இதன் முதலாளி திரு நடராசாவாகும். அழகான வசீகரிக்கும் தோற்றமுடையவர். வெள்ளை National சேட்டும் வெள்ளை வேட்டியும் கட்டியிருப்பார். இவருடைய ஸ்ரூடியோவில் அழகான பெண்களின் படங்களும் அழகான ஆண்களின் படங்களும் பெரியதும் சிறியதுமாகக் காட்சிக்கு வைக்கப்பட்டு இருக்கும். இதனால் இப் படங்களில் உள்ள பெண்களுக்கு தங்கு தடையின்றித் திருமணங்கள் நடைபெற்றன. அனேகமாக பெண் ஆசிரியைகளின் படங்களே பல இருந்தன. திரு. நடராசா அவர்கள் மிகச் சிறந்த புகைப்படப்பிடிப்பாளர். படங்களை எடுப்பதிலும் பெரிது பண்ணி - அழகான படங்களை உருவாக்குவதிலும் வல்லவர். ஆரம்ப காலத்தில் இவர் தனியாகத்தான் இந்த ஸ்ரூடியோவை நடத்தினார். வியாபாரம் பெருக வாடிக்கையாளர்கள் கூடக் கூட இரண்டு மூன்று பேரைத் தன் உதவியாளராகச் சேர்த்துக் கொண்டார். திருமணங் களில் புகைப்படம் எடுக்கும் வழக்கம் இவர் காலத்தில் தான் சுன்னாகத்தில் ஏற்பட்டது. இவரும் இவருடைய உதவியாளர்களும் திருமணங்கள், பள்ளிக்கூட வைபவங்கள் முதலியவற்றைப் புகைப்படம் எடுத்தார்கள். நேரத்திற்குப் புகைப்படங்களைக் கழுவி தேவையானவர்களுக்கு கொடுத்ததினால் மிகவும் பிரபலமானது இவரின் பெயரும் இவரின் ஸ்ரூடியோவும் சுன்னாகத்தில் நன்மதிப்பை பெற்று இருந்தன. நல்ல சேவை செய்து வந்தது.

நாகலிங்கச்செட்டியார் தர்மலிங்கச் செட்டியார் என்பவர்களுடைய கடைகள் சந்தையின் முன் காங்கேசன்துறை வீதியில் பெயர் பெற்ற கடைகளாக இருந்தன. சுன்னாகம் பொலிஸ் நிலையக்கட்டிடம் மிகப்பெரிய மேல் மாடிகளுடன் ஐந்து வீடுகளுடன் பெரிய வளவில் இருந்தது. பொலிஸ் இன்ஸ்பெக்டர் குவாட்டர்ஸ், பொலிஸ் காரியாலயத்துக்குப் பின் ஐந்து பொலிஸ் சார்ஜன்ட் மற்றும் பொலிஸ் குடும்ப வீடுகள் இருந்தன. பொலிஸ் ஸ்ரேசன் மேல்மாடியில் கல்யாணம் கட்டாத பொலிஸ்காரரின் குவாட்டர்ஸ் இருந்தது. பொலிஸ் ஸ்ரேசன் பின் பக்கத்தில் பெரிய கைப்பந்தாட்ட மைதானமும் பார்வையாளர் பலர் நின்று பார்க்க வசதியாகப் பெரிய வெளியும் இருந்தது. மாலை நேரத்தில் பொலிஸ்காரரும் சுன்னாகம் வாசிகளும் கைப்பந்தாட்டம் விளையாடுவார்கள். அப்போது பொலிஸ்காரர் களுக்கும் பொது மக்களுக்கும் நல்ல உறவு இருந்தது. பொலிஸ்காரரின் மேலாதிக்கம் அப்போது இருக்கவில்லை. பொலிஸ்காரர்களும் பொது மக்களும் விளையாடும்போது பலர் இவர்களுடைய விளையாட்டை ரசித்துப் பார்ப்பார்கள். கைப்பந்தாட்டத்தின் தரம் அப்போது மிகவும் சிறப்பாக இருந்தது. இதனால் பொது மக்கள் பலர் சிறந்த கைப்பந்தாட்ட வீரர்களாக உருவானார்கள் பொதுமக்கள் பொலிஸ் உறவு சிறந்ததாக இருந்தது. சுன்னாகத்தில் சிறந்த கைப்பந்தாட்ட வீரர்கள் உருவாகுவதற்கு சுன்னாகம் பொலிஸ் நிலையமும் ஒரு காரணமாக இருந்தது. இந்த பொலிஸ் நிலைய வளாகம் பெரிய காணியில் இருந்தது. இந்த பொலிஸ் ஸ்ரேசன் கட்டிடமும் காணியும் தர்மலிங்கச்செட்டியாருக்கு சொந்தமாக இருந்தது. அவர்தான் அப் பெரிய காணியில் பெரிய பொலிஸ் ஸ்ரேசன் கட்டடிடத்தைக் கட்டினார். பொலிஸ்ரேசன் பக்கத்தில்தான் தர்மலிங்கச் செட்டியாரின் கல்வீடும் இருந்தது.

நாகலிங்கச்செட்டியாரும் பிரபல வர்த்தகராக இருந்தவர். இவரின் கடைக்குப் பின்னால் இவருடைய பெரிய கல்வீடு இருந்தது. இரு செட்டியார்களும் சீரும் சிறப்புடன் செல்வந்தர்களாக வாழ்ந்தார்கள்.



காங்கேசன்துறை வீதியில் சரவணைகடை பிரபல சாப்பாட்டுக்கடையாக இருந்தது. இதேபோல் ஆசைப்பிள்ளை தேனீர் சாப்பாட்டுக்கடை, சிவசம்பு தேனீர்கடை, முத்தையா தேனீர்க்கடை, தியாகர் தேனீர்க்கடை, ஐயர் தேனீர்க்கடை பிரபலமாக இருந்த போசனக் கடைகளாகும். அத்துடன் பிராமணக்கிளப் சாப்பாட்டுக்கடையொன்றும் இருந்தது. காங்கேசன்துறை வீதியில் சரவணை தேனீர் சாப்பாட்டுக்கடை, சிவசம்பு தேனீர்க்கடையும் பிரபலமான கடைகள். ஆசைப்பிள்ளை கடை காங்கேசன்துறை வீதியில் மீன்கடைக்குப் போகும் வீதியில் இருந்தது. இதுவும் பிரபலமான தேனீர் சாப்பாட்டுக்கடை. சந்திக்கு அருகில் கந்தரோடை றோட்டில் முத்தையா தேனீர்க்கடை இருந்தது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திக்கு அருகாமையில் ஸ்ரேசன் வீதியில் பிராமணாள் கிளப் தேனீர் சாப்பாட்டுக்கடை இருந்தது. இதை நடத்தியவர் கந்தரோடையைச் சேர்ந்த பிராமணர். சுத்த சைவக்கடை. கடும் சைவர்கள், படித்தவர்கள் மாத்திரம் இங்கு தேனீர் அருந்தவோ சாப்பிடவோ செல்வார்கள். இக்கடையில் இட்டலி மிகவும் பிரபலமானது. மிகவும் மென்மையாக இருக்கும்; தோசையும் நன்றாக இருக்கும்.

சரவணை கடை, ஆசைப்பிள்ளை கடை மாமிசப் போசனத்துக்குப் பேர் போனவை. சிவசம்பு கடையும் முத்தையா கடையும் தேனீரும் பலகாரமும் மாத்திரம் பெறக்கூடிய கடைகளாகும். இதேமாதிரி தியாகர் கடையும் தேனீரும் பலகாரமும் பெறக்கூடிய கடைகளாகும். இன்னும் ஒரு பிரபலமான தேனீர்க்கடை ஐயர் கடையாகும். இதன் உரிமை யாளர்கள் இராமலிங்கக் குருக்களும் அவர் மகன் தங்கராசா ஐயரும் ஆகும். எந்த நேரமும் கலகலப்பாக இருக்கும் கடை இது. வண்டில்காரர் லொறிக்காரர் இங்கு வந்து தமது தாக சாந்தியையும் பசியையும் போக்குவார்கள். விடிய விடிய இரவில் திறந்திருக்கும் தேனீர்கடை இந்த ஐயர் கடை யாகும். இரவில் படம் முதல் காட்சி இரண்டாம் காட்சி பார்த்துவிட்டு வருபவர்களுக்கு இக்கடையில் பெரிய கிடாரத்தில் பிளேன் ரீ கொதித்தபடி தயாராக இறக்கி வைக்கப்பட்டு இருக்கும். பால் தேத்தண்ணீர் காரருக்கு தேனீரில் பாலைக்கலந்து கொடுப்பார்கள். மணல் அள்ளப்போகும் லொறிக்காரர்களும் மணல் அள்ளிக்கொண்டுவரும் லொறிக்காரர்களும் உண்ண வசதியாக தேனீரும் சாப்பாடு இடியப்பம் பிட்டு தோசையுடன் கடலை வடை, உழுந்து வடையும் இரவு பகல் முழு நேரமும் கிடைக்கும். இதுதான் சுன்னாகத்தில் இருந்த இரவு பகல் முழு நேரக்கடையாகும். இதன் சேவை அளப் பெரியது. மகத்துவமானது. இப்போது இந்தக்கடைகள் ஒன்றும் இல்லை. எல்லாம் மூடப்பட்டுவிட்டது.

செட்டியார்களுடைய கடைகளைவிட பலசரக்கு கடை வைத்திருந்த வைத்தியலிங்கம் கடை கந்தசுவாமிகடை, நாகலிங்கம் கடை, பொன்னுத்துரை கடை, நாகலிங்கம் மாஸ்டரின் பலசரக்கு கடையும் புத்தகசாலையும் இருந்தது. இதில் வைத்திலிங்கம் கடை, நாகலிங்கம் கடை, கந்தசுவாமி கடை காங்கேசன்துறை வீதியில் இருந்து மீன் கடைக்குப் போகும் றோட்டில் இருந்தன. மூன்றும் பிரபலமாக இயங்கி வந்தன. காங்கேசன்துறை வீதியில் சரவண கடைக்குப் பக்கத்தில் பொன்னுத்துரை கடை, நாகலிங்கம் மாஸ்டரின் கடைகளும் இருந்தன. ஸ்ரேசன் றோட்டில் கனகர் கடையென்ற தேனீர்க்கடை சிறிய தென்றாலும் வண்டில்காரர்களும் சவாரி மாட்டு வண்டில்காரர்களும் இங்குதான் வாடிக்கை யாளர்கள். சதாசிவம் பலசரக்கு கடையும் காங்கேசன்துறை வீதியில் பிரபல்யமான கடை.

குயில் முகமட் (பெரியமதவடி காக்காவின்) இரும்புக்கடை மிகவும் பெரியது. இதைப்பற்றி ஏற்கனவே சொல்லப்பட்டது. அப்துல்ஹமீட் என்ற சின்னமதவடிக்காக்காவின் (இருவரும் சகோதரர்கள்) இரும்புக்கடையும் கால் இறாத்தல் அரைறாத்தல் மொகிதீன் அவர்களுடைய இரும்புக்கடையும் வெடிக்காக்கா,அப்பாஸ் வாரியத் அவர்களுடைய இரும்புக் கடைகளும் பிரபலமான கடைகள். இவர்கள் நீண்ட காலமாக கிட்டத்தட்ட முப்பது வருடங்களாக வியாபாரம் செய்து வந்திருக் கின்றார்கள். சந்தைக்குள் பல மணிக் கடைகள் முஸ்லீம்களுக்குச் சொந்தமாக இருந்தன. இதில் சொத்திக்காக்காவின் கடை பிரபலமானது. இவரின் பெயர் தெரியவில்லை. பின்னர் வியாபாரத்தில் பணம் சேர்த்து அலுமினியப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலையொன்றையும் தொடங்கி நடத்தினார். இப்போது இவர்கள் ஒருவரின் கடைகளும் இல்லை. கடைசியாக இருந்த வைத்திலிங்கம் பலசரக்கு கடையும் ஐயரின் தேனீர்க் கடையும் கடைசியாக மூடப்பட்டன.

இரண்டு நவீன பெரிய முடி திருத்தும் கடைகள் இருந்தன. இவற்றில் பெரிய கண்ணாடிகளும் நவீன வசதியான கதிரைகளும் இருந்தன. ஒரு முடி திருத்தும் கடையின் சொந்தக்காரர் சின்னத்தம்பி என்பவராவார். இவரின் கடையில் நாலு ஐந்துபேர் முடி திருத்துதல் சவரம் செய்தல் முதலிய வேலைகளைச் செய்து கொண்டு இருந்தனர். இவர்களுக்குப் பொறுப்பாக சின்னத்தம்பியின் சகோதரியின் மகனான ஐயாத்துரை கடைக்குப் பொறுப்பாக இருந்தார். சின்னத்தம்பி ஊருக்குள் சென்று வயதானவர்கள் சிறிய பிள்ளைகளுக்கு முடி திருத்தும் வேலையை செய்து கொண்டு இருந்தார். இவருடைய சேவை மிகவும் போற்றுதலுக்குரியது. மற்றைய கடையும் சிறந்த சேவையைச் செய்து கொண்டு இருந்தது. இதன் சொந்தக்காரரின் பெயர் பிரபலிக்கமில்லை. சின்னத்தம்பியின் பெயர் பிரபலிக்கமானது. அவரை எல்லோருக்கும் தெரிந்திருந்தது.

ஸ்ரீமுருகன் தேனீர்க்கடை மிகவும் சிறியது. காங்கேசன்துறை வீதியில் இருந்தது. கடை எப்போதும் பளிச்சென்று இருக்கும். நான் நினைக்கிறேன், யாழ்ப்பாணத் திலேயே மிகப்பெரிய வாழைக்குலைகள் தொங்க விடப்பட்டு இருக்கும். கப்பல், கதலி, இதரை வாழைப்பழங்கள் மிகவும் பெரியளவில் இருப்பதினால் காரில் போகும் பணக்காரர்கள் காரை நிறுத்தி இங்கு வாழைப் பழச் சீப்புகளாக வாங்குவார்கள். கல்யாண நிச்சயதார்த்தம், கோவிலுக்கு அர்ச்சனை செய்வ தற்கு இங்குதான் எல்லோரும் வாழைப்பழங்களை சீப்புச் சீப்பாக வாங்குவார்கள். இந்தக் கடையில் தொங்கும் வாழைக்குலைகள் ஐந்து முதல் ஆறடி

மிகுதி 05ம் பக்கத்தில்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்கதை



# உரப்பை

ந. சிறீஸ்கந்தராசா(மில்சிறீ)

நல்ல மழை பொழிந்து தெருவோரம் வெள்ளம் ஓடிக்கொண்டிருந்தது. இப்போதும் சிறுதூறல் விழுந்து கொண்டு தானிருந்தது. சிறுவர்கள் சிலர் அருகில் உள்ள வெள்ளவாய்க்காலில் ஓடும் வெள்ளத்திலே காகிதக் கப்பல் செய்து அதன் மேலே விட்டு அது ஓடும் அழகை ரசித்துக் கொண்டிருந்தனர். அதில் சில கவிழ்ந்தும் போனது. வேறு சில சிறுவர்கள் ஓடும் வெள்ளத்திற்கு தடியால் அடித்து அதில் இருந்து எம்பி எழும் நீரில் நனைந்து அமிழ்வதைப் பார்த்து மனம் மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருந்தனர். கனத்த இதயத்துடன் பேருந்தில் வந்து இறங்கியவுடன் ஐயாத்துரை கண்ட காட்சி இது. கேணிக்கரைச் சந்தியில் வந்து இறங்கியவர் தலையில் உரைப்பையை வைத்து சரி செய்தவாறே கைப்பை ஒன்றையும் தூக்கியபடி கும்பளாவளை கோவிலடி நோக்கி நடக்கலானார்.

* * *

ஐயாத்துரையின் சொந்த ஊர் மாவிட்டபுரம். சொந்த ஊரில் இருந்து முப்பது வருடத்திற்கு முன் கிளிநொச்சிக்கு விவசாயக் காணி பெற்றுச் சென்றவர். அங்கு வசிக்கும்போது இடையிடையே மாவிட்டபுரம் வந்து செல்வார். தொண்ணூறாம் ஆண்டுக்கு பின் அவருக்கு அந்தப் பாக்கியம் கிடைக்கவில்லை. அவருக்கு மட்டுமல்ல ஏனைய அவ்விட மக்களுக்கும் தான். பிரச்சனை தொடங்கிய பின் இன்றும் கூட தெல்லிப்பளைக்கு அங்கால கால் வைக்க ஏலாது. அவருக்கு அளவெட்டியில் நண்பர் ஒருவர் இருந்தார். அவர் தான் சவாரிச் செல்லத்துரை. மிகப் பெரும் சவாரிப் பித்தர். எந்தத் திடலில் சவாரி என்றாலும் அவரும் நிற்பார். அவரும் மாடுகள் வைத்திருந்து சவாரிப் போட்டிகளில் கலந்து பல பரிசில்களைப் பெற்றவர். அவரிடம் தான் ஐயாத்துரையார் போறார். நடந்து கொண்டிருக்கும்போது முகாமில் இருந்து பேருந்தில் அளவெட்டி வந்து சேர்ந்ததை நினைத்துப் பார்க்கிறார்.

* * *

"என்ன ஐயாண்ணை(ஐயாத்துரையை ஐயாண்ணை என்று அழைப்பார்கள்) நீயும் பதிஞ்சனியே யாழ்ப்பாணம் போக" என்று கேட்டான் முகாமில் சிறு கூடாரத்தில் நாலு பேர் கூட ஒதுங்கியிருக்க முடியாத இக்கட்டான இடத்தில் பன்னிரெண்டு பேரில் ஒருவராக இருந்த தம்பிராசா. "ஓமடா தம்பிராசா இனி என்னால் தனிய வாழ ஏலாது. அளவெட்டியில் என்ரை சிநேகிதன் செல்லத்துரை இருக்கிறான். அவனிட்டைப் போனா என்ரை ஆட்களைப் பிடிச்சுப் போடுவான். அதுதான் நாளைக்கு பத்து மணிக்கு பஸ் வெளிக்கிடுதாம். நீ கேள்விப்படேல்லயே" "ஓமோம் கேள்விப்பட்ட நான் தான் அது தானே உன்னையும் கேட்டனான் அப்ப நீ என்ன மாதிரி போகத்தான் வேணும் இன்னும் இரண்டு கிழமையால போவம் எண்டிருக்கிறன். வாற கிழமை நிறுவனம் ஒண்டு குடும்பத்துக்கு ஐயாயிரம்படி குடுக்குதாம். அதையும் வேண்டிக்கொண்டு வருவம். இஞ்ச இந்த முள்ளுக்கம்பிக்கை இருந்து என்ன செய்யிறது" "அது சரி, நீ பிள்ளை குட்டிகாரன். நீ வாற நேரம் வா. நான் மோனை, நாளைக்குப் போறன்" என்றார் ஐயாத்துரையார்.

அடுத்த நாள் பத்து மணிக்கு பேருந்து வந்து நின்றது. முகாம் வாசலில் எட்டு மணிக்கே யாழ்ப்பாணம் போகப் பதிந்தவர்கள் எல்லோருமே பாதுகாப்புச்சோதனையில் பாஸ்பண்ணி ஆயத்த மானார்கள். பேருந்தில் ஏறுவதற்கு "ஏ.. எல்லாம் வாறது... ஏர்றது" என்றான் காவலுக்கு நின்ற சிப்பாய் 'எங்கட சனத்தைச் சொல்ல வேணுமே'


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவன் சொன்னது தான் தாமதம் தள்ளி முண்டி அடிச்சுக் கொண்டு ஏறினார்கள். ''ஏனப்பா இடுபடுறியள் பத்து பஸ் அல்லே நிக்குது. உங்களை என்ன விட்டுட்டே போகப்போறம். ஒழுங்கா இடிபடாமல் ஏறுங்கோவன்" என்றார். பஸ் நடாத்துனர். சனத்துக்கு காதில் விழுந்தால்தானே ''சரியா வாங்க.. இல்ல அடி'' என்றபடி துப்பாக்கியை ஓங்கினான் காவல் நின்ற சிப்பாய். "எங்கட ஆக்களுக்கு மாடு சொன்னால் கேளாது மணி கட்டின மாடு சொன்னால்தான் கேட்பினம்" அவர்களுக்கு சொன்னவர் ஓர் மணி கட்டின மாடாய்தான் தென்பட்டார். எல்லோரும் வரிசையில் ஒழுங்காக நின்றனர். வரிசையின்படி பத்து பேருந்துகளிலும் மக்கள் எல்லோரும் ஏறிக் கொண்டனர். நேரம் பத்து முப்பது ஆகிவிட்டது. இன்னும் சாரதியைக் காணவில்லை பேருந்தி னுள்ளும் ஒரே புளுக்கம். குழந்தை குஞ்சுகள் அழுதன. பெரியோர்கள் முகம் சுளித்துக் கொண்டனர். "அங்கதான் அடைச்சு வைச்சிருக் கிறாங்கள் எண்டால் இஞ்சையும் இப்பிடி சிப்பிலி ஆட்டுறாங்கள்" என்று அலுத்துக் கொண்டனர். நேரமோ பன்னிரண்டு. கீழே இறங்கி நிற்கலாம் என்றால் வாசலில் காவலுக்கு நிற்கிறவர் விடுகிறார் இல்லை. பேருந்தினுள் இருந்த சிங்களம் தெரிந்த ஒருவர் காவலுக்கு நின்றவரிடம் "என்ன இன்னும் பஸ் வெளிக்கிடேல்ல'' கேட்டார். அதற்கு "வெளிக்கிடச் சொல்லி இன்னும் ஓடர் வரேல்ல. வந்ததும் தான் வெளிக்கிடும் பஸ்'' என்றார். மற்றவர்கள் ஆவலுடன் 'என்னவாம் இவன்' என்று கேட்டனர். அவன் கூறியதை கேட்டவர்களுக்கு இவர் சொல்லிக் கொண்டார்.

ஒருவாறு பேருந்துகள் ஒன்று முப்பதுக்குப் புறப்பட்டன. அது யாழ் நகரை நான்கு முப்பதுக்கு வந்தடைந்தது. பின் அங்கிருந்து ஒவ்வொரு சாலை வழிக்குமான பேருந்துகள் ஆயத்தமாக நின்றன. ஐயாத்துரை அளவெட்டி ஊடாக அம்பனை செல்லும் பேருந்தில் ஏறிக் கொண்டார். அது புறப்பட்டு ஒரு மணித்தியாலம் கழிந்து அளவெட்டியை வந்தடைய கேணிக்கரையில் அவர் இறங்கிக்கொண்டார்.

* * *

நினைவுகளை மீட்டபடி நடந்து வந்துகொண்டிருந்த ஐயாத்துரையார் கும்பிளா வளை கோயிலடியை அடைந்தார். அதன் தெற்கு வீதியில் இருந்த கடையில் தான் கொண்டு வந்த உரைப்பையும் கைப்பையையும் வைத்துவிட்டு அங்கு இருந்த வாங்கில் அமர்ந்தபடியே "தம்பி கொஞ்சத் தண்ணி தா குடிப்பம்'' என்றார். கடைக்காரர் தண்ணீரைப் போத்தலுடன் கொடுக்க தாகம் தீரும் வரை குடித்தார். கடைக்காரரும் "அப்பு எங்க வவுனியாவாலையா வாறீங்கள்" என்று கேட்டார். "ஓமடா தம்பி இப்ப வன்னீல எங்கட சனம் எல்லாம் வவுனியா முகாமில அடைபட்டுக் கிடக்குதுகள். இப்ப கொஞ்சம் கொஞ்சமா விடுறாங்கள். அங்க ஒரே வெய்யிலும் வெக்கையும் சனங்களுக்கும் ஒரே வருத்தம் என்னசெய்யிறது எங்கட தலைவிதி அப்பிடி. உந்தப் பிள்ளையார் இருக்கிறார் என்றால் காப்பாத்த வேணும்" என்று பெருமூச்சு விட்டபடியே போத்தலைக் கொடுத்தார் ஐயாத்துரை. ''இப்ப இஞ்சாலை ஆரிட்டை போறியள்'' இது கடைக்காரர். "ஓமடா தம்பி நான் கேட்பம் என்ன நீ கேக்கிறா. இந்தக் கோவிலுக்கு கிட்டதாக சவாரி செல்லத்துரை என்று இருந்தவர் அவரிட்டை தான் போகவேணும் நான் ஒழுங்கையை மறந்து போனன் மோனே" என்றார். "அப்படியே நீங்கள் இந்த பின் ஒழுங்கையால போய் நாலாவது முடக்கில் கேளுங்கோ அதில காட்டுவினம்'' என்றார். சந்தியை நோக்கி நடக்கலானார் ஐயாத்துரையார்.

இரும்புப்படலை கொழுவியிருந்தது. ஐயாத்துரையார் படலையில் நின்றபடியே கூப்பிட்டார். செல்லத்துரையர் வரக்காணோம். அவரின் இரண்டு நாய்களும் பாய்ந்து கொண்டே வந்தன. அதனுடைய உறுமலுக்கும் குலைப்புக்கும் படலை திறந்து கிடந்தால் ஐயாத்துரையார் முடிஞ்சார். நல்ல வேளை நாய்களுக்கு பின்னால் இருபது வயது மதிக்கத்தக்க பெண்பிள்ளை ஒன்று வந்தது. "என்ன" என்று கேட்டாள் "பிள்ளை இது செல்லத்துரை வீடு தானே? நான் வவுனியாவில இருந்து வாறன் செல்லத்துரை என்ற சினேகிதன்" ஐயாத்துரை சொன்னார்.

"ஆ....., அப்படியே பொறுங்கோ" என்றவள் "அம்மா அம்மா" வெனக் கூப்பிட்டாள். அவளின் தாய் வந்து கொண்டே "ஆருது" "அது நான் ஐயாத்துரை தெரியேல்லயோ" "அட ஐயாத்துரை அண்ணையே! ஆளே மாறிப்போச்சு ஆ..... வாங்கோ அண்ணை" என்றபடியே அழைத்துச் சென்றாள்.

வெளி விறாந்தையில் இருந்த கதிரையில் அமர்ந்து கொண்டார் ஐயாத்துரை. அவர் அருகில் உரைப்பையும் கைப்பையும் கிடந்தன. "பிள்ளை அண்ணை நல்லாக் களைச்சுப் போனார் கோப்பி போடனை'' என்றபடியே முன்னால் சென்றாள் செல்லத்துரையின் மனைவி சகுந்தலா. "பிள்ளை சகுந்தலா, எங்க துரையைக் காணோம். இன்னும் தோட்டத்தால வரேல்லயோ?" என்றபடி நிமிர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார். அங்கே சுவரில் படமாத் தொங்கியபடி இருந்தார் செல்லத்துரை. அழகான மாலையுடன். ஐயாத்துரைக்கு 'எல்லாம் விரைச்சுப் போச்சு நான் ஏன் பிள்ளையைக் கேட்டன்' என்று தனக்குள் மனம் கலங்கினார். சகுந்தலாவின் மனமும் மிகவும் கவலையடைந்தது.. நிலமையை சமாளித்தவாறே "ஐயான்னை! பாதை பூட்டின கையோட இவருக்கு காச்சல் வந்தது. ஒரு ஐந்து நாள் தான். ஆஸ்பத்திரியில் சொன்னாங்கள் பயப்படத் தேவையில்லை எல்லாம் சரியாயிடும் என்டு நானும் வேண்டாத தெய்வம் இல்லை. கடைசில ஆறாம் நாள் எங்களை விட்டுட்டுப் போட்டார். இப்ப அவர் கடவுளோடை இருக்கிறார் என்று நினைத்துக் கொண்டிருக்கிறம்" என்றாள் மனதும் வெறுமை யடைந்தபடி. செல்லத்துரையின் மகள் கோப்பி யுடன் வந்தாள். "பிள்ளை கோப்பையை கையில குடு அண்ண குடிச்சிட்டு கால் மேல் கழுவிக் கொண்டு வரட்டும். நேரம் ஏழு மணியாகுது" என்றவாறே சகுந்தலா கோப்பியையும் துவாயையும் கொண்டுவந்து ஐயான்னையின் அருகிலே வைத்தாள். "ஓம் பிள்ளை சரியான அலுப்பாய் இருக்குது. மேலக் கழுவிப்போட்டு வாறன்" என்றவாறே கிணற்றடிப்பக்கம் செல்லலானார்.

தொட்டியில் நிரப்பியிருந்த நீரை சிறுவாளியால் அள்ளி உடம்பில் ஊற்றியபடியே துரையின் சிந்தனையில் மூழ்கலானார் ஐயாத்துரையார். துரை! என் எவ்வளவு இனிய நண்பன். அந்த நேரம் அவன்ரை தகப்பனாரும் என்ரை தகப்பனாரும் கொண்ட சினேகிதம் எங்களுக்குள்ளும் தொடர்ந்ததே! இளமையில் நாம் இருவருமாக சவாரிமாடு ஓடப்பழகுவதும், பின் சவாரிக்குச் சென்று பல பரிசில்கள் பெற்றதும் அந்த மகிழ்ச்சியில் அடுத்த நாள் கிடா அடிச்சுச் சாப்பிட்டுக் கொண்டாடினதும் அவனுக்குப் பெண் பார்க்க புத்தூர் சென்றதும் அவன் வேண்டாம் என்று சொல்ல, முதல் முதல் பார்த்த பொம்பிளை நீ இதைக் கட்டத்தான் வேணும் என்று நான் சொல்ல மறு பேச்சில்லாமல் தாலி கட்டினதும் பின் அவனுக்குப் பெண் குழந்தை பிறந்த பின்பு தான் வன்னி சென்றதையும், ஒருமுறை அசை போட்டுக் கொண்டார். இப்ப அவன் இல்லையே என்ற பெரும் கவலை அவரை ஆட்கொண் டிருந்தது. ம். என்று பெருமூச்சு விட்டபடியே துவாயால் ஈர உடலைத் துடைத்துவிட்டு அதனைப் பிழிந்து ஒருமுறை உதறினார். அது படீர் என்ற சத்தத்துடன் அவர் கையில் துவண்டது. அச்சத்தத்தைக் கேட்டதும், அவருக்கு வன்னி ஞாபகங்கள் வரலாயிற்று. முகாமுக்குச் செல்லுமுன் கடைசி ஆறு மாதமாகக் கேட்ட சத்தம் போலல்லவா இருக்கு என்று நினைத்தவாறே வன்னி நினைவில் மூழ்கலானார்.

* * *

கிளிநொச்சி மாவட்டம்! எவ்வளவு அழகான பிரதேசம் காடுகளும் களனிகளும் பயிர்களும் பத்தாவியுமாக பச்சைப்பசேலென காட்சி அளிக்கும் அழகோ அழகு. அங்கே இராமநாதபுரம் எனும் அழகிய விவசாயக் கிராமம். பிந்திய முப்பது வருட வாழ்க்கையும் அங்குதான். இப்ப அவருக்கு அறுபது வயது. முப்பதாவது வயதில் அரசாங்கம் கொடுத்த காணியில் விவசாயம் செய்ய என வந்தவர். காரைதீவு கனகர் வீட்டிலிருந்து தன் விவசாயத் தொழிலைப் பார்த்து வந்தார். அவருக்கு தாய் உண்டு. 18 வயது ஆனதும் தகப்பனும் இறந்து போனார் தாயை சிறிய தாயாருடன் விட்டு விட்டு வந்து கனகருடன் சேர்ந்து விவசாயத்தை கவனித்து வரலானார். இரண்டு வருடம் முடிய தாயையும் தன்னுடன் கூட்டி வந்து சிறு குடிசை அமைத்து வசிக்கலானார். ஐயாத்துரைக்கு மூப்பத்துமூன்று வயது ஆனதும் கனகர் தன்னுடைய ஆட்களுக்குள் பெண்பார்த்து திருமணமும் செய்து வைத்தார். பெண்ணின் பெயர் கமலா. இருவரும் இனிதே இல்லறவாழ்வில் ஈடுபட்டு அருள், திலகம் என்றும் இரு குழந்தைகள் பெற்று வாழ்ந்து வந்தனர். திலகத்தின் இரண்டாவது பிறந்த நாளன்று அவளின் அப்பம்மாவும் இறந்து போனார் ஐயாத்துரைக்கு விவசாயத்துடன் 15 மாடுகளும் இருந்தது. அருள் O/L படித்து விட்டு தகப்பனுடன் விவசாயத்தில் ஈடுபட்டான். திலகத்துக்கும் இருபத்து மூன்று வயது ஆகிவிட்டது. அவளுக்கும் மாப்பிள்ளை பார்க்கும் படலம் ஆரம்பமாயிற்று. ஐயாத்துரைக்கு பெரிய வசதி இல்லாவிட்டாலும் ஓரளவு விவசாய வருமானத்தின் மூலம் வாழ்க்கை நடந்து கொண்டிருந்தது. அவ்வேளையில் தான் ஆரம்பமானது போர். தூர இடத்தில் ஆரம்பித்த போர் கிளிநொச்சியையும் எட்டிப் பார்த்தது.

அன்று ஓட வெளிக்கிட்ட சனங்களில் ஐயாத்துரை குடும்பமும் ஒன்றானது. தனது கட்டிய வீடு, தேடிய சொத்துக்கள், ஆடு, மாடுகள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு உயிர் தப்பினால் போதும் என ஆண்டவனை வேண்டியபடி சைக்கிளில் கட்டக்கூடிய சாமான்களைக் கட்டியபடி நகர்ந்தனர். ஐயாத்துரை குடும்பமும் சனங்களும் போய்க் கொண்டிருக்க, வெடிச்சத்தங்களும் அருகருகே துரத்தியபடி இருந்தது. ஐயாத்துரை குடும்பம் அப்படியே தர்மபுரம் போய்ச் சேர்ந்தது. சண்டை முடிந்ததும் திரும்பிச் செல்லலாம் என நினைத்துத் திருப்தி கண்டனர் மக்கள் எல்லோரும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் அரக்கன் தர்மபுரத்தையும் விட்டு வைக்கவில்லை. அவன் கைகள் அங்கும் நீண்டது. அதனால் ஏராளமான மக்கள் மடிந்தனர். அங்கவீனப்பட்டனர். அடுத்த வேளை சாப்பாட்டுக்கே அல்லல்பட்டனர். கைகளில் அகப் பட்டதை எடுத்துக் கொண்டு மீண்டும் ஓட்டம். ஐயாத்துரை குடும்பமும் சனத்தோட சனமாக மிஞ்சியவர்கள் எல்லோருமாக விசுவமடு போய்ச் சேர்ந்தனர்.

அங்கும் நிம்மதியில்லை. போர் அரக்கனின் அதிர்வுகள் அங்கும் வெகு கிட்டவாகக் கேட்கத் தொடங்கின. எங்கும் ஒரே புகை மண்டலம். மக்கள் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என ஓடிக் கொண்டிருந்தனர். இது நாள் வரையில் மக்கள் இது போன்ற போரை சந்தித்ததில்லை. ஏராளமானவர்களின் உயிர்கள் காவு கொள்ளப் பட்டன. தந்தையை இழந்த குடும்பம்; தாயை இழந்த குடும்பம்; இருவரையுமே இழந்தவர்கள்! பிள்ளைகளை பறிகொடுத்த பெற்றோர் என எத்தனை வகை இருக்கோ அத்தனை வகை உறவுகளும் அல்லோல கல்லோலப் பட்டன. இப்படி எத்தனையோ அவலமான காட்சிகளை பார்க்கக்கூடியதாக இருந்தது. யாரிடம் யார் சொல்லி ஆற! எங்குமே கத்தல், கதறல்; அப்பப்பா! இது என்ன வேதனை. ஆண்டவனே! இது என்ன சோதனை! எங்கும் நெரிசல்கள். ஓடிய ஓட்டத்தில் ஐயாத்துரை குடும்பமும் நெரிசலில் அகப்பட்டு விழுந்தெழும்பி ஓடும்போது பிரிந்து விட்டது.

புதுக்குடியிருப்புக்கு வந்து தான் ஐயாத்துரையால் தன் குடும்பத்தை தேட முடிந்தது. இவருடைய வீட்டின் அருகில் வசித்து வந்த செல்லமணியை சந்தித்தபோது தான் தன் மனைவியும் பிள்ளைகளும் போரில் அகப்பட்டு இறந்தது தெரியவந்தது. ஐயாத்துரை இதை அறிந்தபோது மிகவும் துடித்துப் போனார். செல்லமணி அவரை ஒருமாதிரித் தேற்றி தன்னுடன் வைத்துக் கொண்டார். ஐயாத்துரையும் செல்லமணியின் பின்னே திரியலானார். போரின் போது பாதுகாப்பாக இருக்க பங்கர் வெட்டுவது என்பது இங்கு தான் அதிகமாகிவிட்டது. முன்னைய இடங்களின் தரை திடீர் என ஒன்றும் செய்ய இடம் கொடாது. செம்மண் மிகவும் வைரமானதும் கூட. ஆனால் இங்கு மண் மென்மைத்தன்மை கொண்டது. அதனால் பங்கரும் இலகுவாக வெட்ட முடியும். போரின் உச்சம் அதிகரிக்கும்போது அதனுள் பதுங்குவார்கள். போர் தீவிரம் குறைய மீண்டும் வெளியே வந்து உலாவுவார்கள். மக்களின் வாழ்வு திண்டதுபாதி தின்னாதது பாதியாகக் கழிந்தது.

போர் புதுக்குடியிருப்பை நோக்கி திரும்பியதும் மக்களோடு மக்களாக அவர்களின் பயணமும் இரணைப்பாலை ஆயிற்று. அங்கும் போர் அரக்கன் பிரசன்னமானான். அங்கிருந்து ஓடினார்கள் மாத்தளனுக்கு. இங்கு இரண்டு மூன்று நாளாக போரின் சத்தத்தையே காணவில்லை. 'ஆரேன் வெளிநாட்டுக்காரர் வந்து சண்டையை நிப்பாட்டிப் போட்டாங்கள் ஆக்கும்' என மக்கள் தங்களுக்குள் கதைத்துக் கொண்டனர். கடுமையாக காயப்பட்டவர்களை கடலில் தரித்து நின்ற கப்பல் ஒன்றில் கொண்டு சென்றனர், செஞ்சிலுவைச் சங்கத்தினர். ஆனால் போர் அரக்கன் புறப்பட்டான் மாத்தளனை நோக்கி ஓட்டம்! ஓட்டம்! ஒரே ஓட்டம்! சனங்களுக்கு எங்கு போவதென்றே தெரியவில்லை. ஒரு புறத்தே போர் அரக்கன் துரத்த அவர்கள் திசை தெரியாது ஓடிக்கொண்டிருந்தனர். செத்தவன் செத்தவன்தான்! காயப்பட்டவர் காயப்பட்டவர்தான்! பிரிந்தவர்கள் பிரிந்தது தான்! யாரை யார் பார்ப்பது. ஒரே ஓட்டம் முள்ளிவாய்க்காலில் போய் நின்றது அவர்களின் ஆதங்க வாழ்வு. ஐயாத்துரையும் அதுபோல் தான் வீட்டிலிருந்து வெளிக்கிடேக்க நான்கு பேராக வெளிக்கிட்ட ஐயாத்துரை இன்று வெறுங்கையுடன் தன்னந்தனியே முள்ளிவாய்க்காலில்! எல்லோர் நிலையும் ஏதோ வகையில் பாதிப்பாக இருந்தது. இறந்தவரை கிரியைகள் செய்து அடக்கம் செய்த பாரம்பரியங்களைக் கொண்ட மக்கள் மண்ணை விறாண்டி அதற்குள் சடலமானவர்களை மூட வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. மூடாத நிலையிலும் இதற்கு விதியை நோவதா? முன் செய்தபாவம் என்று கடவுளை நோவதா? அவ்வளவுக்கு போரின் உக்கிரம். போர் முள்ளிவாய்க்காலையும் முத்தமிட்டது.

ஐயாத்துரை கண்விழித்துப் பார்த்தார். அவருக்கு என்ன நடந்தது என்றே தெரியவில்லை. சுற்றிவர எங்கும் பிணக்குவியல்கள், முனகல் சத்தங்கள். அவரின் கையிலும் காயம். சுற்றுமுற்றும் பார்த்தார். கூப்பிடவும் அருகில் எவரும் இல்லை. தான் போரிடையே அகப்பட்டு இறந்தவர்களுக்கிடையே கிடப்பதை உணர்ந்தார். யாரோ கூப்பிடுவதுபோல இருந்தது. அத்திசையை நோக்கினார். யாரோ ஒருவர் இன்னும் உயிர் பிரியவில்லை. வேதனையில் முனகிக் கொண் டிருந்தார். இப்படி இடையிடையே அங்கொன்றும் இங்கொன்றுமாக முனகல் சத்தம் கேட்டுக் கொண்டே இருந்தது. எல்லோரின் தலை விதியையும் எண்ணி ஐயாத்துரையர் தனக்குள்ளே அழுதார். நேரம் தெரியவில்லை. அருகில் அவதானித்தார். இறந்த ஒருவரின் கையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிக்கூடு. அதில் நேரம் பார்த்தார் நான்கு மணி அவரின் காயத்தால் இரத்தம் வெளியேறி இருந்ததினால் மிகவும் களைப்படைந்து காணப்பட்டார். பசி வயிற்றைப் பிடுங்கியது. வீட்டை விட்டு வெளிக்கிட்டு நான்கு ஐந்து மாதமாக அரை வயிற்றுச் சாப்பாடுதான். இப்போ இரண்டு நாட்களாக தொடர்ந்து சாப்பாடும் இல்லை. பசி வயிற்றைப் பிடுங்க சுற்றும் முற்றும் பார்த்தார். சிறிது தூரம் தள்ளி பிரிந்த நிலையில் ஒரு பொட்டலம் ஒன்று காணப்பட்டது. அதுவும் இறந்தவர்களிடையே தான் அதற்குள் ஏதாவது இருக்காதா என்ற ஏக்கத்தோடு மெல்ல எழுந்து ஓர் உடலைக் கடந்து காலை வைத்தார். கால் சேற்றில் புதைந்தது போல் புதைந்தது. மழையும் பெய்ய வில்லையே! இது என்ன சேறு? என்றவாறு குனிந்து நோக்கினார். அது போரினால் சிதறிய உடல்! அது சிதறி புக்கைபோல் ஓரிடத்தில் இருந்தது. அதன்மேல் தான் ஐயாத்துரையர் கால் வைத்ததை உணர்ந்தார். மனிதனை மனிதன் இப்படிச் சந்திக்க வைத்து விட்டானே! அந்த இறைவன், என்று அவனை நொந்தபடி அச் சதைப்பிண்டத்தைக் கடந்து பொட்டலம் கிடந்த இடத்தை அடைந்தார். அடைந்தவர் ஆவலுடன் அதைப் பிரித்தார். (ஏற்கனவே பிரித்திருந்தது) இரண்டு மூன்று ரொட்டித் துண்டுகள் இருந்தன. அங்கு இறந்தவர்களில் இருந்து துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்தது. பசி அதையும் மறக்க வைத்து விட்டது. ரொட்டியை எடுத்து வாய்க்குள் வைக்க தயாரானபடி திரும்பி அருகே பார்த்தார். அங்கு கண்டகாட்சி அவர் உடலை உலுக்கியெடுத்தது. தாய், தந்தை, பிள்ளைகள் என நால்வர் குடும்பமாக இறந்து கிடந்தனர். அதிலும் ஒரு குழந்தையின் கையில் பாதி ரொட்டித் துண்டு! மறுகையைக் காணவில்லை. தகப்பனின் மார்பு பகுதி இரண்டாகப் பிளந்து கிடந்தது. தாய் குப்புறக் கிடந்தாள் இரத்தம் பெருகிய அடையாளம் இருந்தது. மற்றைய பிள்ளைக்கு இரண்டு காலும் இல்லை இது என்ன அகோரம் இதைப்பார்த்த பின் யார் மனமும் என்னத்தைத்தான் செய்யாது. அவரும் உருவந்தவர் போலானார். அந்த இரு குழந்தைகளையும் தன் மடியில் கிடத்திக் கத்தினார். கதறினார். அதை எப்படி சொல்வதென்றே தெரியவில்லை. தன் பிள்ளைகளின் பெயரைச் சொல்லிச் சொல்லிக் கத்தினார். கதறினார். என்ன பலன்! போனது போனது தான். போர் அரக்கனின் கொடுமைகளைத் தாக்கித் தாக்கி கத்தினார். கடவுளையும் தாக்கத்தவறவில்லை. அவ்வளவுக்கு அவரின் மனம் கல்லாகிவிட்டது. அவருக்கு நாவும் வரண்டு விட்டது. இறந்த குடும்பத்தின் அருகில் சிறிய தண்ணீர்ப்போத்தல் ஒன்று தண்ணியுடன் தென்பட்டது. மெல்ல கையால் எட்டி எடுத்தார். இன்னுமொரு போத்தல் சுக்கு நூறாகியிருந்தது. ரொட்டியைச் சாப்பிடும் நிலையில் அவர் இல்லை. தலை சுற்றியது அந்தப் பிஞ்சுக் குழந்தைகள் சின்னஞ்சிறு கைகளால் குடிக்க வென்று கொண்டு வந்த தண்ணீரை பெரும் கவலையோடு குடித்தார். இது எனக்கு மட்டும் வந்த தலைவிதி இல்லை. எங்கள் எல்லோருக்குமே வந்த தலைவிதி என்று விதியை நினைத்து நினைத்து அழுதார். நினைவுக்கு வந்த தெய்வங்களையெல்லாம் திட்டித் தீர்த்தார்.

பின் கையில் இருந்த காயத்தைக் கட்ட ஏதாவது துணி கிடக்குமா என சுற்று முற்றும் பார்த்தார். சற்றுத் தொலைவில் உரப்பை மூடை ஒன்று கிடந்தது. அதிலும் காயங்கள்! மெல்லச் சென்று கிழிந்திருந்த உரப்பைக்குள் கையைவிட்டு துணி ஒன்றை இழுத்தார். அது வேட்டி! இழுத்த இழுவையில் வேட்டியுடன் இன்னுமோர் சிறிய உரப்பையும் கொழுவியபடி வெளிவந்தது. வேட்டியைக் கிழித்து காயத்துக்கு கட்டுப்போட்டார். 'சிறிய உரைப்பையும் என்னவாக இருக்கும்?' என அவிழ்த்துப் பார்த்தார். பார்த்தவர் அதிர்ச்சியும் ஆச்சரியமும் அடைந்தார். ஆம்! அதற்குள் கட்டுக்கட்டாக பணம்!! எல்லாம் ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள்! அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவரின் வாழ்நாளில் அவரின் கை இவ்வளவு பணத்தைத் தொட்டதேயில்லை. சுற்று முற்றும் பார்த்தார். கால் இல்லாமல்; கையில்லாமல்; தலை இல்லாமல், உடல் சிதறி - இப்படி எத்தனையோ இறந்த உடல்களைத்தான் காண முடிந்தது. பெரிய உரைப்பையை எடுத்து அதற்குள் இருந்தவற்றைக் கீழே கொட்டினார். அதன் அடியில் சிறிய உரைப்பையை கட்டியபடி வைத்தார். அதற்குமேல் அந்தத்துணிமணிகளை போட்டு வாய்க்கட்டாகக் கட்டி விட்டு திரும்பினர். அவருக்கு கையிற் கெட்டிய தூரத்தில் அறுந்த சங்கிலித்துண்டு ஒன்று ஒரு சாண் அளவில் கிடந்தது. 'செத்தபிணத்திலிருந்து ஆரோ நகை களை களட்டியிருக்கினம். அதில அறுந்த துண்டுதான் இது' என்பதை உணர்ந்தார். அதையும் எடுத்துக்கொண்டு 'நடந்து சென்றால் தனக்கு ஏதாவது நேர்ந்தாலும்' என்ற அச்சத்தில் சற்றுக் குனிந்த நிலையில் உரைப்பையையும் இழுத்துக் கொண்டு, 'மெல்ல மெல்ல போகுமட்டும் போவம்' என நினைத்துச் செல்லலானார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதிரவன் மெல்ல மறைய இருட்டும் ஆரம்பிக்கிறது. பிணக் குவியல்களைத்தாண்டி பற்றைக் காடுகளுக்கூடாக செல்லலானார். அந்த இடம் சத்தம் இல்லாமல் அமைதியாக இருந்தது. சற்றுத் தொலைவில் வெளிச்சம் தெரிந்தது. அதை நோக்கிச் செல்லலானார். வெளிச்சத்தை ஓரளவு அண்மித்ததும் 'அடோ' என குரல் கேட்டது. ஐயாத்துரையருக்கு இருந்த உயிரும் போட்டுது. உரப்பையைக் கையை விட்டார். அது தொப்பென நிலத்தில் விழுந்தது. இரு கைகளையும் மேலே தூக்கிய படியே 'ஐயா' அது நான் அது நான்' என்றவர் உற்றுப்பார்த்தார். தன்னைச் சுற்றிவர ஆறு ஏழுபேர் ஆயுதங்களுடன் நிற்பதை உணர்ந்தார். அவர்களில் ஒருவர் உரைப்பையை அவிழ்க்குமாறு சைகை காட்டினார். ஐயாத்துரையரும் தன் நடுங்கிய கைகளால் மெல்ல கட்டை அவிழ்த்தார். 'ஆ'. எல்லாம் எடு' என்றான் அரை குறைத் தமிழில் ஒருவன். மேலால் இருந்த உடுப்புக்கள் சிலதை வெளியில் போட்டார் ஐயாத்துரையர். 'ஆ.. ஆ' உடுப்பு சரி சரி வை" என்றவன் 'வா வா' என அங்கு ஒருவருடன் சேர்ந்து கூட்டிச் சென்றான். ஐயாத்துரையரும் அவர்களை உரப்பையுடன் பின் தொடர்ந்தார்.

வெளிச்சத்துக்கு சென்றதும் பார்த்தார். நிறையச் சனங்கள் நின்றிருந்தனர். பஸ்களும் நின்றன. எல்லோரும் பஸ்களில் ஏற்றப்பட்டுக் கொண்டிருந்தனர். ஐயாத்துரையரையும் அவ் விடத்துக்கு கொண்டு வந்தவர்கள் விட்டு விட்டு சென்றுவிட்டனர். அவரும் ஒரு பஸ்சில் ஏறிக்கொண்டார். புறப்பட்ட பஸ் ஒரு மணித்தி யாலத்தின் பின் நிறுத்தப்பட்டது. அங்கு எட்டிப் பார்த்தார். ஐயாத்துரையர் எங்கும் முள்ளுக்கம்பி அடிக்கப்பட்ட பிரதேசமாகக் காணப்பட்டது. அந்த இடம் இரவானபடியால் எந்த இடம் என்றும் தெரியவில்லை. அதற்குள் சிறு சிறு கூடாரங்கள் எல்லோரும் இறங்கியதும் அந்த முள்ளுக்கம்பிப் பட்டியில் அடைக்கப்பட்டனர்.

* * *

இவ்வளவு துயரங்களும் துன்பங்களும் கிணற்றடியில் நின்று கொண்டிருந்த ஐயாத்துரையில் மனத்திரையில் வந்து போயின "ம்" என்று பெருமூச்சு விட்ட படியே கிணற்றடியில் இருந்து விட்டு விறாந்தைக்குள் வந்தார் ஐயாத்துரையர்.

'ஐயான்னை வாங்கோ, சாப்பிடுவம்' என்றாள் சகுந்தலா அன்பான குரலில் 'சாப்பாடு என்ன சாப்பாடு எல்லாத்தையும் துலைச்சுப் போட்டு வந்து நிற்கிறன்' என்றார் கண்கலங்கியபடியே. "அதுசரி உங்கடை மனிசி பிள்ளைகள் என்ன மாதிரி'' இதைச் சகுந்தலா கேட்டதும் தான் தாமதம் ஐயாத்துரையர் விக்கி விக்கி அழலானார். "என்ன அண்ணை சின்னப்பிள்ளையள் மாதிரி அழுகிறியள். ஏன் என்ன நடந்தது.'' "பிள்ளை எனக்கு நடந்தது, இனிமேல் ஆருக்கும் நடக்கப்படாது. எனக்கு மட்டும் இல்ல அங்க வன்னில இருந்த எல்லாருக்குமே அநேகமாக என்கதிதான். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதத்தில் பாதிப்பு'' என்றபடி குளிக்கும்போது மீட்ட நினைவுகளை சகுந்தலாவிற்கு கூறி முடித்தார். சகுந்தலாவும் கண் கலங்கினாள். "பிள்ளை மாவிட்டபுரம் கிளையர் கிணத்தடி ஆறுமுகம் சுன்னாகத்தில் இருக்கிறானாம். ஒருக்கா அவரையெண்டாலும் விசாரித்து அவேட்டை அனுப்பி விட்டா உனக்கு கோடி புண்ணியம்' என்றார், இருகைகூப்பியே. அண்ணை ''என்னண்ணை கும்பிடுறியள். இது என்ன. விடியட்டும் இப்ப சாப்பிடுங்கோ'' என்றாள் ஆசுவாசமாக. சாப்பாடு பரிமாறி முடிந்ததும் "அப்பபிள்ளை, உன்ரைபாடு என்ன மாதிரி" என்றார். ''எனக்கு ரெண்டு பிள்ளைகள். மூத்தவள் கலியாணம் செய்து வெளிநாட்டில் ஒரு குழந்தையும் இருக்கு. என்ர அன்னேன்ர மகனைத்தான் செய்தவள். இவள் ரெண்டாவது. இவளுக்கும் வெளிநாட்டு மாப்பிளை தான். வாற கிழமை கொழும்பு போறம். கல்யாணம் கொழும்பிலை" என்றாள். "அப்ப ரெண்டு பேரையும் வெளிநாட்டுக்கு அனுப்பிப்போட்டு நீ தனிய அல்லே.'' "தனியத்தான்! நான் அண்ணையோட போய் இருப்பன். இஞ்ச இராமல் அதுகள் எங்கேயன் வெளிநாட்டில் நிம்மதியாய் வாழட்டும்'' என்றாள். 'ம்' அப்படியே'' நான் பிரச்சனைக்குள்ள எம்பிட்டு தனியாப்போனேன். இந்த இருக்கிற நீயும் ஏதோ ஒரு வகையில் தனியாய்ப் போனாய். தமிழனுக்கு எல்லாத்திலையும் ஒற்றுமை கூட'' என்றபடியே சகுந்தலாவின் மகள் கொண்டு வந்த பாயில் தலையைச் சரித்தார். நித்திராதேவி மெல்ல அவரை அணைத்துக் கொண்டாள்.

* * *

காலை நித்திரையிலிருந்து ஐயாத்துரையர் எழும்ப ஒன்பது மணியாகி விட்டது. அதற்கிடையில் சகுந்தலா காலை எழுந்து வீட்டுவேலை செய்து விட்டு பக்கத்து ஒழுங்கையில் இருக்கும் வீமன்காமத்து சிவத்திடம் சென்று ஆறுமுகத்தார் எங்கே என்று விசாரித்து விடையுடன் வந்து விட்டாள். ஐயாத்துரையர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களைக் கசக்கிய படியே "நல்லா நித்திரை கொண்டிட்டன்" என்று நினைக்க சகுந்தலா தேநீர் கொண்டுவந்து 'குடியுங்கோ' என அருகில் வைத்தாள். "பிள்ளை இண்டைக்குத்தான் நான் நிம்மதியான நித்திரை கொண்டனான். எவ்வளவு தான் கவலைகள் இருந்தாலும் நித்திரை வந்து விட்டால் நிம்மதி தான் இதுக்குத்தான். சில பேர் செத்தாப்பிறகு பிறக்கக்கூடாது என்று கும்பிடு கிறவை'' என்றார். ''நல்லாச் சொன்னியள் அண்ணை'' "அப்ப விசாரிச்சனியே, ஆறுமுகம் வீடு எங்கேயெண்டு'' 'ஓம்... ஓம்... உதில வீமன்காமத்து ஆள் இருக்கிறார், அவரை விசாரிச்சனான். சுன்னாகம் பெற்றோல் செற்றுக்கு பக்கத்துவீடாம். நீங்கள் மத்தியானம் ரெண்டு மூன்று மணிபோல் போகலாம்தானே.... மத்தியானச் சாப்பாட்டையும் முடிச்சுக்கொண்டு போங்கோ' 'ஓம் பிள்ளை' என்றபடியே தன் காலைக்கடன் அலுவல்களில் மூழ்கினார்.

* * *

"அப்ப பிள்ளை போட்டு வாறன். உன்ரை உதவிக்கு பெரிய புண்ணியம்" என்று கூறியவாறு சகுந்தலாவிடம் விடைபெற்று தன் உரப்பையையும் கைப்பையையும் தூக்கியபடி நடந்து கேணிக்கரைச் சந்தியை வந்தடைந்தார். மூன்று மணி சன நடமாட்டம் குறைந்திருந்தது. வீதியில் அருகில் ஒரு அரைக்கும் ஆலை. அங்கு எட்டிப்பார்த்தார். ஒருவர் கதிரையில் இருந்தபடி ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். ஐயாத்துரையார் 'தம்பி' என்றழைக்க அவரும் எழுந்துவந்து 'என்ன அப்பு' என வாஞ்சையுடன் கேட்டார். 'இஞ்சால யாழ்ப்பாண பஸ் இப்ப இருக்கோ' என்றார். "ஓம் அப்பு. இப்ப வரும் பஸ். ஸ்ராண்டில வெய்யில். இதில இருங்கோ பஸ் வர போய் ஏறலாம்" என்று வாங்கைக் காட்டினார். ஐயாத்துரையரும் அதில் அமர்ந்து கொண்டார். பின்னர் அவர் மீண்டும் ஏதோ எழுதுவதில் மூழ்கினார். ஐந்து நிமிடம் இல்லை ஒரு சைக்கிள் ஒன்று வந்து வட்டமடித்தபடியே மில் வாசலில் நின்றது. "என்ன ஐயாத்துரை அண்ணை இதில'' என்றார் வந்தவர். "எட ஆறுமுகம் உன்னட்டைத்தான் வர பஸ்சைப் பார்த்துக் கொண்டிருக்கிறன். நீ எங்க இஞ்ச" என்றார். 'விளான் போய் ஒரு பால்மாடு பார்த்துக் கொண்டு வாறன். இதால வந்த படியா உன்னையும் கண்டாச்சு; எப்ப வன்னியால வந்தனி' என்றார் ஆறுமுகம். "நேற்றுத்தான் வந்தனான். நீ எங்க இருக்கிறா எண்டும் தெரியாது. இவன் சவாரி செல்லத்துரை வீட்டை நிண்டுட்டு இப்ப உன்னட்டை வாறத்துக்குத்தான் வந்தனான். நான் என்ன ஐந்து ஆறுபேரோடை பிறந்தநானே. அப்பு அம்மாவுக்கு ஒரு ஆள். அதுகளும் முடிஞ்சுது. நான் ஆரிட்டைப் போறது' என்றார். "இப்ப உன்ர மனிசி பிள்ளைகள் என்ன மாதிரி?" "அதை ஏனடா கேக்கிறா, நீ சைக்கிள எடு. போகப்போக கதைப்பம்'' என்றவர் உரப்பையை கையில் பிடித்தபடி கரியலில் ஏறினார். கைப்பையைக் கொழுவக் கொடுத்தார். 'கவனமா பிடியணை' என்றார் ஆறுமுகம் "ஓம்... ஓம்... சரி... சரி... நீ உழக்கு" என்றார் ஐயாத்துரையர். சைக்கிள் சுன்னாகத்தை நோக்கிப் பயுணமானது.

சைக்கிள் போய்க் கொண்டிருந்தது. "மெய்யே ஐயாத்துரை அண்ணை. அப்ப என்ன மாதிரி மனிசி பிள்ளைகள்". ஐயாண்ணையும் சகுந்தலாவுக்கு கூறியபடி மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் என்ன நடந்தது என்று கூறி முடித்தார். 'அப்படியே. அப்ப நீ தனிச்சுப்போனாய். ம்.. வா.. வா'' என்ற படியே ஆறுமுகம் தன் எண்ண அலைகளைச் சுழல விட்டான். 'இது ஒரு பழைய உரப்பையோட வருது. இதை இனி வீட்டை வைத்திருந்து பார்த்தால் என்ரபாடு பொறுக்கும். நம்பி வந்திட்டுது. வரட்டும் காலமை பாப்பம் எப்படிக் கடத்திறது எண்டு.' இப்படி யோசிக்க மெல்ல வீடும் வந்து விட்டது.

''அண்ணை மெல்லமா இறங்கு, நான் நிப்பாட்டிறன்.'' என்றான் ஆறுமுகம். ஐயாத்துரைக்கு தன் தகப்பனின் தூரத்து உறவினைச் சந்தித்து ஆயிரம் மடங்கு மகிழ்ச்சியைத் தந்தது. தன் அருகே ஆயிரம் பேர் உதவிக்கு நிற்பது போல் உணர்ந்தார். 'கொண்டுவந்த காசையும் அதுகளிட்டைக் குடுத்திட்டு ஒரு பக்கத்தில இருந்து காலத்தைக் கழிப்பம்' என்று மனதில் எண்ணினார். "அண்ணை என்ன யோசனை, வா உள்ளுக்கை'' என்ற ஆறுமுகம் படலயை திறந்து கொண்டு உள்ளே ஐயாத்துரையோடு சென்றார். ஐயாத்துரை வந்ததை ஆறுமுகத்தின் மனைவி கவனிக்க வில்லை. "வந்திட்டார், காலமை 9 மணிக்குப்போய் இப்பதான் மாடும் இல்லாமல் வாறார். கொண்டு போன காசிலை எல்லாத்தையும் முடிச்சுப் போட்டாரோ தெரியாது." என்றாள் கடுவலாக. "இந்தா புஸ்பம் பேக்கதை கதையாத. மனிசன் களையோட வாறன். எதிர்க்கதை கதைக்கிறா. மாடுபாத்தாச்சு. அவன் புரோக்கர் இல்லாட்டி தரமாட்டானாம். நாளைக்கு புரோக்கரோடை போக வேணும்'' என்றான் ஆறுமுகம். "ஓமோம் இப்படிச் சொல்லிச் சொல்லி பதினைஞ்சு நாள் போட்டுது. உந்தக் காசிலை எடுத்து குடியும் நடக்குது போல" என்றாள் புஸ்பம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அண்ணை இவளின்ர கதையை விடு. இது காலமை எழும்பினா படுக்கைக்கு போகுமட்டும் உப்பிடித்தான் ஒரே புறுபுறுப்புத்தான்'' அப்போதுதான் புஸ்பம் உணர்கிறாள், 'மனிசனோட இன்னும் ஒரு ஆள் வந்ததை. அவள் வேறு எங்கோ பார்ப்பது போல் குசினுக்குள் சென்று விட்டாள்.

'ஐயான்னை வா இப்படி இரு' எண்டு வெளித்திண்ணையில் பாயைப் போட்டான் ஆறுமுகம். உரப்பையையும் தன் அருகே வைத்துவிட்டு அமர்ந்தார் ஐயாத்துரை. ஆறுமுகம் திண்ணையில் ஐயாண்ணையை இருக்கச் சொல்லிப்போட்டு குசினிக்குள் சென்றான். அங்கு அவன் மனைவி கேட்டாள், "இது யாரப்பா என்று" "இது ஐயான்னை. தூரத்து சொந்தம். இவ்வளவு நாளும் வன்னில இருந்தவர், இப்ப இந்தப் பிரச்சினையால மனிசிபிள்ளையள் செத்துப் போச்சு. அது தான் இங்கு வந்தவர்" என்றான். ''ஆரா இருந்தாலும் என்னால வைச்சுப் பார்க்கேலாது. இந்தக் கிளடை இங்க பாரம் எடுத்து அது மண்டையைப் போட்டா என்ன செய்யிறது. இஞ்ச மறிக்காமல் ஆளுக்கேத்த மாதிரி கதைச்சு அனுப்புங்கோ'' என்றாள் புஸ்பம். ஆறுமுகத்திற்கு. அவள் அப்படி கூறிவிட்டாள் என்று ஆத்திரம் வரவில்லை. ஏனெனில் இப்ப அனேகமான வீடுகளில் இப்படித்தான் நடக்கிறது. ஆறுமுகம் பார்த்தும் இருக்கிறான். ஒன்றும் நடவாதது போல் குசினியால் வெளியாலே வந்தான். "வா ஆறுமுகம் வா. இப்படி இரன். அது சரி நீ கலியாணம் செய்தது, ஆற்றை மோளை'' என்றார் ஐயாத்துரையார். "நீர்வேலி கந்தசாமி. சவாரி மாடுகள் வைத்திருந்தவர். அவற்றை மோளைத்தான்" இது ஆறுமுகம். "இவன் கந்தசாமி, எனக்கு அந்த நாளிலிருந்து நல்லா தெரியும்" என்றார் துரையார். "இப்ப அவருக்கு ஒரு காலும் கையும் இழுத்துப் போட்டுது. அவருடைய இரண்டாவது மகளோடு நல்லூரில் இருக்கிறார். என்ர மனிசி மூத்தவா" என்ற ஆறுமுகம் புஸ்பம் கொண்டு வந்த "தேநீரை குடியுங்கோ" என்று கூறினார். "ஓமோம்" என்று தேநீரை பருகினார் ஐயாத்துரையர்.

"அப்ப எப்ப வன்னியால வந்தீங்க" என்று புஸ்பம் கேட்டாள். ''நேற்றுப் பிள்ளை! அளவெட்டியில் சினேகிதன் வீட்டை நிண்டிட்டு இங்க வர என்று வெளிக்கிட ஆறுமுகம் வழியில வந்தான். அவனோட வந்திட்டன்'' என்றார். ஐயாத்துரையார் "ஆ......... அப்படியா எப்ப போறியள்" இக்கேள்வியைப் புஸ்பம் கேட்டதும் ஐயாத்துரையர். அதிர்ந்து போனார். கடைசிக் காலத்தில் ஆறலாம் என்று ஆவலாய் வந்தவருக்கு இவ்வார்த்தை அவருக்கு நெருப்பைக் கொட்டியது போல் இருந்தது. அவர் எண்ணங்கள் காற்றாடியாக சுழன்றது. 'இவள் ஏன் இப்படிக் கேட்டாள்? நான் வந்தது பிடிக்கேல்லையோ? இங்க தங்கினால் தங்களுக்கு சுமையாகி விடும் என்று நினைக்கிறாள் போல. நான் காசோடை தானே வந்தனான். இப்படிக் கேட்டவளுடன் காசைக்கொடுத்து என்னைப் பார்க்க வேணும் என்று கேட்டால் காசை வேண்டிப்போட்டு நடுத்தெருவில் தான் விடுவாள். நான் நிற்கும்போது ஆறுமுகத்துக்கு நடந்த பேச்சிலையே தெரியுது. ஆம்பிளைய மதிக்கிற மாதிரியும் தெரியேல்லை. குடும்பம் என்பது கோவில். அதில் தெய்வம் என்பது பெண். இவளே இப்படி நின்றா நான் என்ன செய்யிறது? வேண்டாம் இங்க இருக்கக்கூடாது. இப்பவே வெளிக்கிட வேண்டியது தான்' என நினைத்தவாறே "இல்ல பிள்ளை கோண்டாவில்லை எனக்கு தெரிஞ்ச ஆக்கள் இருக்கினம் நான் இப்ப அங்க தான் போறன் ஆ...... ஆறுமுகம் அப்ப என்ன வெளிக்கிடுவமோ" என்று ஐயாத்துரையர் கேட்டார். "ஓம் அண்ணை ஓ..." என்றவாறே ஆறுமுகம் பஸ்ராண்டுக்கு கொண்டு வந்து விட்டான். "அப்ப தம்பி நான் போட்டுவாறன்" என்று விடைபெற்றார் ஐயாத்துரையர். நேரமும் மாலை ஆறு மணி. இரவு ஆரம்பிக்கிறது. ஐயாத்துரைக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நேராக சிவன் கோவிலுக்குச் சென்றார். அந்த கோயில் வெளிமண்டபத்தில் அன்றைய இரவை கழித்தார்.

காலை விடிந்தது. யாரோ ஒருவர் கோவில் கும்பிட வந்தவர் ஐயாத்துரையையும் மூட்டை முடிச்சையும் கண்டு விட்டு அருகில் வந்து "என்ன மூட்டை முடிச்சோட. இஞ்சத்தே ஆள் மாதிரியும் தெரியல்லை" என்றார். "ஓம் தம்பி நான் வன்னியில் இருந்து வவுனியா முகாமிற்கு போய் அங்கு இருந்து நேற்று பொழுது படத்தான் வந்து சேர்ந்தன். பிறகு இரவாகி போட்டுது அது தான் இராத்திரி தங்கினன். இப்ப விடிஞ்சிட்டுது. எனி பாப்பம்'' என்றார் ஐயாத்துரையர். ''அப்ப எங்கயண போப்போறா? என்டார் வந்தவர். "படைத்தவன் அதற்கும் ஒரு வழி விடுவன் தானே" என்றார் பெருமூச்சு விட்டபடியே ஐயாத்துரையர். அந்நேரம் ஒரு வெள்ளை வான் வந்து நின்றது ஆலய முன்றலில்.

அந்த வானில் இருந்து நெற்றியில் பெரிய திருநூற்றுக்குறியுடன் ஒரு பெரியவர் வந்து இறங்கினார். சாரதி முன்னால் இறங்கி வந்து தேங்காயையும் கற்பூரத்தையும் அவருடைய கையில் கொடுத்தார். அந்த பெரியவரும் அதனைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக் கொண்டு தேங்காய் உடைக்கும் இடத்துக்கு வரலானார். அந்நேரத்தில் ஐயத்துரையர் "தம்பி இவர் யார்? திருநூற்றுப்பூச்சும் ஆளுமா வாறார்'' என்றார். "அது அப்பு. இவர் தான் வயோதிப மடத்தலைவர். காலம இஞ்ச கோயிலுக்கு வராம எங்கையும் செல்ல மாட்டார். ஒவ்வொரு நாளும் காலமையில இஞ்ச இவரைப் பார்க்கலாம்" என்றார். ஐயாத்துரையரும் ஏதோ எண்ணியவராக ''அவரோட ஒருக்க கதைக்கலாமோ" என்றார். "அதுக்கு என்ன அப்பு. நான் போய் சொல்லுறன்'' என்றவாறே அப்பெரியவரை நோக்கி அவன் சென்று கொண்டிருந்தான். அவரும் கற்பூரம் கொளுத்தி தேங்காய் உடைத்து கும்பிட்டு விட்டு வானில ஏறத் திரும்பினார். அந்நேரம் அவன் "உங்களோட அந்த அப்பு கதைக்க வேணுமாம்" என்றான். திரும்பிப் பார்த்தார். அவன் காட்டிய இடத்தில் ஐயாத்துரையர் தென்பட்டார். பெரியவர் அவர் அருகில் சென்று "வணக்கம் ஐயா என்னை நீங்கள் கூப்பிட்டனீங்களாம்" என்றார் அன்பாக. "ஓம் ஐயா வயோதிபர் மடத்தலைவர் என்று இந்தத் தம்பி சொல்லிச்சுது, எனக்கு யாரும் இல்லை. இந்த வன்னியில அலைஞ்சு உலைஞ்சு வவுனியா முகாமிற்கு வந்து நேற்றுத்தான் இங்க வந்த நான். இரவாகிப் போனதால இந்தக்கோயில்லை தான் தங்கினனான். அதுதான் என்னையும் உங்கடை வயோதிப மடத்துல சேர்த்தியள் எண்டால் கோடி புண்ணியம்'' என இரு கையையும் எடுத்து கும்பிட்டார் ஐயாத்துரையர். ''ஐயா! கடவுளைத்தான் இருகையையும் கூப்பிக் கும்பிட வேண்டும். மனிதரை அல்ல அவர்களுக்கு அன்புடன் தலை அசைத்தாலே போதும்" என்றார் பெரியவர். "சரி பிரச்சனை இல்லை, வாங்கோ அப்பு. இந்த வானிலையே போகலாம்'' என்றபடியே சாரதியைக் கொண்டு உரப்பையையும் கைப்பையையும் எடுத்து வானில் வைத்து ஐயாத்துரையையும் ஏற்றினார். வான் புறப்பட்டது வயோதிபர் மடத்தை நோக்கி.

அங்கு முன் விறாந்தையில் இருவர் நின்று கொண்டிருந்தனர். அவர்களை அழைத்த பெரியவர் "இந்த அப்புவை பக்குவமாக என்ரை அறைக்கு பக்கத்தில் இருக்கிற விறாந்தையில் விடுங்கோ நான் வரச்சுணங்கினாலும் அவருக்கு சாப்பாடு தண்ணி வெண்னி வடிவா கொடுங்கோ. எல்லாத்துக்கும் நான் போட்டு வாறன்" என்று அவர்களிடம் அவரையும் அவர் கொண்டு வந்தவற்றையும் ஒப்படைத்து விட்டு வானில் சென்று விட்டார்.

ஐயாத்துரையர் நல்ல நித்திரையில் ஆழ்ந்திருந்தார். நேரம் நாலுமணி தன்னை யாரோ தட்டுவதை உணர்ந்த ஐயாத்துரையர் தலையை நிமிர்த்திப் பார்த்தார். பார்த்தவர் பரபரப்புடன் "ஐயா" என்றவாறே எழுந்து உக்காந்து கொண்டார். ஆம் அவர் அருகில் பெரியவர் நின்று கொண்டு "அப்ப ஐயா வடிவா சாப்பிட்டியளோ" என்று கேட்டார். "ஓம்" என்ற ஐயாத்துரையரிடம், "சரி அப்ப, சொந்த இடம் எங்க? சொந்தக்காரர் பிள்ளை குட்டிகள் இல்லையோ? எனக் கேட்டார். பிள்ளை குட்டி என்றவுடன் ஐயாத்துரையின் கண்கள் குளம் ஆகின. ''அழாதேங்கோ ஐயா. அழாமல் சொல்லுங்கோ" என்றார் பெரியவர். ஐயாத்துரையும் தன் மனைவி பிள்ளைகள் இறந்தததையும் பின் வவுனியா முகாமில் இருந்து வந்து சேர்ந்ததையும் இங்கு தன்னைக் கைவிட்ட கதையையும் கூறி முடித்தார். "அப்படியா ஐயா! நீங்கள் இனி ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம்'' என்றவாறே "குமரன், இந்த ஐயாவை ஆறாவது அறையில் உள்ள இருவத்தி மூன்றாம் கட்டிலில் விடுங்கோ இண்டையில் இருந்து இவர் எங்களில் ஒருவர் சரிதானே" என்றார் பெரியவர். "ஓம் ஐயா" என்ற குமரன் "அப்பு வாங்கோ போவம்" என்றான். "தம்பி பொறு" என்ற ஐயாத்துரையர் பெரியவரைப் பார்த்து ''ஐயா இந்த உரப்பையில் இருக்கிறதும் உங்களுக்கு தான்" என்றபடியே அதை அவிழ்த்து அதனுள் கைவிட்டு உடுப்புகளுக்கடியில் இருந்த சிறிய உரப்பையை அவிழ்த்துப் பார்த்தார். காசுக்கட்டுகள் ஆயிரம் ரூபாய் தாள்கள் கட்டுக்கட்டாக அதை எடுத்துப் பார்த்தார். அவர் அருகில் நின்றவர்களின் கண்களும் வியப்பில் ஆழ்ந்தன. "என்ன ஐயா இவ்வளவு காசு" என்று ஆச்சரியத்துடன் கேட்டார் பெரியவர். காசு தனக்கு எங்கு எப்படி கிடைத்தது என்று ஐயாத்துரையர் விபரமாக கூறி முடித்தார். பெரியவர் எண்ணிப் பார்த்தார் ஒன்பது லட்சம். இதைப்பார்த்தவாறே "இப்ப இதை என்ன செய்யிறது ஐயா" என்றார் "இது என்ன கேள்வி ஐயா! உற்றார், உறவினர், நண்பர், மனிசி, பிள்ளை குட்டிகள் எவரும் இன்றி நின்ற என்னை ஒரு மனிசராக மதித்து இவ்வளவு தூரம்.... இருக்கும் நாள் வரை என்னை காப்பாற்ற நினைத்து இங்க கூட்டிக்கொண்டு வந்தது நீங்கள். இந்தக் காசு இந்த வயோதிபர் மடத்துக்கே பயன்படட்டும்" என்றார் கண்ணீர் மல்கியபடி. "சரி ஐயா அப்படியே செய்யிறம்". என்ற பெரியவர் பணத்துடன் தன் அறையை நோக்கி நடக்கலானார். ஐயாத்துரையாரும் ஆறாவதுஅறையில் உள்ள இருபத்துமூன்றாம் கட்டிலுக்கு கூட்டிச் சென்றவர்களுடன் கூட நடக்கலானார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்மாவட்டத்தில் மாறிவரும் சமூகச் சூழலும் HIV/AIDS ஐ எதிர் கொள்வதற்கான சவால்களும்

கே. எஸ். சிவஞானராஜா
கொக்குவில்

தனித்துவமான கல்வி, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் புனிதமாகப் பேணிய யாழ்ப்பாண மாவட்டம்; முன்னெப்போதும் இல்லாத வகையில் சகல நிலைகளிலும் நலிவடைகின்ற, உரிய இலக்குகளை எட்ட முடியாத ஒரு துர்ப்பாக்கியக் கட்டமைப்புக்குள் அகப்பட்ட பிராந்தியமாக, மீளமுடியாத மனக்கவலையை வருவிப்பதாகத் தினந்தினம் தன்னை உறுதிப்படுத்திய வண்ணம், ஆண்டவனது கிருபையாலும், முன்னோர் களது புண்ணியத்தினாலும் வாழ்ந்து வருகின்ற பேற்றினைப் பெற்றுள்ளது. இந்நிலையில் யாழ் மாவட்டம் எவ்வாறு மாற்றம் பெறுகிறது என்றும், எவ்வாறு சமூகம் மாற்றம் கொள்கிறது என்றும் இதன் மூலம் எத்தகு நோய்களுக்குள் வசப்படுகின்றது என்றும், எவ்வாறு அவற்றை உரியவாறு வெற்றி கொள்ளலாம் என்றும் இப்போது ஆராய்வோம். அசாதாரணயுகம் தணிந்து, சாதாரணயுகம் மலர்ந்து A9 பாதை, மீள திறந்து விடப்பட்ட நேரத்தில் இருந்து யாழ்ப்பாணம் மாறத் தொடங்கிற்றெனலாம்.

குறிப்பாக,

01. உல்லாச யாத்திரிகர்களின் வருகையும், உடைநடை பாவனையும்

02. ஆபாச திரைப்பட, விளம்பர, CDக்கள் மிகவும் இலகுவாக பரவலாக கட்டுப்பாடின்றி உள்நுழைய அனுமதிக்கப் பட்டமை

03. INTERNET இணையத்தளங்களிலிருந்து தகாதவற்றைப் பார்த்துப் பகிரக்கூடியதான சுதந்திரப் பாவனை

04. விதம் விதமான ரகம் ரகமான துல்லியமாகப் படமெடுக்கும் கமரா தொலைபேசிகள் (CAMERA HANDPHONES) தகுதி தராதரமின்றி மலிவான இலகுவான சந்தை வாய்ப்பு

05. வீடுகளிலிருந்து தொலைவில் மறைந்து சந்திக்கக்கூடிய வாய்ப்புகள் கல்வி, தொழில்கள், பிரயாணங்கள் குளிரக, குளிரூட்டிய விருந்து. உபசார, பிறந்தநாள் கொண்டாட்டங்களுக்கான வசதிகள் - வாய்ப்புகள்

06. இரவு நேரத்திருவிழா, கோஷ்டி, நடனங்கள், ஆன்மீகத்திற்கொவ்வாத உடைநடை பாவனை

07. கசிப்பு, மது வகைகள், போதையூட்டும், கஞ்சா, அபின், சிகரட், பீடா பாவனைகள் களவு, கொள்ளை, கப்பம், கொலை, கற்பழிப்பு போன்ற சந்தர்ப்பங்களில் தப்பித்துக்கொள்ள ஏமாற்றுகின்ற ஏமாறு கின்ற பயமுறுத்துகின்ற செயற்பா டுகள்.

08. பாலியல் தொந்தரவுகள் நடைபெற வாய்ப்பளிக்கும் நெருக்கமான, நெருக்கடி மிக்க பிரயாணங்கள்

09. இரவை அண்மித்த வகுப்புக்கள், நம்ப வைக்கும் இறக்குமதி சாத்திர சாத்திரிகள், போலிமருத்துவர்கள், வியாபாரிகள்

10. தன்னினச் சேர்க்கையாளர்களின் அதிகரிப்பு

11. மாதா, பிதா, குரு, தெய்வ வழிபாடு படிப்படியாகக் குறைந்து வருகின்ற பரிதாபம்.

12. தனியார் மருத்துவம், தனியார் கல்வி நிலையங்கள், தனியார் விடுதிகள், தனிமையான வீடுகள், தனிப்பட்ட நிறுவனங்கள் காட்டுகின்ற வசீகரமான அதிரடி மாற்றங்கள்.

13. வெளிநாட்டு முகவர்கள் என்று ஒரு சிலரால் கவரப்படும் ஏமாற்று நடவடிக்கைகள்

14. பலரையும் குறிப்பிடாத ஒரு சிலரை மட்டும் குறிப்பிடுவதான அரச தனியார் ஊழியர் களது பாலியல் சார்ந்த இடை யூறுகள்

15. பாடசாலை மாணவர்களைத் தவறான பாதையில் ஆசைகாட்டி மோசம் செய்யும் குடும்ப உறுப்பினர் நிலையிலுள்ள வயது வந்த அங்கத்தவர்கள்

16. சுயவிருப்பத்துடனும் சுயவிருப்பமின்றியும் வெளியுலகிற்குத் தெரியாத வண்ணம் ஆற்றப்படும் பலாத்காரங்கள்

17. அங்கீகாரமின்றி நடைபெறும் சமய, சம்பிரதாய தனிப்பட்ட இரவுவேளைக் கைங்கரியங்கள்

18. ஒரு சில அதம, அடாவடி அக்கிரம காரியங்கள்

19. இருபாலார்களுக்கும் வழங்கப்பட்டுவரும் பெற்றோர்களின் மோட்டார் வாகன அன்பளிப்புக்கள்

20. கல்விக் கூடங்களை அண்மித்த மதுபான, சூதாட்ட நிலையங்கள்

21. தரப்பட்ட கடமைகளைத் துஷ்பிரயோகம் செய்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. போலிக் கௌரவத்தினை சமூகமயமாக் குதலும் சமூகத்தை விரும்பியோ விரும்பாமலோ பாராட்ட வைக்கும் ஏது நிலைகள்


23. மாதா, பிதா, குரு, தெய்வ பீடங்களும் தத்தமது பாரம்பரிய தகைமைகளிலிருந்து மேலும் கூட்டிக் கொள்ளாமல் படிப்படியாகத் தம்மை பலப்படுத்திக் கொள்ளாத பலயீனமான குறைபாடு

மேற்போந்த இருபத்திமூன்று வகையான சமூகநிலை மாற்றங்களினால் யாழ் மாவட்டத்தில் குறிப்பாக இளைய தலை முறையைச் சேர்ந்த பலர் பாலியல் நாட்டங்களினால் அல்லது பாலியல் தொந்தரவு களினால் அல்லது பாலியல் சுரண்டல்களினால் அல்லது பாலியல் பலாத்காரங்களினால் அல்லது பாலியல் சார்ந்த வருமானங்களினால் அல்லது பாலியல் மசாஜ் நிலையங்களாக வெளிப்படையாக இல்லாமல் சமயோசிதமாக நடைபெறும் கடற்கரை மறைவிடங்களினால் HIV/AIDS தொற்று தெரிந்தோ தெரியாமலோ வீடுகளுக்குள் நுழைந்து விட்ட நிலையில் கேள்விக்குறியாகி யுள்ளனர். இந் நிலைக்கான பொறுப்பிற்கு நாம் யாவருமே பொறுப்பாளி களல்ல என்று மட்டும் கூறிவிடமுடியாது. இயற்கையை மெஞ் ஞானத்தை உண்மையை எப்போது நாம் தட்டிக்கழித்தோமோ அன்றிலிருந்து இவற்றை அனுபவிக்க வேண்டியவர்களாகியுள்ளோம்.

ஆம்! கடந்த வருடங்களில் மட்டும் யாழ் மாவட்டத்தில் ◆342 பெண்கள் இளவயதிலேயே தாயாகியுள்ளனர். (ஆதாரம்: உதயன் பத்திரிகை 29.10.2010- பக்கம்15 யாழ்போதனா வைத்திய சாலை வட்டாரத் தகவல்)

மேற்கூறப்பட்ட ◆342 பெண்களுடன் தொடர்பு கொண்ட ஆண்களின் நிலைபற்றிய விபரங்கள் கேள்விக்குறியாகவே இருக்கின்றன. அல்லா மலும் இளவயதில் இலகுவாக உழைப்பதற்கும் எளிதாகக் கெடுவதற்கும் வசதியாக கருத்தடைச் சாதனங்கள் அளவுக் கணக்கின்றி உள்வர அனுமதிக்கப்பட்டு எ்ளமையானது ஏற்கனவே கூறப்பட்ட விடயங்களுக்கு அப்பால் மேலுமொரு

**யாழ் மாவட்ட மாறிவரும் சூழலும், இளவயது கர்ப்பங்களும்**




சவாலாக அமைந்துள்ளது. இச்சாதனங்களை முறையாக உபயோகிக்க முடியாத சந்தர்ப்பங் களில் தெருவோரக் குழந்தைகளின் பிரசவங்கள் மரணங்கள் தரும் சமூகநோதல்கள் எதிர்வு கொள்ள முடியாத மௌன விமர்சனங்கள் சந்திக்கும் தோல்விகள்,

தப்பானவற்றையே தொடர்ந்து செய்யத் தூண்டும் தொலைக்காட்சிப் படங்கள், நாடகங்கள், விளம்பரங்கள் எனக் குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய சிலபல மீறிய காட்சிகள் பெண்ணியத்திற்கும் பெண்மையின் புனிதத் திற்கும் தாக்குதல் நடாத்துவதாக சீண்டப்படும் அல்லது தீண்டப்படும் சம்பவங்கள் நிறைவாக இங்கு சுட்டிக்காட்டப்பட்ட அத்தனை விடய தாற்பரியங்களும் சமூகம் மாற்றம் பெற்றதோட மையாமல் HIV/AIDS தொற்றுவ தற்கான பல சந்தர்ப்பங்களும் இழையோடியிருப்பதையும் ஊடகங்கள் வாயிலாக உறுதிப்படுத்தப்பட்டும் உள்ளது.

இந்நிலையில் அவசியமாகவும் அவசர மாகவும் மேற்படி சவால்களுக்கு முகங் கொடுக்கும் தடுப்பு விழிப்புணர்வுச் செயற் றிட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. பூர்வாங்கமாக

அ) பெற்றோர்களுக்கான விழிப்புணர்வுச் செயற்பாடு (கிராம சேவகர் பிரிவு தோறும்)

ஆ) தரம் 13,12,11,10 மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்கு (பாடசாலை மட்டம்)

இ) அதிபர், ஆசிரியர்களுக்கான கோட்டமட்ட, வலயமட்ட விழிப்புணர்வுக் கருத்தரங்கு

ஈ) பிரதேச மட்ட ஊழியர்களுக்கான விழிப்பு ணர்வுக் கருத்தரங்கு, தடுப்புமுறைகள்

உ) ஊடக, ஒலி, ஒளிபரப்பு சாதன படைப்புக்கள் மூலம் AIDS விழிப்புணர்வு

ஊ) மதத் தலைவர்களது பங்களிப்பும், பங்கேற்பும்

எ) பல்கலைக்கழக மட்ட விழிப்புணர்வும் தடுப்பு உதவிபெறுதல்

ஏ) சட்டங்களை உரியவாறு அமுல்படுத்த உதவிபுரிதல் ஆபாசக் காட்சிகளைத் தணிக்கை செய்தல்

ஐ) எச்சரிக்கைச் சுலோகங்களைக் காட்சிப் படுத்தல், தனியார் கல்வி நிலையங்களுக்கும் விஸ்தரித்தல்

ஒ) பிள்ளைகள் அவதானிப்பு மையங்களை நிறுவுதல்

போன்ற இன்னோரன்ன செயற்பாடுகள் மூலம் எதிர்கால சமூகம் எதிர்கொள்ளும் சவால்களை வென்றெடுக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது அன்பான வாடிக்கையாளர்களுக்கு....

புதிய கட்டிடத்திலே பிரமாண்டமான டிஜிற்றல் இயந்திரங்களுடன்

சிறப்பானதோர் சேவையினை வழங்குகின்ற

NET DIGITAL COLOUR LAB

E-mail :- netdigitallab@yahoo.com

V.T.K ,இல. 94, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

**PHONE: 0212240766** **MOBILE: 0774822709**

4R முதல் 12X36 அளவிலான பிரதியாக்கம் மற்றும்
மங்களகரமான நிகழ்வுகளுக்கு போட்டோ & வீடியோ படப்பிடிப்பு,
டிஜிற்றல், ஹரிஸ்மா அல்பம் தயாரித்தல்,
வீடியோ எடிட்டிங், மற்றும் கறுப்பு வெள்ளை படங்களை
வர்ணப்படங்களாக மாற்றுதல், படங்களை பெருப்பித்து
பிறேம் செய்தல் என்பனவற்றை சிறந்த முறையிலும்
செய்து தரப்படும்.



Design For Life

NET DIGITAL COLOUR LAB
PHONE: 0212240766 V.T.K No.94, K.K.S Road, Chunnakam

உங்கள் புகைப்படங்கள் மற்றும்
Pass Port Photo, N.I.C Photo, Visa Photos, Postal ID Photo
அனைத்தையும்



10 நிமிடத்தில்
உடனடியாக பெற்றுக்கொள்ளலாம்



E-mail :- netdigitallab@yahoo.com V.T.K Building இல. 94, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.

*Krishna Printers, Dr. Subramaniyam Road, Chunnakam.*

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org